1427

HISTORY of ENGLAND

1427
3609

AMBIKA BROTHERS, MYLAPORE, MADRAS.

HISTORY OF ENGLAND

IN TAMIL

BOOK II

For Form VI

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
15 DEC 1939
MADRAS

942
3503

BY

A. VENUGOPALAN, M.A., L. T.

Senior History Assistant,

C. C. C. High School, Perambur, Madras.

AMBIKA BROTHERS

PUBLISHERS :: MYLAPORE

Copyright] [Price As. 10.

First Edition 1939.

OFFICE OF THE ... OF BOOKS
1 5 DEC 1939
MADRAS

முகவுரை

இப்புத்தகம் ஆங்கிலேய தேச சரிதத்தின் இரண்டாம் பாகம். இஃது ஆறும் பாரத்திற்கு உரியது. முன் எழுதிய முதல் பாகத்தின் தொடர்ச்சியாக எழுதப்பட்டிருக்கிறது.

துரைத்தனத்தாரால் 1937-ல் புதிதாக வெளியிடப்பட்ட எஸ். எஸ். எல். ஸி. பாடதிட்டத்தை ஒட்டியும், 1938-ல் ஏற்படுத்திய மாறுதல்களைச் சேர்த்தும் மாணவர்களுக்குச் செவ்வனே புரியுமாறு இனிய எளிய தமிழ் நடையில் எழுதப்பட்டுள்ளது.

ஆங்கிலேயரது நாகரீகம், நடையுடை பாவனை, தைரியம், வீரச் செயல்கள், கைத்தொழில் முறைகள் முதலியவைத் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அரசர்கள், பிரபுக்கள், வீரர்கள் முதலியவர்களுடைய வாழ்க்கை வரலாறுகள் மாத்திரம் தேச சரித்திரம் ஆகாது. ஆகையால் பொது மக்களின் செயல்களும், இராஜீய விஷயங்களும், நாகரீகம் முதலிய அம்சங்களும் விவரமாகக் கூறப்பட்டுள்ளன. மாணவர்களுக்கு மிகுதியும் பயன்தரும்படி, ஆங்காங்கு தக்க பயிற்சிகளும், கால அட்டவணைகளும், வம்சாவளிகளும், தேசப்படங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. ஆங்கிலப் பதங்களுக்குச் சரியான தமிழ்ப் பதங்கள் கொண்ட ஒரு பெயர் அகராதியும் சேர்க்கப்பட்டிருக்கிறது. இந்த ஆங்கிலேய தேச சரிதம் உபாத்தியாயர்களுக்கும் மாணவர்களுக்கும் ஒருங்கே மிக்க உபயோகத்தைத் தரும் என்று நம்புகிறேன்.

சென்னை,
25-11-'39.

அ. வேணுகோபாலன்.

பொருளடக்கம்

அதிகாரம்		பக்கம்
அத்தியாயம் I		
பழைய முடி அரசு திரும்புதலும் பிரபலப் புரட்சியும்		
1. இரண்டாம் சார்லஸ்	...	1
2. இரண்டாம் ஜேம்ஸ்	...	15
3. வில்லியம் III	...	22
4. ஆன் இராணி	...	33
அத்தியாயம் II		
ஹனேவிரியன் வம்சம்		
1. ஜார்ஜ் I, ஜார்ஜ் II	...	47
2. ஜார்ஜ் III	...	71
3. ஜார்ஜ் IV	...	103
4. வில்லியம் IV	...	108
அத்தியாயம் III		
விக்டோரியா மகாராணியின் ஆட்சி	...	114
அத்தியாயம் IV		
இருபதாம் நூற்றுண்டு		
1. ஏழாம் எட்வர்ட்	...	142
2. ஐந்தாம் ஜார்ஜ்	...	151

படங்கள் ஜாப்தா

			பக்கம்
1.	இரண்டாம் சார்லஸ்	...	3
2.	ஆங்கில குடியேற்ற நாடுகள்	...	8
3.	தீ விபத்திற்குட்பட்ட செயின்ட் பால்ஸ் காதிட்ரல்	...	9
4.	இரண்டாம் ஜேம்ஸ்	...	15
5.	மூன்றாம் வில்லியம்	...	23
6.	மேரி	...	24
7.	பிரபலக் கிளர்ச்சி நிர்மாணம்	...	27
8.	ஆன் இராணி	...	34
9.	ஸ்பானிய அரசுரிமை யுத்தம்	...	38
10.	முதலாம் ஜார்ஜ்	...	48
11.	இரண்டாம் ஜார்ஜ்	...	49
12.	ஜாகபைட் கலகங்கள்	...	61
13.	ஏழாண்டுகள் போர்	...	67
14.	மூன்றாம் ஜார்ஜ்	...	73
15.	ஜார்ஜ் வாஷிங்டன்	...	76
16.	அமெரிக்கரின் சுதந்தரயுத்தம்	...	77
17.	இளைய பிட்	...	80
18.	நெப்போலியன்	...	90
19.	வெலிங்டன் டியூக்	...	92
20.	ஐரோப்பா 1815	...	94
21.	ராக்கெட்	...	97
22.	இங்கிலாந்து, தொழிற்கிளர்ச்சி	...	98
23.	ஜார்ஜ் IV	...	104
24.	வில்லியம் IV	...	109
25.	விக்டோரியா மகாராணி	...	117

26.	ஸர் ராபர்ட பீல்	...	119
27.	கிரிமியா யுத்தம்	...	123
28.	கிளாட்ஸ்டன்	...	126
29.	பீக்கன்ஸ் பீல்ட் பிரபு	...	130
30.	பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியம்	...	138
31.	ஏழாம் எட்வர்ட்	...	143
32.	ஐந்தாம் ஜார்ஜ்	...	153
33.	ஐரோப்பிய யுத்தத்திற்கு முன்	...	154
34.	ஐரோப்பிய யுத்தத்திற்குப் பின்	...	160
35.	எட்டாம் எட்வர்ட்	...	166
36.	ஆறும் ஜார்ஜ் மன்னர்	...	168

SYLLABUS

LESSONS 36.

Number of Lessons

1. The Restoration and the Revolution:— Charles I ; his home and foreign policy—Whigs and Tories—James II ; his arbitrary rule—The Revolution of 1688 and the Bill of Rights—William III ; his work at home and abroad—The Act of Settlement —War of the Spanish Succession—Queen Anne—Party Government—Union with Scotland. 8.

2. The Hanoverian Dynasty :—Reigns of George I and George II—The ministry of Walpole—Development of Cabinet Government—War of the Austrian Succession—William Pitt the Elder—The Seven Years' War—George III ; his system of Government—War of American Independence—The Industrial Rovolution—Pitt the Younger—Union with Ireland—The French Revolution—The Revolutionary and Napoleonic Wars—The Congress of Vienna—England after the Napoleonic Wars—The Reform of 1832. 10.

3. The Reign of Victoria :—Accession of the Queen—Chartism—Peel's Ministry—Repeal of the Corn-Laws—Palmerston's foreign policy—The Crimean War—Disraeli—Further Parliamentary Reform—Gladstone's first Ministry—The Treaty of Berlin—England and Egypt—Ireland and Home Rule—Colonial expansion—New colonial policy. 8.

4. The Reign of Edward VII, 1901-10—George V, 1910-36. The Union of South Africa—Tariff reform—The Fourth Reform Act—Irish Free State. 10

ஆங்கிலேய தேச சரித்திரம்

ஆங்கிலேய தேச சரிதம்

இரண்டாம் பாகம்

அத்தியாயம் I.

பழைய முடி அரசு திரும்புதலும் பிரபலப் புரட்சியும்.

சார்லஸ் II; அவ்வரசனின் உள்நாட்டு வெளிநாட்டு நோக்கம் - விக்கர்களும் டோரிக்களும் - ஜேம்ஸ் II, அம்மன்னனின் கொடுங்கோல் ஆட்சி - 1688 பிரபலப் புரட்சியும் உரிமைகள் சட்டமும் - வில்லியம் III; அவ்வரசனின் உள்நாட்டு வெளிநாட்டு வேலை - நிர்மாணச் சட்டம் - ஸ்பானிய அரசுரிமை யுத்தம் - ஆன் இராணி - கட்சி முறை ஆட்சி - ஸ்காட்லந்தோடு ஐக்கியம்.

அதிகாரம் 1.

இரண்டாம் சார்லஸ், 1660 - 85.

முக்கியஸ்தர்கள்:—

பரகான்ஸா காதரைன்

தளகர்த்தன் மான்க்.

கிளாரெண்டன் பிரபுவான எட்வர்ட் ஹைட்.

டான்பி பிரபு.

டைடஸ் ஓட்ஸ்.

ஷாப்டஸ்பரி பிரபு.

யார்க் ட்யூக் ஜேம்ஸ்.

முக்கியத் தேதிகள்:—

1660 இரண்டாவது சார்லஸ் அரசனாதல்.
1665 டச்சுக்காரர்களுடன் யுத்தம், பெரிய தொத்துநோய்.
1666 லண்டனின் பெரிய தீ விபத்து.
1670 டோவர் உடன்படிக்கை.
1673 பரிசோதனைச் சட்டம், கபாலின் வீழ்ச்சி.
1678 போப்பைத் திருப்பிக் கொண்டுவரச் சதியாலோசனை.
1679 ஹேபியஸ் கார்பஸ் சட்டம், ஜேம்ஸ்ட்யூக்கை அரசுரிமையிலிருந்து நீக்கச்சட்டம்.
1681 பென்ஸில் வேனியா ஸ்தாபிக்கப்படல்.
1685 சார்லஸ் II-ன் மரணம்.

1. இரண்டாவது சார்லஸ் அரசனுக்கப்பட்டு பழைய அரசாங்கமுறை திரும்புதல் (Restoration): உள்நாட்டு விவரங்கள்.

அரசன்:—இரண்டாவது சார்லஸ் 1660-ல் மாங்க் தளகர்த்தனால் இங்கிலாந்தில் வரவேற்கப்பட்டு தன்னுடைய மகுடத்தைத் திரும்பவும் பெற்றான். அவன் ஹாலந்தில் இருந்தபொழுது விடுத்த பிரேடா வெளியீட்டின்படி தான் நடந்துகொள்ளுவதாக ஒப்புக்கொண்டான். அதில் அவன் ஒரு பொதுமன்னிப்புக் கொடுப்பதாகவும், பார்லிமெண்டுடன் கலந்துகொண்ட பின்பே முக்கிய விஷயங்களைச் செய்வதாகவும், மத ஆசாரங்களில் பொதுஜனங்களுக்குச் சுயேச்சை அளிப்பதாகவும் உறுதி கூறியிருந்தான். தற்போதையதாக ஏற்படுத்தப்பட்ட கன்வென்ஷன் (Convention) பார்லிமெண்டு பிரேடா உடன்படிக்கையின் நிபந்தனைகளை நிறைவேற்ற ஏற்பாடுகள் செய்தது. முதலாவது சார்லசுடன் சண்டை செய்தவர்கள் மன்னிக்கப்பட்டாலும், அரசனைக் கொல்லுவதில் ஈடுபட்டவர்கள்

தண்டிக்கப்பட்டார்கள். மாங்கினுடைய சேனை சம்பளபாக்கி களைக் கொடுக்கப்பட்டுப் பின்பு கலைக்கப்பட்டது. ஆனால் ஐயாயிரம் வீரர்கள் கொண்ட படை ஒன்றுமட்டும் இராஜ்ஜி



படம் 1. இரண்டாம் சார்லஸ்

யத்தின் ஸ்திரமான சேனையாக நிறுத்தப்பட்டது. குடி யரசு காலத்தில் நடத்தப்பட்ட விஷயங்கள் தவறானவை என்று தள்ளப்பட்டன. ஆனால் நீடித்த பார்லிமெண்டு ஏற்படுத்திய நல்ல சட்டங்கள் மட்டும் ஒப்புக்கொள்ளப்

பட்டன. குடியரசு காலத்தில் ஏற்பட்ட சில உபயோக முள்ள சட்டங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு அமுலுக்குக் கொண்டுவரப்பட்டன. அரசன் ஒவ்வொரு வருஷமும் தேசிய வருமானத்திலிருந்து பன்னிரண்டு லக்ஷம் பவுன் பெறவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. இவ்வாறு அரசன் பழைய அதிகாரத்தைத் திரும்பவும் பெற்றுன்.

பார்லிமேண்டு:—பார்லிமெண்டும் முன்னிருந்தவாறு அமைக்கப் பெற்றது. அதில் பிரபுக்கள் அடங்கிய சபை யும் பொது ஜனங்களின் பிரதிநிதிகள் அடங்கிய காமன்ஸ் சபையும் சேர்ந்திருந்தது. இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, ஜயர் லாந்து ஆகிய பிரிட்டிஷ் தீவுகளுக்குக் கிராம்வெல் காலத்தில் ஏற்பட்ட ஐக்கியப் பார்லிமெண்டு தள்ளப்பட்டு ஒவ்வொரு பிரிவிற்கும் தனித்தனியான பார்லிமெண்டு ஏற்படுத்தப்பட் டது. அது வலிவற்றிருந்ததால், அதனுல் அரசனுடைய பலம் பெருகுவதற்கு இடம் உண்டாயிற்று. 1661-ல் கூட் டப்பட்ட கவாலியர் பார்லிமேண்டு அரசனுடைய ஆதிக்யத் திற்கு உதவியாக இருந்ததால் அது அவ்வாறு பெயரிடப் பட்டது. அதைப் பதினேழு வருஷங்கள் வரையிலும் கலைக்காமல் சார்லஸ் தன்னிஷ்டம்போல் அரசாண்டான்.

மதவிஷயம்:—மத விஷயத்தில் பழைய ஆங்கிளிக்கன் முறை திரும்பிவந்தது. புது மதஸ்தர்களுக்குச் சுயேச் சை கொடுப்பதாக அளித்த வாக்கிலிருந்து அரசன் மாறி நடந்தான். ப்யூரிடன் என்று சொல்லப்பட்ட சுத்த மத வாதிகள் கஷ்ட நிலைமையை அடைந்தார்கள். கிளாரண் டன் ட்யூக்கான எட்வர்ட் ஹைட் இப்பொழுது அரசனுக்கு மந்திரியானுன். அவன் பார்லிமெண்டு மூலமாகச் சுத்த மதவாதிகளை அடக்கப் பல சட்டங்களை ஏற்படுத்தி னுன். இச்சட்டங்கள் அடங்கிய கோர்வைக்கு கிளாரண்டன்கோட் (Clarendon Code) என்று பெயர்.

அதில் ஆங்கிளிக்கர்களே நகர சபைகளின் அங்கத்தினர்களாக இருக்க வேண்டுமென்றும், ஆங்கில ஜபப்புத்தகத்தை எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும், ஐந்து பெயர்களுக்குமேல் கூட்டம் கூடி எவரும் தனிப்படையாக மத ஆராதனைகள் செய்யக் கூடாது என்றும், ஒவ்வொரு பட்டணத்தின் ஐந்து மைல் எல்லைக்குள் சுத்த மத குருமார்கள் பள்ளிக்கூடங்கள் வைத்து நடத்தக் கூடாதென்றும், இன்னும் இதுபோன்ற பல கடினமான விஷயங்களும் கண்டிருந்தன. இவ்விதச் சட்டங்களால் சுத்தமதவாளர்களாகிய எதிர்ப்பாளர்கள் (Puritan Dissenters) கஷ்டப்படுத்தப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டனர். அவர்களுள் சிறந்தவர் ஜான் பனியன் (John Bunyan) என்னும் பெரியார். அவர் பெட்போர்ட் சிறையில் பன்னிரண்டு வருஷங்கள் அடைக்கப்பட்டிருந்தார். அங்கேதான் அவர் உலகப் பிரசித்திப்பெற்ற, தேசாந்திரியின் யாத்திரை (Pilgrim's Progress) என்னும் அரியபுத்தகத்தை எழுதினார். ஆங்கிளிக்கன் குருமார்களோ அரசன் தெய்வஉரிமையை உடையவன் என்று பிரசங்கித்தனர். இவ்வாறாகப் பொது ஜனங்களிடத்தில் இராஜ விசுவாசம் ஏற்படத்தொடங்கியது. இதனால் சார்லஸ் குதூகலமாகவும் இஷ்டப்படியும் நடந்துகொள்ளச் சௌகரியமாயிற்று. அவனைச் சந்துஷ்டியான அரசன் (Merry Monarch) என்று சொல்லுவதுண்டு. இவ்வாறாகக் குடியரசுபோய் முடிஅரசு வந்தது. அரசனுக்கு முன்னிருந்த ஆதிக்யமும், பழைய பார்லிமெண்டுமுறையும், ஆங்கிளிக்கன் மத ஏற்பாடும் திரும்பவும் இங்கிலாந்தில் ஏற்படுத்தப்பட்டன.

ஸ்காட்லாந்து:—ஸ்காட்லாந்தில் இரண்டாவது சார்லஸின் அரசாட்சி முறையை ஜனங்கள் குதூகலத்துடன் ஆதரித்தார்கள். இருந்தபோதிலும் சீக்கிரத்தில் அவர்

களுக்கு அதிருப்தி ஏற்பட்டது. ஏனென்ருல் அவர்கள் தங்கள் சுத்த மதமாகிய பிரஸ்பிடிரியன் (Presbyterian) வழிக்கு மாருன ஆங்கிளிக்கன் மதம் திரும்பியதை விரும்பவில்லை. ஆதலால் ஆங்கிளிக்கன் பிஷப்புகளுக்கு எதிராக அவர்கள் அடிக்கடி கிளம்பினர்கள்.

ஐர்லாந்து:—ஐர்லாந்திலும் ஆங்கிளிக்கன் ஆதிக்யம் ஏற்படுத்தப்பட்டது. அங்கு கத்தோலிக்கர்கள் அதிகமாதலால் அவர்கள் அதை எதிர்த்தனர். அரசனை ஆதரிக்கும் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு, கிராம்வெல் காலத்தில் பியூரிட்டன்களுக்கு கொடுக்கப்பட்ட நிலங்கள் திரும்பவும் பரிமுதல் செய்யப்பட்டுக் கொடுக்கப்பட்டன. ஐர்லாந்து சுதேசிக் கத்தோலிக்கர்கள் தாங்கள் பரிகொடுத்த நிலங்களைத் திரும்பப்பெறவில்லை. ஆனல் அவர்கள் மதவிஷயத்தில் முன்னிருந்ததைவிட அதிகச் சுயேச்சையைப் பெற்ருர்கள். இவ்வாருக இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, ஐர்லாந்து அடங்கிய பிரிடிஷ் தீவுகள் முழுதிலும் பழைய முடி அரசு ஆட்சிமுறை திரும்பவும் ஏற்படுத்தப்பட்டது. (Restoration).

2. வெளி நாட்டு விவரங்கள்.

பிரான்ஸ்:—இரண்டாவது சார்லஸ், க்ராம்வெல் பிரான்சுடன் செய்துகொண்ட நேசத்தை வலுப்படுத்திக் கொண்டான். இதற்குக்காரணம் அவன் உண்மையில் மனதிற்குள் கத்தோலிக் மதஸ்தனுக இருந்ததேயாகும். அவன் 1662-ல் டன்கர்க்கை பிரன்சுக்காரர்களுக்கு விற்ருன்.

போர்ச்சுகல்:—அவன், பிரான்சுடன் நட்பாகவும் ஸ்பெயினுடன் விரோதமாகவும் இருந்த போர்ச்சுகல் தேசத்து அரசனின் சகோதரியான பரகான்ஸா காதரைனை மணம் செய்துகொண்டான். காதரைன் தனக்குச் சீதன

மார்கக் கிடைத்த ஜிப்ரால்டருக்கு எதிரில் ஆப்பிரிக்கா கடற் கரையிலுள்ள டான்ஜியர் என்னும் இடத்தையும், இந்தியாவிலுள்ள பம்பாய்த் தீவையும் சார்லசுக்குக் கொண்டு வந்தாள். அரசன் பம்பாயைக் கிழக்கு இந்தியா கம் பெனிக்குக் கொடுத்துவிட்டான்.

ஹாலந்து:—இங்கிலாந்திற்கும் ஹாலந்திற்கும் வியாபார விஷயமாக யுத்தம் ஏற்பட்டது. சார்லஸ் நாவா சட்டத்தைத் திரும்பவும் ஏற்படுத்தினன். அது டச்சுக்காரர்களுக்குக் கோபத்தை உண்டுபண்ணியது. இரண்டாவது டச்சுயுத்தம் 1665 லிருந்து 1667 வரையில் நடந்தது. டச்சு கப்பற்படை தேம்ஸ் நதிக்குள் சென்று ஆங்கிலேயக் கப்பல்களை நெருப்பிட்டுக் கொளுத்திவிட்டது. இந்த யுத்தம் பிரேடா சமாதானத்தால் முடிவிற்கு வந்தது. ஆங்கிலேயர்களுக்கு டச்சுக்காரர் குடியேறிய புது ஆம்ஸ்டர்டாம் கிடைத்தது. அது சார்லஸின் சகோதரனுகிய யார்க் ட்யூக் ஜேம்ஸிற்குக் கொடுக்கப்பட்டதால் அதற்கு நியூயார்க் (New York) என்று பெயரிடப்பட்டது.

குடியேற்ற நாடுகள் :—இரண்டாவது சார்லசின் அரசாட்சியில் வட அமெரிக்காவில் ஆங்கிலக் குடியேற்ற நாடுகள் விருத்தியடைந்தன. 1663ல் கரோலினு ஸ்தாபிக்கப்பட்டது. இதன் தலைநகரம் சார்லஸ் டவுன் என்பது அரசனின் பெயரையே ஒட்டிவைக்கப்பட்டது. நியூ யார்க் எவ்வாறு ஆங்கிலேயருக்குக் கிடைத்ததென்று முன்னமேயே தெரிந்துகொண்டோம். இது ஒரு குடியேற்றப் பிரதேசமாயிற்று.1667-ல் நியூ ஜெர்ஸி இங்கிலாந்திலுள்ள ஜெர்ஸி என்கிற இடத்திலிருந்து வந்தவர்களால் ஸ்தாபிக்கப்பட்டது. 1681-ல் வில்லியம் பென் என்பவர் பென்சில் வேனியாவில் குடியேறி அதற்கு அப்பெயரைக் கொடுத்தார். அதன் தலை நகர் பிலடல்பியா அல்லது சகோதர



ஆங்கில குடியேற்ற நாடுகள். 1685.

படம் 2.

அன்புள்ள நகரம் என்பது. இவ்வாருக இங்கிலாந்தின் குடியேற்ற நாடுகள் விருத்தி அடைந்தன. பதினேழாவது நூற்ருண்டில் கடல் ஆதிக்யம், குடியேற்றம், முதலிய வற்றில் முன்னேற்றம் அடைந்திருந்த ஹாலந்து இரண்டா வது பதவியைப் பெறலாயிற்று. இங்கிலாந்தின் விருத்தி யைக் கண்டு பிரான்சு பொருமை கொண்டு தன் வலுத்த அரசனுகிய பதினுன்காவது லூயியின்கீழ் முன்னேற்ற மடையவேண்டிய முயற்சிகளை எடுத்துக்கொண்டது.

3. இரண்டாவது சார்லஸின் ஆட்சிமுறை: மந்திரிகள்.

கிளாரேண்டன் :—இரண்டாவது சார்லஸ் மிகவும் தந்திரசாலி. அவன் தன் அதிகாரத்தை விருத்தி செய்து கொள்ள வேண்டுமென்று ஆவல்கொண்டிருந்தாலும், ஜனங்களை எதிர்த்துக் கொள்ளாமல் நடந்துகொண்டான். ஜனங்கள் சில சமயங்களில் அவனிடத்தில் அதிருப்தி கொண்ட காலத்தில் அவனுடைய மந்திரிகளே அவர்க ளுடைய கோபத்திற்குப் பாத்திரமாக்கப் பட்டார்கள். அவ னுக்கு முதலில் மந்திரியாக இருந்தவன் கிளாரேண்டன் பிரபு. அவன் அரசனுடைய ஆதிக்யத்தை வலுப்படுத்தி ஞன் என்பதையும், சுத்த மதஸ்தர்களைக் கொடுமையாக நடத்தினுன் என்பதையும் முன்னமே அறிந்து கொண் டோம். அவன் காலத்தில்தான் டச்சுக்காரர்கள் ஆங்கிலக் கப்பல்களை எரித்தார்கள். 1665-ல் லண்டனில் ஒரு பெரிய தோத்துநோய் பரவி ஆயிரக்கணக்கான ஜனங்களைக் கொன் றது. அடுத்த ஆண்டில் அந்நகர் ஒரு பெரிய தீவிபத்திற் குட்பட்டது. அரசாங்கத்தின்மீது ஜனங்கள் அதிருப்தி அடைந்தார்கள். அரசனேவெனில் கிளாரெண்டன்தான் இதற்குக் காரணமென்று 1667-ல் அவனை மந்திரிப்பதவியி லிருந்து நீக்கினுன்.

கபால் :—அரசன் கிளாரண்டன் ஸ்தானத்தில் ஐந்து பெயர்கள் கொண்ட கபால்(Cabal)என்கிற மந்திரி சபையை ஏற்படுத்தினன்.மந்திரிகள் பெயர்களின் முதல் எழுத்துகள் அடங்கிய அப்பெயர் அந்த சபைக்கு இடப்பட்டது.மந்திரிகளுக்குள் ஒற்றுமை இல்லாமையை அரசன் தன் சௌகரியத்திற்கு உபயோகப்படுத்திக்கொண்டான். அவன் கி. பி.



படம் 3. தீவிபத்திற்குட்பட்ட செயின்ட் பால்ஸ் காதிட்ரல்

1670ல் பிரான்சுதேசத்து அரசன் பதினாலாவதுலூயியோடு ஓர் இரகசிய உடன்படிக்கையைச் செய்துகொண்டான். அதில் பிரெஞ்சு அரசன் ஆங்கிலக் கத்தோலிக்கர்களின் முன்னேற்றத்திற்காக சார்லசுக்குப் பெருந்தொகை பணம் கொடுப்பதாகவும், சார்லஸ் டச்சுக்காரருக்கு விரோதமாகப் பிரான்சிற்கு உதவி செய்வதாகவும் காணப்பட்டிருந்தது.

கி. பி. 1672-ல் சார்லஸ் எல்லா மதத்தினர்க்கும் சுயேச்சை கொடுப்பதாக ஒரு விளம்பரத்தை (Declaration of Indulgence) விடுத்தான். ஆனால் பார்லிமெண்டு இது அவன் கத்தோலிக்கர்க்கு உதவி செய்ய நினைத்த ஒரு சூழ்ச்சி என்பதை அறிந்து, கி.பி. 1673-ல் 'பரிசோதனைச் சட்டம்' (Test Act) ஒன்றை ஏற்படுத்தியது. அதன்படி ஆங்கிளிக்கன் மதத்தை ஏற்றுக்கொள்ளுவதாக எல்லா உத்தியோகஸ்தர்களும் உறுதிமொழி கூறவேண்டியதாயிற்று. கபாலில் ஆங்கிளிக்கன் மதத்தினரல்லாத கத்தோலிக்கர்களும் சுத்த மதஸ்தர்களும் கலந்துஇருந்ததால் அந்த மந்திரிசபை கலைக்கப்பட்டது. கத்தோலிக்கனான யார்க் ட்யூக் ஜேம்சும் தன் கப்பற்படைத் தலைமைப் பதவியை இராஜிநாமா கொடுத்தான்.

டான்பி:—அரசன், கபால் வகித்த மந்திரிஸ்தானத்தில், டான்பி பிரபுவை நியமித்தான். டான்பி ஆங்கிளிக்கன் மதத்தைச் சார்ந்தவன். அவன் பிரான்சுடன் ஏற்பட்ட சிநேகத்தை ஒழித்தான். கபால் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட மூன்றாவது டச்சு யுத்தத்தை நிறுத்தி ஹாலந்துடன் சமாதானம் செய்துகொண்டான். அந்த தேசத்தின் தலைவனான ஆரஞ்சு வில்லியத்திற்கு இளவரசி யார்க் மேரியை மணம்செய்து கொடுக்கப்பட்டதால் இரண்டு தேசங்களுக்கும் சிநேகம் ஏற்பட்டது. அரசனுக்கு டான்பியின் செயல்கள் பிடிக்கவில்லை. ஆதலால், அவன் 1678-ல் அவனை மந்திரிப் பதவியிலிருந்து நீக்கி, அதிகாரமனைத்தையும் தன் கையிலேயே வைத்துக்கொண்டான்.

4. விக்கர்களும் டோரிக்களும்.

போபிஷ் சூழ்ச்சி:—(Popish Plot) இது போப்பின் அதிகாரத்தைத் திரும்பவும் கொண்டு வருவதற்காக 1678-ல் ஏற்பட்ட சூழ்ச்சி. இவ்வாறான சூழ்ச்சி இருப்பதாக டைடஸ்

ஓட்ஸ் என்பவன் ஒரு கிளர்ச்சியை ஏற்படுத்திவிட்டான். அவன் மிகவும் கெட்ட நடத்தை உள்ளவன். அவன் முதலில் ஆங்கிளிக்கன் மதத்திலிருந்தான். அதிலிருந்து நீக்கப்பட்டு வெளிநாட்டிற்குச் சென்று கத்தோலிக் மதத்தைத் தழுவினுன். அவன் அதிலிருந்தும் துரத்தப்பட்டு எதிர்ப்புக்காரர்கள் கட்சியைச் சேர்ந்து கத்தோலிக்கர்கள் தங்கள் மதத்தைத் திரும்பவும் ஸ்தாபிப்பதற்குச் சூழ்ச்சிகளைச்செய்வதாக ஒரு வதந்தியைக் கிளப்பினுன். இரண்டாம் சார்லஸின் நடத்தையிலிருந்து ஜனங்கள் அது உண்மையாக இருக்கக்கூடும் என்று நம்பினுர்கள். நாடு முழுவதும் ஒரு விதப் பரபரப்பு ஏற்பட்டது. கத்தோலிக்கர்கள் அல்ப காரணங்களினுல் நீதி சபைகளுக்குக் கொண்டுவரப்பட்டு தண்டிக்கப்பட்டார்கள். இது டான்பியின் வீழ்ச்சிக்கு ஒரு காரணமாயிற்று. யார்க் ட்யூக் ஜேம்ஸ் கத்தோலிக்கன் ஆதலால் அவனைப் பட்ட உரிமையிலிருந்து நீக்குவதற்கு ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டது.

ஹேபியஸ் கார்பஸ் சட்டம்:-(Habeas Corpus Act) 1679. இந்த சட்டத்தின்படி அரசன் தன் இஷ்டம்போல் குடிகளைச் சிறையில் போடமுடியாது. அப்படிச் சிறையில் போடப்பட்டவர்களின் உறவினர் அவர்களுக்கு நியாயம் வழங்கும்படி உடனே கேட்டுக்கொள்ளலாம். இந்த சட்டத்தைப் பார்லிமெண்டில் நிறைவேற்றியவர் ஷாப்ட்ஸ் பரிபிரபு.

ஒதுக்குச் சட்டம்:—(Exclusion Bill) 1679. இது கத்தோலிக் கொள்கையைப் பின்பற்றிய யார்க ட்யூக் ஜேம்ஸைப் பட்ட உரிமையிலிருந்து நீக்குவதற்காக ஷாப்ட்ஸ்பரியால் கொண்டுவரப்பட்டது. ஆனுல் மும்முறை பார்லிமெண்டில் கொண்டுவரப்பட்டும் இந்தச் சட்டம் நிறைவேறவில்லை.

விக்கர்களும் டோரிக்களும்:—ஓதுக்குச் சட்டத்தைப் பற்றி விவாதம் ஏற்படும்பொழுது, விக்கர்கள், டோரிக்கள் என்ற கட்சியினர்கள் கிளம்பினர்கள். விக்கர்கள் ஷாப்ட்ஸ் பரியின் தலைமையின்கீழ் ஓதுக்குச் சட்டம் நிறைவேறுவதற்குப் பார்லிமெண்டு சபை கூட்டப்பட வேண்டும் என்று அரசனுக்கு மனுச் செய்துகொண்டார்கள். அதனுல் அவர்களுக்கு மனுச் செய்பவர்கள் (Petitioners) என்று பெயர் வந்தது. டோரிக்கள் அதை எதிர்த்து வெறுத்தார்கள். அதனுல் அவர்களுக்கு வெறுப்பவர்கள் (Abhorrers) என்றும் பெயரிடப்பட்டது. இவ்விரு கட்சியினர்களும் நிரந்தரமாக விக், டோரி என்ற பெயருடன் விளங்கலானுர்கள். விக்கர்கள் பார்லிமெண்டின் ஆதிக்யத்தையும் சுத்தமதத்தையும் ஆதரித்தார்கள். டோரிக்கள் அரசனின் அதிகாரத்தையும் ஆங்கிளிக்கன் மதத்தையும் விரும்பினர்கள். முடிவாக 1681-ல் விக்கர்கள் தாங்கள் கொண்டுவந்த ஓதுக்குச் சட்டம்பார்லிமெண்டால் நிராகரிக்கப்பட்டுத் தோல்வி அடைந்தனர். தோல்வி அடைந்த அவர்கள் அரசனுக்கு எதிராக 1682-ல் ரை நிலயச் சூழ்ச்சி (Rye House Plot)யைச் செய்து, கண்டுபிடிக்கப்பட்டு தண்டிக்கப்பட்டார்கள்.

அரசனின் ஆதிக்யம்:—இவ்வாருக விக்கர்களுடைய செல்வாக்குக் குன்றியது. அரசனின் ஆதிக்யம் விருத்தி அடைவதற்கு இடமாயிற்று. அவன் பார்லிமெண்டைக் கலைத்துத் தன்னிஷ்டப்படி தன் அரசாட்சி முடிவுவரையில் ஆண்டான். 1685-ல் அவன் மரித்தான். அவன்மரிக்கு முன் கத்தோலிக் மதகுருவைக் கூப்பிட்டுத் தான் அந்த மதத்தைச் சார்ந்தவனென்று கூறினுன். ஸ்டூவர்ட்டு அரசர்களுக்குள் மிகவும் சாமர்த்தியமுள்ள மன்னன் இவனே ஆவன்.

பயிற்சிகள்.

1. இரண்டாம் சார்லஸ் எவ்வாறு அரசனுக்கப்பட்டான்?
2. மாங்க் தளகர்த்தனைப்பற்றி ஒரு குறிப்பு எழுதுக.
3. கிளாரண்டன் கோட் என்றால் என்ன ?
4. இரண்டாம் சார்லஸைச் 'சந்துஷ்டியான அரசன்' என்று சொல்லுவானேன் ?
5. ஜான் பனியன் என்பவர் யார்? அவர் எழுதிய புத்தகத்தின் பெயர் என்ன ?
6. இரண்டாம் சார்லஸ் யாரை மணந்துகொண்டான் ? அதனால் உண்டான பலன்களைக் குறிப்பிடுக.
7. இங்கிலாந்து ஹாலந்துடன் பதினேழாவது நூற்றாண்டில் என்ன யுத்தங்கள் ஏன் செய்தது ?
8. இரண்டாம் சார்லஸ் காலத்தில் வட அமெரிக்காவில் உண்டான ஆங்கிலக் குடியேற்றநாடுகளை ஒரு படம் வரைந்து காட்டுக. அதில் அவ்வரசனுக்கு முன் ஏற்பட்டவைகளையும் காண்பிக்க.
9. கிளாரண்டன் பிரபுவின் வீழ்ச்சிக்குக் காரணங்கள் யாவை ?
10. கபால் மந்திரி சபை ஏன், எப்பொழுது கலைக்கப்பட்டது ?
11. டான்பி செய்த விஷயங்கள் என்ன ?
12. போப்பிஷ் சூழ்ச்சி என்பது யாது ?
13. ஹேபியஸ் கார்பஸ் சட்டத்தில் கண்ட நல்ல விஷயத்தைக் குறிப்பிடுக.
14. ஒதுக்குச் சட்டம் எதற்காக, எப்பொழுது கொண்டு வரப்பட்டது ?
15. விக், டோரிக் கட்சிகள் எவ்வாறு ஆரம்பமாயின ?
16. ரை நிலயச் சூழ்ச்சி யாரால், ஏன் செய்யப்பட்டது?
17. முடிவில் இரண்டாம் சார்லஸ் எவ்வாறு அவன் இஷ்டம்போல் ஆண்டான் ?

அதிகாரம் 2.

இரண்டாம் ஜேம்ஸ், 1685—88:—கொடுங்கோல்ஆட்சி.

முக்கியஸ்தர்கள்:—

மான்மத் ட்யூக் ஜேம்ஸ்.
நியாயாதிபதி ஜெப்ரிஸ்.
டிர்கானல் பிரபு.
ஆரஞ்சு வில்லியம்.

முக்கியத் தேதிகள்:—

1685 இரண்டாம் ஜேம்ஸ் அரசனுதல்.
மான்மத் கிளர்ச்சி.
1688 மதத்தரிப்பு வெளியீடு.
ஜேம்ஸின் வீழ்ச்சி.

இரண்டாம் ஜேம்ஸின் குணம்:—இரண்டாம் சார்ல சுக்குச் சந்ததி யில்லாததால் அவன் சகோதரனுன யார்க் ட்யூக் ஜேம்ஸ், அவனுக்குப் பின் பட்டத்திற்கு வந்தான். அவனைப் பட்டத்திலிருந்து விலக்குவதற்காகக் கொண்டு வரப்பட்ட ஒதுக்குச் சட்டம் நிறைவேருததை முன்னமே கண்டோம். அவன் நியாயமான அரசனென்று எல்லோ ராலும் அங்கீகரிக்கப்பட்டான். ஆனுல் தன்னுடைய பட்டத்தை மூன்று வருஷங்களுக்குள் இழந்தான். அவ னுக்கு அவன் சகோதரனிடத்திலிருந்த திறமை இல்லை. அவன் கத்தோலிக் மதத்தில் பற்றுதல் உள்ளவன். பிடி வாதம் நிறைந்து தான் கொண்ட வழியே சரி என்று நினைத்து நடந்து வந்தான். அவன் ஆட்சிக்கு வரும் பொழுது ஆங்கிலக் கோயில் வழியை மாற்றுவதில்லை என்று உறுதிமொழி கொடுத்தும், கத்தோலிக் மதம் விருத்திக்கு வரவேண்டிய முயற்சிகளை எடுத்துக்கொண் டான். ஆகையால் அவன் சீக்கிரத்தில் பொதுஜன விரோதி

யானுன். அவன் 1685-ல் பார்லிமெண்டைக் கூட்டினுன். அது அவனுக்குச் சுமார் இரண்டு கோடி பவுன் வருமானத்தை ஒவ்வொரு வருஷமும் தன் ஆயுள் பரியந்தம் பெற்றுக்கொள்ளக்கூடிய சுதந்திரத்தை அளித்தது. இந்தப் பெருந்தொகை அவன் பார்லிமெண்டைக் கூட்டாமல்



படம் 4. இரண்டாம் ஜேம்ஸ்

தன் வழியே நடந்துகொள்ளும்படியான சக்தியை அவனுக்குக் கொடுத்தது.

மான்மத் ட்யூக்கின் கலகம்:—மான்மத் ட்யூக்கான ஜேம்ஸ், இரண்டாம் சார்ல்ஸின் வைப்பாட்டி மகன். ஆனுல் அவன் அவனுடைய நியாயமான குமாரனென்றும் தனக்குத்தான் பட்டம் கிடைக்க வேண்டுமென்றும் பாத்தியதையைக் கொண்டாடினுன். அவன், எதிர்ப்பாளி

கள் மதத்தைச் சார்ந்தவனுதலால், புதிய மதஸ்தர்களும், விக்கர்களும் அவனை ஆதரித்தார்கள். 1685-ல் அவன் இங்கிலாந்தின் தென் மேற்கிலுள்ள டார்செட்ஷயரில் வந்து இறங்கினுன். அங்கே இருந்த சுத்த மதஸ்தர்களான குடியானவர்களும், சுரங்கவேலே செய்பவர்களும் அவனுடன் சேர்ந்துகொண்டு அரசனுக்கு எதிராகக் கலகம் செய்தார்கள். அவன் அவர்களுடன் சாமர்செட் வழியாகச் சென்ருன். அரசனுடைய சேனே அவனேப் பின்தொடர்ந்து செட்ஜிமூர் என்னும் இடத்தில் சண்டை செய்து வெற்றி பெற்றது. ஆங்கில பூமியில் கடைசியாக நடந்த சண்டை இதுவே. தோல்வியடைந்த மான்மத் ஒரு சாக்கடையில் ஒளிந்துகொண் டிருக்கும்பொழுது பிடிக்கப்பட்டு கொலே செய்யப்பட்டான். அவனுடன் சேர்ந்துகொண்டு கலகம் செய்தவர்கள் மிகவும் கொரேமாக நடத்தப்பட்டார்கள். பிரதம நியாயாதிபதி ஜேப்ரீஸ் அவர்களுக்குக் கடுமையான தண்டனேகளே விதித்தான். அவன் நடத்திய கொரே நியாயத்தை (Bloody Assize) ஜனங்கள் வெறுத்தார்கள். அவனே அரசன் தன்னுடைய முக்கிய மந்திரியாகச் செய்து கொண்டான்.

ஜேம்ஸின் கத்தோலிக் ஆதிக்யம்:—ஜேம்ஸ் 'அரசன் கடவுள் நியமனம்' (Divine Right theory) என்ற கொள்கையைக் கைக்கொண்டு தன் இஷ்டப்படி ஆள ஆரம்பித்தான். நாட்டில் இருக்கும் சட்டங்களுக்கு விரோதமான செயல்களேச் செய்தான். அவனுடைய கத்தோலிக் மதம் ஆதிக்யம் அடைய வேண்டிய வழிகளேத் தேடினுன். அவன் பார்லிமெண்டைக் கூட்டிப் பரிசோதனேச் சட்டத்தை எடுத்து விடும்படியாகக் கேட்டும், அது அவ்வாறு செய்ய ஏற்றுக் கொள்ளவில்லே. ஆகையால் பார்லிமெண்டைக் கலேத்து, அவன் தன் அதிகாரத்தைப் பெருக்கிக்கொண்

டான். அவனால் நியமிக்கப்பட்ட நியாயாதிபதிகள், அவனுக்குச் சில விஷயங்களில் இஷ்டப்படி நடந்துகொள்ள அதிகாரம் உண்டென்று தீர்ப்புக் கொடுத்தார்கள். அவன், நாட்டின் பொதுச் சட்டங்களுக்கு மாறாகச் சில விஷயங்களைச் செய்யத் தனக்கு அதிகாரம் (Dispensing power) உண்டென்றும், நாட்டின் சட்டங்களைக் கொஞ்சகாலத்திற்குநிறுத்திவைக்கவும் அதிகாரம்(Suspending power) உண்டென்றும் வாதாடி, அவ்வாறே செய்தும் வந்தான். இவ்வித அதிகாரங்களைக் கொண்டு கத்தோலிக்கர்களுக்குப் பெரிய பதவிகளைக் கொடுத்தான். கேம்ப்ரிட்ஜ், ஆக்ஸ்போர்டு சர்வகலாசாலைகளில் கத்தோலிக்கர்கள் நியமிக்கப்பட்டார்கள். ரோமனிஸ்டுகளே இராணுவத்தில் உயர்ந்த உத்தியோகங்களைப் பெற்றார்கள். முந்தியே நீடித்த பார்லிமெண்டால் ஒழிக்கப்பட்ட ஹை கமிஷன் கோர்ட்டைத் திரும்பவும் நியமித்தான். இந்த நியாய சபைக்கு ஜெப்ரீஸ் முக்கிய அதிகாரி ஆனான். அரசனுக்கு எதிராக நடந்தவர்கள் கடின தண்டனைகளுக் குள்ளாக்கப்பட்டார்கள். பிரான்ஸின் கத்தோலிக் அரசனான பதினாலாவது லூயியுடன் சிநேகம் செய்துகொண்டு புதுமதத்திற்குக் கேடுகளை ஜேம்ஸ் விளைவித்தான்.

ஐர்லாந்தில் டிர்கானல்:—ஐர்லாந்து கத்தோலிக்கர்களைத் திருப்திசெய்து இங்கிலாந்தை அடக்க ஜேம்ஸ் நினைத்தான். டிர்கானல் என்கிற கத்தோலிக் பிரபுவை அந்தத் தேசத்திற்கு அதிகாரியாக நியமித்தான். டிர்கானல் எதிர்ப்பு மதஸ்தர்களை வருத்தினான். ஐரிஷ் உதவி ஜேம்ஸிற்குக் கெடுதியையே விளைவித்தது.

மதத் தரிப்பு விளம்பரங்கள்:—(Declarations of Indulgence) ஜேம்ஸ் 1687-ல் ஒரு மதத்தரிப்புப் பிரகடனத்தை விடுத்தான். அதில் எல்லா மதஸ்தர்களும் அவ

ரவர்கள் இஷ்டப்படித் தொழலாமென்று கண்டிருந்தது. அதனால் அவன் கத்தோலிக்கர்களை ஆதரிக்க விரும்பினான் என்பதை அறிந்த எதிர்ப்பு மதஸ்தர்கள் தங்கள் விரோதிகள் அடையக்கூடிய சுயேச்சையைத் தங்களுக்கு வேண்டாம் என்று மறுத்தார்கள். 1688-ல் இரண்டாவது மதத் தரிப்புப் பிரகடனத்தை விடுத்து அதைக் குருமார்கள் ஆங்கிலக் கோயில்களில் இரண்டு ஞாயிற்றுக்கிழமைகள் வாசிக்க வேண்டுமென்று ஜேம்ஸ் உத்திரவிட்டான். அதையும் அவர்கள் மறுத்தார்கள்.

ஏழு பிஷப்புகளின் எதிர்ப்பு :—ஜேம்ஸ் விடுத்த இரண்டாவது விளம்பரத்தைக் கோயில்களில் வாசிக்க, காண்டர்பரி பிரதம குரு சான்கிராப்டும், மற்றைய ஆறு குருமார்களும் சேர்ந்து அரசன் செய்த காரியம் தவறானதென்று ஒரு மனுவை அரசனுக்குக் கொடுத்தார்கள். ஜேம்ஸ் கோபங்கொண்டு அவர்களைச் சிறையில் அடைத்தான். அவர்கள் லண்டன் நியாய சபைக்குக் கொண்டுவரப்பட்டு விசாரிக்கப்பட்டார்கள். நியாயாதிபதிகள் அவர்கள் குற்றமற்றவர்கள் என்று தீர்ப்புச் செய்தார்கள். இந்தத் தீர்ப்பைக்கேட்டு இங்கிலாந்து முழுவதும் ஜனங்கள் சந்தோஷம் அடைந்தார்கள்.

ஆரஞ்சு வில்லியத்திற்கு வரவேற்பு:—ஏழு குருமார்களின் விசாரணை நடக்கும்பொழுது மற்றொரு முக்கியமான விஷயம் ஏற்பட்டது. ஜேம்ஸ் வயதானவன். அவனுக்கு ஆண் சந்ததி இல்லை. அவனுக்குப்பின் வார்சு அவனுடைய பெண் எதிர்ப்பு மத வகுப்பினைச் சேர்ந்த ஆரஞ்சு மேரி ஆவள். அரசனுக்கு ஓர் ஆண்குழந்தை பிறந்தது. இதுவே பெரிய புரட்சிக்குத் தற்போதைய காரணமாயிற்று. ஏனென்றால், புது இளவரசன் கத்தோலிக் முறையில் ஜேம்ஸால் வளர்க்கப்படுவான் என்பது ஜனங்களுக்குத்

தெரியும். குருமார்களின் விசாரணை முடிந்த உடனேயே ஏழு முக்கியஸ்தர்கள் சேர்ந்து மேரியின் கணவன் ஆரஞ்சு வில்லியத்திற்கு ஒரு வரவேற்புக் கடிதம் எழுதினார்கள். அவர்கள் அவன் இங்கிலாந்திற்கு உடனே வந்து ஜனங்களைக் கத்தோலிக் மதச் சூழ்ச்சியிலிருந்தும், கொடுங்கோல் ஆட்சியிலிருந்தும் காப்பாற்றவேண்டும் என்று வேண்டிக் கொண்டார்கள். இப்படி வேண்டிக் கொண்டவர்கள் விக்கர்கள் மாத்திரமே அல்ல; அதில் டோரிக்களும் சேர்ந்து கொண்டனர்.

பிரபலப் புரட்சி, 1688 (**Glorious Revolution**):—இங்கிலாந்தின் பிரமுகர்கள் அனுப்பிய வரவேற்பை வில்லியம் ஆவலுடன் ஒத்துக்கொண்டான். ஏன் எனில் அவன் எதிர்ப்பு மதத்தைச் சேர்ந்தவன். பிரான்ஸ் அரசனான கத்தோலிக் பதினான்காவது லூயிக்கு ஜன்ம விரோதி. அவனுடன் சண்டையிடுவதற்கு இங்கிலாந்தின் உதவியை விரும்பி இருந்தான். அவன் ஒரு சேனையைத் திரட்டிக் கொண்டு இங்கிலாந்திற்குத் தெற்கே உள்ள டார்பே துறைமுகத்தில் இறங்கினான். இப்பொழுது ஜேம்ஸ் ஜனங்களைத் திருப்தி செய்வதற்குச் சுருசுருப்பாகச் சில விஷயங்களைச் செய்தான். அப்படிச் செய்தும் பிரயோசனப் படாமற் போயிற்று. மேற்கு இங்கிலாந்திலுள்ள கனவான்களால் வில்லியம் வரவேற்கப்பட்டு எக்ஸீட்டரிலிருந்து லண்டனுக்கு வந்துகொண்டிருந்தான். ஜேம்ஸ் அவனை எதிர்ப்பதில் பிரயோசனம் இல்லை என்று தெரிந்துகொண்டான். அவனுடைய குமாரி இளவரசி ஆன் என்பவளும் அவனுக்கு வேண்டிய வீரனான சர்ச்சில் முதலியவர்களும் அவனை விட்டு ஓடிவிட்டார்கள். ஆகையால் அவன் வேறு வழியில்லாமல் அரசுரிமையை நீத்து பிரான்ஸிற்குச் சென்றான். வில்லியம் தலைநகராகிய லண்டனை அடைந்து தற்போதையதான கன்

வென்ஷன் பார்லிமெண்டைக் கூட்டினன். அது ஜேம்ஸ் தானகவே பட்டத்தை விட்டு விட்டானென்றும், ஆகை யால் சிம்மாசனம் காலியாக்கப்பட்டது என்றும் தீர்மா னம் செய்தது. பாத்தியங்கள் விளம்பரம் (Declaration of Rights) என்கிற சாஸனம் ஒன்றையும் ஏற்படுத்தியது. அதில் ஜேம்ஸ் செய்த கெடுதியான செயல்கள் சட்ட விரோதமானவை என்று காணப்பட்டிருந்தது. வில்லியமும் மேரியும் விளம்பரத்தை ஒத்துக்கொண்டார்கள். அதற்குப் பிறகு அவர்கள் இருவரும் சேர்ந்து ஆளவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. இவ்வாறு நடந்த விஷயத்திற்குப் பிரபலப் புரட்சி என்று பெயர். ஸ்டுவேர்ட் அரசர்கள் பார்லி மெண்டைத் தங்களுக்குச் சுவாதீனமாக்கிக்கொள்ள எடுத் துக்கொண்ட முயற்சி வீணயிற்று. பார்லிமெண்டே வெற்றி பெற்றது. அரசன் கொடுங்கோல் ஆட்சி முடிவுபெற்று ஜனங்களின் இஷ்டத்தின்படியே நடக்கலானன். அரசன் தெய்வ நியமனம் என்கிற கொள்கை ஒழிந்தது. இதற்குப் பிறகு அரசன் ஓர் உத்தியோகஸ்தனகவும், குடிகளுள் ஒருவ னகவும் கருதப்பட்டான். இவ்வாருகப் பதினேழாம் நூற் ருண்டில் அரசனுக்கும் பார்லிமெண்டுக்கும் நடந்த சண்டை பார்லிமெண்டிற்கு வெற்றியைக் கொடுத்தது.

பயிற்சிகள்.

1. இரண்டாம் ஜேம்ஸிற்கும் இரண்டாம் சார்லஸிற்கும் உள்ள வித்தியாசம் என்ன ?
2. மான்மத் ட்யூக் ஏன், எவ்வாறு கலகம் செய்தான்? அவன் கதி என்னவாயிற்று?
3. ஜெப்ரீஸ் என்பவன் யார் ? அவன் எவ்வாறு அரச னுக்கு உதவி செய்தான் ?
4. ஜேம்ஸ் ஏன், எவ்வாறு கத்தோலிக்கர்களுக்கு உத்தி யோகங்கள் கொடுத்தான் ?

5. மதத் தரிப்பு விளம்பரங்கள் என்றால் என்ன ?
6. எழு பிஷப்புகள் விசாரணை எவ்வாறு முடிந்தது ? ஏன் ?
7. பெரிய புரட்சியின் காரணங்கள் யாவை ? அதன் தற்போதைய காரணம் எது ?
8. பாத்தியங்கள் விளம்பரத்தில் என்ன கண்டிருந்தது ?
9. பிரபலப் புரட்சி என்றால் என்ன ? அதனால் யாருக்கு ஆதிக்யம் ஏற்பட்டது ?

அதிகாரம் 3.

வில்லியம் III, 1689-1702; மேரி, 1689-94

முக்கியஸ்தர்கள்:—

க்ளேவர் ஹவுஸ் ஜான்க்ராஹாம் டன்டி பிரபு.
க்ளென்கோ மாக் இயான்.
பதினான்காவது லூயி.
சார்லஸ்-மான்டேகு.

முக்கியத் தேதிகள்:—

1689 பாத்தியங்கள் சட்டம்.
1690 பாயின் சண்டை.
1692 க்ளென்கோ படுகொலை.
,, லாஹோக் சண்டை.
,, தேசீயக் கடன்.
1694 மேரி இராணியின் மரிப்பு.
,, தேசீய பாங்க்.
1697 ரிஸ்விக் சமாதான உடன்படிக்கை.
1701 நிர்மாணச் சட்டம்.
1702 வில்லியம் III-ன் மரிப்பு.

1. உள் நாட்டு விஷயங்கள்.

பிரபலக் கிளர்ச்சியின் நிர்மாணம்.

இங்கிலாந்து :—இங்கிலாந்தில் ஏற்பட்டப் பிரபலக் கிளர்ச்சியின்படி மூன்றும் வில்லியமும் மேரியும் அரசுரிமையைப் பெற்றார்கள். தற்போதையதாக ஏற்பட்ட கன்வென்ஷன் பார்லிமெண்டு சரியான பார்லிமெண்டாக ஒத்துக் கொள்ளப்பட்டு அது பல சட்டங்களை ஏற்படுத்தியது. அந்தச்சட்டங்கள் இனிமேல் அரசன் இரண்டாம் ஜேம்ஸ் நடந்த மாதிரி நடக்க முடியாதபடி செய்துவிட்டன. இவைகளுக்குள் முக்கியமானது 1689-ல் ஏற்பட்ட பாத்தியங்கள் சட்டம் (Bill of Rights). அது பாத்தியங்கள் பிரகடனத்தைச் சட்டமாகச் செய்தது. அதில்கண்ட விஷயங்களாவன: இரண்டாம் ஜேம்ஸ் செய்த காரியங்கள் நியாய விரோதமானவை. இனிமேல் அரசர்கள் பார்லிமெண்டின் சம்மதமில்லாமல் வரி வசூலித்தலும், ஸ்திரமான சேனையை வைத்துக்கொள்ளலும் கூடாது. குடிகள் அரசனுக்கு மனுச் செய்துகொள்ள உரிமை உண்டு. பார்லிமெண்டு அடிக்கடி கூட்டப்படவேண்டும். நாட்டின் சட்டங்களுக்கு விரோதமாக அரசன் தன் அதிகாரத்தைச் செலுத்தக்கூடாது. இனிமேல் அரசன் கத்தோலிக் மதஸ்தனாக இருக்கக் கூடாது. கத்தோலிக் மத ஸ்திரீயையும் மணம் செய்து கொள்ளக்கூடாது. இவ்வாறு பிரபலக் கிளர்ச்சி, எதிர்ப்பாளர் மதத்தை ஸ்திரப்படுத்தியது. அரசன் ஒவ்வொரு வருஷமும் தன் சேனைக்குரிய அதிகாரத்தைப் பெறவும், வரி வசூலிக்கவும், பார்லிமெண்டைக் கூட்டி அதன் சம்மதத்தைப் பெறவேண்டும். மதத் தரிப்புச் சட்டம் (Toleration Act) (1689) எதிர்ப்பு மதஸ்தர்கள் தங்கள் இஷ்டப்படி தொழுவதற்கு இடங்கொடுத்தது. மூன்று வருஷச் சட்டம்

(1692) பார்லிமெண்டு மூன்று வருஷங்களுக்கு ஒரு முறை கலேக்கப்பட்டு புதுப் பார்லிமெண்டு கூட்டப்படவேண்டும் என்று ஏற்படுத்தியது. இவ்வாருகப் பார்லிமெண்டின் ஆதிக்யம் நிலைபெற்றது. பிரபலக் கிளர்ச்சியால் கட்சி அரசாங்கமும் மந்திரி சபையும் விருத்தியாயிற்று. விக்கர்கள் அரசனுக்கு அனுகூலம் உள்ளவர்களாய் இருந்தபடியால்,



படம் 5. மூன்ரும் வில்லியம்

முதலில் அவர்களேயே அவன் மந்திரிகளாக நியமித்துக் கொண்டான். பிறகு, எந்தக் கட்சியினர் பார்லிமெண்டில் அதிகமாக இருக்கின்றனரோ அந்தக் கட்சியினரிலிருந்தே அவன் தன் மந்திரிகளே நியமிக்க வேண்டியதாயிற்று.

ஸ்காட்லாந்து :—ஸ்காட்டுகள் சுத்த மதவாதிகள் ஆதலால் பிரபலக் கிளர்ச்சி நிர்மாணத்தை வரவேற்ருர்கள்.

ஸ்காட்டு கன்வென்ஷன் பார்லிமெண்டும் எடின் பரோவில் சந்தித்து வில்லியமும் மேரியும் அரசுரிமை உடையவர்கள் என்று ஏற்றுக்கொண்டது. பிஷப்புக்கள் தங்கள் பதவிகளி லிருந்து நீக்கப்பட்டார்கள். ஸ்காட் பிரஸ்பிட்டீரியன் மதம்



படம் 6. மேரி

திரும்பி வந்தது. ஆயினும் ஸ்காட்லாந்தில் வில்லியத்திற் குக் கொஞ்சம் எதிர்ப்பு ஏற்பட்டது. க்ளேவர் ஹவுஸ் ஜான் க்ராகாம் என்ற டன்டிப் பிரபு, ஸ்காட்லாந்து மலைப் பிரதேசத்தவர்களைச் சேர்த்துக்கொண்டு வில்லியத்தை

எதிர்த்து வந்தான். அவன் 1689-ல் கில்லிகிராங்கி கணவாயில் ஆங்கிலச் சேனையைத் தோற்கடித்தான். ஆனால் அவன் அந்தச் சண்டையில் இறந்ததால் பயன் இல்லாமல் போயிற்று. மலைப்பிரதேசத்தார்கள் அவரவர்கள் இடங்களுக்குத் திரும்பிச்சென்றனர். தன் அரசுரிமையை ஏற்றுக்கொண்டு குறிப்பிட்டகாலத்திற்குள் எல்லோரும்அவ்வாறு ஏற்றுக்கொண்டதாகப் பிரமாணம் செய்யவேண்டும் என்று வில்லியம் உத்திரவிட்டான். மாக்டனால்டு வகுப்பின் தலைவனைமாக்கியான் காலம்கடந்து பிரமாணம் செய்தமையால், 1692-ல் ஓர் ஆங்கிலச்சேனை சென்று அவனையும் அவன் வகுப்பினரையும் அவர்கள் இடமாகிய க்ளேன்கோவில் படுகொலை செய்தது. இவ்வாறாக ஸ்காட்லாந்தில் வில்லியத்தின் அரசாட்சி நிலைநாட்டப்பட்டது. 1698-ல் பாடர்ஸன் என்கிற ஸ்காட், அமெரிக்காவிலுள்ள டரியன் அல்லது பனாமா பூசந்தியை ஸ்காட்டுகளின் குடியேற்ற நாடொன்றாகச் செய்ய முயன்றது ஆங்கிலேயரின் எதிர்ப்பினால் பயனற்றதாயிற்று.

ஐர்லாந்து :—ஐர்லாந்தில் கத்தோலிக்கர்கள் அதிகம். ஆகையால் அவர்கள் வில்லியத்தின் அரசுரிமையை ஒத்துக்கொள்ளவில்லை. அவர்கள் இரண்டாம் ஜேம்ஸை நியாயமான அரசன் என்று கிளம்பினார்கள். 1689-ல் ஜேம்ஸ் ஒரு பிரென்சு சேனையுடன் ஐயர்லாந்தில் வந்து இறங்கினான். அல்ஸ்டரில் உள்ள எதிர்ப்பு மதஸ்தர்களை லண்டன்டெரி, என்னிஸ்கில்லன் என்ற இடங்களில் கத்தோலிக்கர்கள் தாக்கினார்கள். வில்லியம் ஐர்லாந்துக்குச் சென்று டப்ளினுக்கு அருகாமையிலுள்ள பாயின் நதிக்கரையில் ஜேம்ஸை 1690-ல் தோற்கடித்தான். பிறகு அல்ஸ்டருக்குச் சென்று அங்கே அவனுக்காக கத்தோலிக்கர்களைத் தைரியத்துடன் எதிர்த்துக்கொண்டிருந்த ஆரஞ்சு

வீரர்களை லண்டன்டேரியிலும் என்னிஸ்கில்லனிலும் காப்பாற்றினன். மேற்கேயிருந்த கத்தோலிக்கர்கள் லிமரிக்கில் 1691 ல் தோற்கடிக்கப் பட்டார்கள். லிமரிக் உடன் படிக்கைப்படி ஐர்லாந்தில் பிரபலக்கிளர்ச்சி நிர்மாணம் நிலை நிறுத்தப்பட்டது. கத்தோலிக்கர்கள் தங்கள் சுதந்திரங்களை இழந்ததுமின்றி கொடூரமாகவும் நடத்தப்பட்டார்கள்.

2. வெளிநாட்டு விவரங்கள்.

பிரான்சுடன் யுத்தம் :—1689—97. பிரபலக் கிளர்ச்சி இங்கிலாந்திற்கும் பிரான்சிற்கும் யுத்தத்தை விளைவித்தது. அந்த யுத்தம் நூறுண்டுகளுக்குமேல் நடந்ததால் அதற்கு இரண்டாவது நூற்றுண்டு யுத்தம் என்று பெயர் ஏற்பட்டது. வில்லியம் காலத்தில் நடந்த யுத்தத்திற்கு ஆங்கில அரசுரிமை யுத்தம் (War of the English Succession) என்ற பெயர் வழங்கப்பெற்றது. பிரான்சு அரசனுகிய பதினன்காம் லூயி கத்தோலிக் ஆதலால் வில்லியத்தை அரசனுக ஏற்றுக்கொள்ளாமல் ஜேம்ஸை வரவேற்று அவனுக்கு உதவி செய்தான். வில்லியம் எதிர்ப்பு மத ஐரோப்பிய தேசங்களைப் பிரான்சிற்கு எதிர்பக்ஷமாகச் சேர்த்துக் கொண்டு யுத்தத்திற்குத் தயாரானன். இங்கிலாந்தின் தென் கரையிலுள்ள பீச்சி ஹெட் (Beachy Head) என்றஇடத்தில் பிரன்சு கப்பற்படை 1690-ல் ஆங்கிலக்கப்பற்படையைத் தோற்கடித்தது. ஆனல் 1692-ல் நார்மண்டிக் கரையிலுள்ள லா ஹோக் என்ற கடல் சண்டையில் ஆங்கிலேயரே ஜயம் அடைந்தும், பிரன்சுக்கப்பற் படையை ஒழித்தும், ஆங்கிலக்கடல் ஆதிக்யத்தை நிலை நிறுத்தினர். ஆனல் நிலச் சண்டையில் பிரன்சுக்காரர்கள் படை வலுத்திருந்ததால் ஆங்கிலேயர் வெற்றி பெற முடியவில்லை. அந்தச் சண்டை நெதர்லண்ட்ஸ் என்று சொல்லப்படுகிற



பிரபலக் கிளர்ச்சி நிர்மாணம்
1689 — 1702

படம் 7.

பெல்ஜிய தேசத்தில் நடந்தது. வில்லியமே தளகர்த்த ஞகச் சென்று கோரச் சண்டை செய்தான். ஸ்டீன் கர்க், லாண்டன் என்ற இடங்களில் நடந்த சண்டை களில் வில்லியம் தோல்வி அடைந்தாலும், அவன் திறமை யாகச் சண்டையிட்டு நஷ்டம் அடையாமல் தன் சேனை யைக் காப்பாற்றிக்கொண்டான். இந்த யுத்தம் ரிஸ்விக் சமாதான உடன்படிக்கை (Peace of Ryswick) யால் 1697-ல் முடிவு அடைந்தது. அதன்படி இருதிறத்தினரும் பிடித்த இடங்களையும் கைதிகளையும் அவரவர்களுக்கே திருப்பிக் கொடுத்துவிடவேண்டும் என்றும், வில்லியத்தை இங்கிலாந்தின் அரசஞகப் பதிஞன்காவது லூயி ஏற்றுக் கொள்ளவேண்டும் என்றும் ஏற்பாடாயிற்று. பிரபலக் கிளர்ச்சியினுல் இங்கிலாந்து மறுபடியும் ஐரோப்பிய விஷ யங்களில் ஈடுபட்டு உன்னத நிலையை அடைவதற்கு வழி உண்டாயிற்று.

ஸ்பானிய அரசுரிமை யுத்தம்:—ரிஸ்விக் உடன்படிக்கை நீடித்த அமைதியை உண்டுபண்ணவில்லை. ஸ்பெயின் அரச ஞகிய இரண்டாம் சார்லஸுக்குச் சந்ததியில்லை. அவன் வயது முதிர்ந்து இறக்கும் தருவாயில் இருந்தான். அவ னுடைய அரசுரிமைக்கு மூன்று வார்சுகள் கிளம்பினர். அவர்கள் பதிஞன்காம் லூயியின் பேரஞன ஆன்ஜெள ட்யூக் பிலிப்பும், பவேரியாவின் எலெக்டர் பெர்டிஞண்டும், ஆர்ச்ட்யூக் சார்லஸும் ஆவர். 1698-ல் முதல் பிரிவு உடன் படிக்கையின்படி பவேரியாவின் எலெக்டர் பெர்டிஞண்டு ஸ்பெயினின் அரசுரிமையைப் பெறவேண்டுமென்று தீர்மா னிக்கப்பட்டது. ஆனல் அடுத்த வருஷம் பெர்டிஞண்டு இறந்துவிட்டான். 1700-ல் இரண்டாம் பிரிவு உடன் படிக்கையின்படி ஆஸ்திரியாவின் ஆர்ச்ட்யூக் சார்லஸ் ஸ்பெயினுக்கு அரசஞக வேண்டும் என்று முடிவு செய்யப்

பட்டது. ஐரோப்பாவில் சம அதிகாரம் ஏற்படவேண்டும் என்னும் நோக்கத்தைக் கொண்டே அந்த உடன்படிக்கைகள் ஏற்பட்டன. உடனே இரண்டாம் சார்லஸூம் இறந்தான். அவன் இறப்பதற்கு முன் தன்னுடைய ஸ்பானிய இராஜ்யம் முழுமையும் பதினன்காம் லூயியின் பேரனை ஆன்ஜௌட்யூக் பிலிப்பிற்கு உரியது என்று ஒரு மரண சாஸனத்தில் எழுதி வைத்துவிட்டு இறந்தான். பிரான்சு தேசத்து அரசன் இதை ஒப்புக்கொண்டான். இதனல் பிரான்சின் வலிமை அதிகமாயிற்று. வில்லியத்தின் முயற்சி வீணாயிற்று. 1701-ல் இரண்டாம் ஜேம்ஸ் இறந்ததும் அவனுடைய குமாரனை மூன்ரும் ஜேம்ஸ்என்று பிரான்ஸ் அரசன் ஒத்துக்கொண்டான். இவ்வாறு பதினன்காம் லூயி ரிஸ்விக் சமாதானத்துக்கு எதிரிடையாக நடந்து ஆங்கிலேயர்களை விரோதிகளாக்கிக் கொண்டான். டோரிக்கள்கூட பிரான்சுடன் சண்டை செய்ய வில்லியத்திற்கு உதவி புரியத் தயாரானர்கள். வில்லியம், பிரான்ஸ் ஸ்பெயின் இவற்றின் ஒற்றுமைக்கு எதிராக ஐரோப்பாவில் ஒரு பெரியசம்பந்தம் (Grand Alliance) ஏற்படுத்தினன். பொதுத் தேர்தலில் விக்கர்களே தேர்ந்தெடுக்கப்பட்டு பார்லிமெண்டில் அதிகமாக வந்தமையால் அவர்கள் அரசனுடைய யுத்த ஆயத்தத்தை ஆதரித்தார்கள்.

3. பண விஷயங்கள்.

தேசீயக் கடன்:—பிரான்சுடன் செய்த பெரிய யுத்தத்தினல் வில்லியத்திற்குப் பணம் வேண்டியதாக இருந்தது. வரியை உயர்த்துவதில் அவனுக்கு விருப்பமில்லை. ஆகையால் அவனுடைய பொக்கிஷ மந்திரியான சார்லஸ் மான்டேகு பெருந்தொகைகளைப் பணக்காரர்களிடமிருந்து கடன் வாங்கினன். அதுதான் தேசியக் கடன் (National Debt)

என்பதற்கு ஆரம்பம். அது 1692-ல் தொடங்கிற்று. இதிலிருந்து மேன் மேலும் நிலைவரமாகத்தேசத்தில் அது ஏற்பட்டு விட்டது. இப்பெருந்தொகைகளுக்கு வட்டி தேசீய வருமானத்திலிருந்து கொடுக்கப்பட்டது.

இங்கிலாந்தின் பாங்க்:—(Bank of England) இது 1694-ல் ஏற்பட்டது. பணத்தை வாங்குவதும் வட்டிக்கு விடுவதும் இதன் வேலை. இதுதான் இங்கிலாந்தில் முதன் முதலாக ஏற்பட்ட பெரிய நிதியாகும். இது தேசீயக் கொடுக்கல் வாங்கல்களை நடத்திவந்தது. தேசீயக் கடனும் பாங்கினும் பிரபலப் புரட்சி நீடித்ததாயிற்று. ஏனென்றால் புதிய அரசாங்கத்திற்குக் கடன் கொடுத்தவர்கள் பழைய அரசவம்சத்திற்கு உதவி செய்து அதைத் திருப்பிக்கொண்டுவர முடியாமல் போயிற்று. ஆகையால் பிரபலப் புரட்சி நிர்மாணம் இங்கிலாந்தில் நிலைத்து நிற்பதற்கு இது ஒரு காரணமாயிற்று. இது ஆங்கில வர்த்தகத்தின் அபிவிருத்திக்கும் காரணமாயிற்று.

4. நிர்மாணச் சட்டம். (Act of Settlement).

இந்தச் சட்டம் 1701-ல் டோரி பார்லிமெண்டால் ஏற்படுத்தப்பட்டது. அது பிரபலக் கிளர்ச்சி நிர்மாணத்தை உறுதி செய்தது. அதில் கண்டிருந்த விஷயங்களாவன:— ஆன் இராணி சந்ததி யில்லாமல் இறந்தால் அவளுக்குப் ஹனேவரின் எலெட்ரஸான சோபையாவும் அவளுடைய பிறகு வருக்கத்தினரும் இங்கிலாந்தின் அரசுரிமையைப் பெறவேண்டும். ஏனென்றால் அவள் எதிர்மதஸ்தர்களைச் சார்ந்தவள்; மற்றைய நெருங்கின உறவினர்களெல்லாம் கத்தோலிக்கர்கள். அது அவ்வாறு செய்தது பிரபலக் கிளர்ச்சியின் முக்கியாம்சத்தை உறுதி செய்தது. இனிமேல் அரசர்

கள் ஆங்கிலக் கோயில் முறைகளைத் தழுவினவர்களாகவே இருத்தல் வேண்டும். பார்லிமெண்டின் அனுமதியின்றி அரசன் வெளிநாடுகளோடு சண்டைக்குப் போகக்கூடாது; வெளிநாட்டினற்கு இங்கிலாந்தில் உத்தியோகம் கொடுக்கக் கூடாது. நியாயாதிபதிகள் பார்லிமெண்டிற்கு உட்பட்டவர்கள். இவ்வாறாக வில்லியத்தின் அரசாட்சியில் பிரபலக் கிளர்ச்சியின் நிர்மாணம் நிலைபெற்றது. மேரி அரசி 1694-ல் இறந்தாள். வில்லியம் அதற்குப் பின் எட்டு ஆண்டுகள் ஜீவித்திருந்தான். அவன் 1702-ல் குதிரையின் மேலிருந்து கீழே விழுந்து உயிர் நீத்தான்.

பயிற்சிகள்.

1. பாத்தியங்கள் சட்டத்தில் கண்ட விஷயங்கள் யாவை?
2. பிரபலக் கிளர்ச்சி நிர்மாணத்தை ஏற்படுத்திய சட்டங்களைக் கூறுக.
3. கில்லிகராங்கி கணவாய்ச் சண்டையில் யாருக்கு வெற்றி? அதனால் உண்டான பலன் என்ன?
4. க்ளென்கோ படுகொலை என், எவ்வாறு ஏற்பட்டது?
5. டரியன் திட்டம் என்பது யாது?
6. வில்லியம் III ஐயர்லந்தில் தன் ஆட்சியை எவ்வாறு ஏற்படுத்தினன்?
7. ஆங்கில அரசுரிமை யுத்தம் என் உண்டாயிற்று? அந்த யுத்தத்தில் முக்கியச் சண்டைகள் யாவை? அது எந்தச் சமாதான உடன்படிக்கையால் முடிந்தது?
8. வில்லியம் III எவ்வாறு ஸ்பானிய அரசுரிமை விஷயத்தில் தலையிட்டுக்கொண்டான்?
9. தேசியக் கடன் ஏற்பட்டதின் காரணம்என்ன?
10. இங்கிலாந்தின் பாங்க் எப்பொழுது, எவ்வாறு ஏற்படுத்தப்பட்டது?
11. பிரபலப் புரட்சியால் உண்டான பயன்கள் யாவை?
12. மூன்றும் வில்லியம் ஆட்சியில் நடந்த நிகழ்ச்சிகளைக் குறிக்க ஒரு படம் வரைக.

அதிகாரம் 4.

ஆன் இராணி, 1702—14.

முக்கியஸ்தர்கள்:—

மார்ல்பரோ டச்செஸ், ஸாரா-ஜென்னிங்ஸ்.
மார்ல்பரோ ட்யூக், ஜான் சர்ச்சில்.
கொடால்பின் பிரபு.
சேவாய் இளவரசன், யூஜீன்.
டாக்டர் சாசிவரல்.
செயின்ட் ஜான், வைக்கவுண்ட் பாலிங்ப்ரோக்.
ராபர்ட் ஹார்லி, ஆக்ஸ் போர்டு பிரபு.
ஆன்ட்ரூ ப்லெட்சர்.

முக்கியத் தேதிகள்:—

1702. ஆன் இராணி பட்டத்திற்கு வருதல்.
ஸ்பானிய அரசுரிமை யுத்த ஆரம்பம்.
1704. ப்ளென்ஹீம் சண்டை.
ஜிப்ரால்டர் பாறை ஆங்கிலேயர் வசமாதல்.
1706. ராமிலீஸ் சண்டை.
1707. ஸ்காட்லாந்தின் ஐக்கியம்.
1708. ஊடனார்ட் சண்டை.
1709. மால்ப்ளாகட் சண்டை.
1713. யூட்ரக்ட் உடன்படிக்கை.
1714. ஆனின் மரிப்பு.

1. ஆன் இராணியும் மார்ல்பரோவும்.

ஆனின் குணம்:—ஆன் இயற்கையாக நல்ல குணம் உள்ளவள். தன்னுடைய சிநேகிதர்களிடத்தில் உண்மையாக நடந்துவந்தாள். தெய்வ பக்தி உள்ளவள். அவளிடத்தில் ஓர் உண்மையான ஆங்கில ஸ்திரீயின் குணங்கள் மிகுந்திருந் தன. அவளுடைய நற்குணங்களைக்கண்டு பிரஜைகள் அவளை

நேசித்தார்கள். அவள் டோரிக்களிடத்திலும் ஆங்கிலக் கோயில் மதத்தினரிடத்தும் அன்பு காட்டினுள். ஆனுல் அவள் பிடிவாதம் உள்ளவள்; சுருசுருப்பு அற்றவள்; விசாலமான நோக்கங்கள் இல்லாதவள். அவளுடைய கண

படம் 8. ஆன் இராணி.

வன் டென்மார்க்கின் இளவரசனுன ஜார்ஜ் என்பவன் அவளைவிட மந்தபுத்தி உள்ளவன். அவளுக்கு வேண்டியவளான ஸாரா ஜென்னிங்ஸ் என்பவள் மார்ல்பரோ பிரபுவின் மனைவி. அவளுக்குத் திட மனமும், கூர்மையான அறிவும்

உண்டு. மார்ல்பரோ பிரபு தன் மனைவியின் மூலமாக ஆன் அரசாங்கத்தில் உயர்ந்த பதவியும் செல்வாக்கும் பெற்றான்.

மார்ல்பரோ ட்யூக், ஜான் சர்ச்சில்:—1650-1721. அவன் 1650-ல் டேவன் ஷயரில் அரசன் கட்சியைச் சார்ந்த ஒரு கவாலியருக்குப் பிறந்தான். 1667-ல் அவன் ஆங்கிலச் சேனையில் அமர்ந்தான். ஐந்து வருஷங்கள் வெளி நாடுகளில் சண்டை செய்தான். 1672-ல் ஓர் ஆங்கிலச் சேனைப் பிரிவுக்குக் கர்னல் ஆனான். ஒரு பெரிய வீரனுடைய குணங்கள் இவனிடத்தில் பொருந்தியிருந்தன. அவனுக்குப் பயம் என்பதே கிடையாது. அவன் அஞ்சாத நெஞ்சன்; தைரியமாக வீரச் செயல்களைச் செய்வதில் பின்வாங்கமாட்டான். திடமான மனத்தை உடையவன்; நிதானம் மிகுந்தவன்; முன்னோக்கம் உள்ளவன்; சிரமத்தைப் பாராட்டாதவன். ஆனால் சுயநலம் மிகுந்தவன். யார்க் ட்யூக் ஜேம்ஸ் அவனை ஆதரித்தான். அவன் அரசனான பிறகு மார்ல்பரோ சேனையில் உயர்ந்த பதவிகளை அடைந்தான். மான்மத் கிளர்ச்சி காலத்தில் அவன் மேஜர் ஜனரலாக்கப்பட்டான். 1685-ல் நடந்த செட்ஜிமூர் சண்டையில் தன்னுடைய தைரியத்தையும் நிதானத்தையும் காண்பித்தான். ஜேம்ஸ் அரசுரிமையை விட்டு ஓடுவதற்கு முன் அவனுக்காகத் தான் முடிவு வரையில் சண்டை போடுவதாக உறுதிமொழி கூறினான். ஆனால் வில்லியம் இங்கிலாந்தில் வந்து இறங்கியதும் அவனுடன் சேர்ந்துகொண்டான். அவன் செய்த உதவிக்காக மார்ல்பரோ டியூக் பட்டத்தைப் பெற்றான். ஐயர்லாந்தில் நடந்த சண்டையில் அவனுக்கு முக்கியமான பதவி கொடுக்கப்பட்டது. அவன் சீக்கிரமாக முன்னுக்கு வந்ததற்குக் காரணம் அவனுடைய மனைவியான ஸாரா ஜென்னிங்ஸே. ஆன் அரசியானதும் அவன் ஸ்பானிய யுத்தத்தில் முக்கியத் தளகர்த்தனாக்கப்பட்டான்.

2. ஸ்பானிய அரசுரிமை யுத்தம்:—1702-13.

காரணங்கள்:—பதினன்காவது லூயி எவ்வாறு ஸ்பானிய அரசுரிமையைத் தன்னுடைய பேரனை ட்யூக் பிலிப்பிற்குப் பெற்றுன் என்பதையும், ரிஸ்விக் உடன்படிக்கைக்கு மாருகப் பழைய ஸ்டேவர்ட்டு வம்சத்தைச் சேர்ந்த ஜேம்ஸை இங்கிலாந்தின் மூன்றும் ஜேம்ஸாக ஒத்துக்கொண்டான் என்பதையும் முன்னமேயே கண்டோம். பிரஞ்சு அரசனின் ஐரோப்பிய ஆதிக்யத்தை ஒழித்து சம அதிகார நிலையை (Balance of Power) நாட்டுவதற்கு இங்கிலாந்து முன்னுக்கு வந்தது. கடல் ஆதிக்யம், குடியேற்ற நாடுகளின் முன்னேற்றம், வியாபார விருத்தி முதலிய விஷயங்களிலும் இங்கிலாந்திற்கும் பிரான்சிற்கும் அடிக்கடி சச்சரவுகள் ஏற்படலாயின. இவ்வாறு பல விதக் காரணங்களால் அவ்விருதேசங்களும் யுத்தம் செய்ய ஆரம்பித்தன. இங்கிலாந்தின் பக்கத்தில் ஹாலந்தும், ஆஸ்திரியாவும், ஜர்மனியின் சிற்றரசர்களும் சேர்ந்தனர். பிரான்சுக்கு ஸ்பெயினும், இத்தாலியும், பவேரியாவும் உதவி புரிந்தன.

விவரங்கள்:—யுத்தம் 1702-ல் ஆரம்பமாயிற்று. ஸ்பானிய நெதர்லாண்ட்ஸில் இரண்டு வருஷகாலம் மார்ல்பரோ ஐக்கியச்சேனைக்குத் தளகர்த்தனுக இருந்துகொண்டு பிரன்சு சேனையுடன் சண்டை செய்தான். ஹாலந்தைப் பிரஞ்சு படைஎடுப்பிலிருந்து காப்பாற்றினுன். மெத்துவன் உடன்படிக்கைப்படி போர்ச்சுகல் இங்கிலாந்துடன் சேர்ந்தது. ஆஸ்திரியாவின் தலைநகரான வியன்ன மிகவும் ஆபத்தான நிலைமையில் இருந்தது. ஏனென்றுல் பிரான்ஸ் பவேரியாவின் துணையைக்கொண்டு அதன்மீது படை எடுத்தது. மார்ல்பரோவுக்கு இந்த விஷயம் தெரிந்ததும் ஹாலந்தி

லிருந்து அவன்சேனையை ரைன் நதி வழியாக நடத்தி, பவேரியாவின்மீது படைஎடுத்தான். அங்கு சேவாய் இளவரசனுன யூஜின் என்பவன் அவனுடன் சேர்ந்துகொண்டான். டான்யூப் நதிக்கரையிலுள்ள ப்ளேன்ஹீம் என்கிற இடத்தில் 1704-ல் ஒரு பெரிய சண்டை நடந்தது. சண்டையில் மார்ல்பரோ பிரான்கோ-பவேரியன் சேனையை முறியடித்து ஒரு பெரிய வெற்றியைப் பெற்முன். அதுதான் பதினுன்காவது லூயிக்குக் கிடைத்த முதல் தோல்வியாகும். அதனுல் ஐரோப்பாவில் அவனுடைய ஆதிக்யம் குறைந்தது. ஆஸ்திரியா பிரஞ்சுப் படைஎடுப்பிலிருந்து காப்பாற்றப்பட்டது. பவேரியா இங்கிலாந்துடன் சமாதானம் செய்து கொண்டு பிரான்சின் பக்கத்திலிருந்து விலகிக்கொண்டது. பிரஞ்சு சேனை முறியடிக்கப்பட்டு டான்யூபின் மேற்குப் புறமாக ஓடிற்று. மார்ல்பரோவுக்கு அழியாத கீர்த்தி உண்டாயிற்று. அவனுக்கு ப்ளென்ஹீம் நிலயம் (Blenheim House) என்கிற கட்டிடத்தைப் பார்லிமெண்டு கொடுத்தது. அதே வருஷத்தில் ஸ்பெயின் தேசத்தில் உள்ள ஜிப்ரால்டர் பாறையை ஆங்கிலக் கப்பற்படைத் தலைவனுன ரூக் (Admiral Rook) ஸ்பானியர்களிடமிருந்து பிடித்துக் கொண்டான். மார்ல்பரோ நெதர்லாண்ட்ஸில் வரிசையாக வெற்றிகளைப் பெற்முன். ராமிலிஸ் (1706), ஊடனுர்ட் (1708), மால்பளாக்ட் (1709) என்கிற இடங்களில் பிரஞ்சு சேனையைத் தோற்கடித்தான். இந்த வெற்றிகளுக்குப் பிறகு யுத்தம் ஊக்கமாக நடைபெறவில்லை. ஏனெனில் யுத்தத்தை ஊக்கத்துடன் நடத்திவந்த விக்கர்கள், 1710-ல் நடந்த பொதுத் தேர்தலில் தோல்வி அடைந்ததால், யுத்தத்தை நிறுத்த ஆவல்கொண்ட டோரிக்கள் அதிகாரம் பெற்றனர். டோரிக்கள் மார்ல்பரோவைத் தளகர்த்தன் பதவியிலிருந்து நீக்கிச் சமாதான ஏற்பாடுகளைச் செய்தனர்.

ஐரோப்பா – 1713.
மார்ல்பரோவின் பிளென்ஹீம் படை எடுப்பு



படம் 9.

யூட்ரக்ட் உடன்படிக்கை (1713): இந்த உடன்படிக் கையின்படி யுத்தம் முடிவிற்கு வந்தது. அதில் கண்ட நிபந்தனைகளாவன:—ஆன்ஜௌட்யூக் பிலிப் ஸ்பெயினுக்கு ஐந்தாம் பிலிப் என்னும் பட்டத்துடன் அரசன் ஆனன்; ஆனல் பிரான்சும் ஸ்பெயினும் ஒரே அரசாட்சிக்குக் கீழ் வரக்கூடாது; ஆஸ்திரியா சக்கரவர்த்தி இத்தாலியிலுள்ள மைலான், நேபிள்ஸ், சார்டினியா என்ற இடங்களைப் பெற்றன். டச்சுக்காரர்கள் நெதர்லாண்ட்ஸை அடைந் தார்கள். இங்கிலாந்தில் எதிர்ப்பாள மதஸ்தர் அரசுரிமை யைப் பதினன்காம் லூயி ஒற்றுக்கொண்டான். இங்கி லாந்து பிரான்ஸினிடம் இருந்து, நியூபவுண்ட்லாந்தையும் நோவா ஸ்கோஷியாவையும், ஸ்பெயினிடம் இருந்து ஜிப்ரால்டரையும், மினர்க்காவையும் பெற்றது. இங்கி லாந்து சில வர்த்தகச் சுதந்திரங்களையும் அடைந்தது. எஸி யன்டோ (Asiento) ஒப்பந்தத்தின்படி ஒவ்வொரு வருஷ மும் ஓர் ஆங்கிலக் கப்பல் நீக்ரோ அடிமைகளை ஆப்பிரிக் காவிலிருந்து ஏற்றிக்கொண்டு ஸ்பானிய அமெரிக்காவிற்குச் சென்று அங்கு வியாபாரம் செய்யச் சுதந்திரம் பெற்றது. யூட்ரக்ட் சமாதானம் இவ்வாறு ஆங்கில ஆதிக்யத்தை நிலை நிறுத்தியது.

3. கட்சி அரசாங்கமும் மந்திரி சபையும்.

டோரி மந்திரி சபை :—1702-06. டோரிக்களே பார்லி மெண்டில் அதிகமாக இருந்தனர். ஆகையால் டோரிக்களே மந்திரிப் பதவியை அடைந்தனர். அவர்களுள் முக்கிய மானவர்கள் மார்ல்பரோவும் கொடால்பினும் ஆவர். அவர் கள் ஸ்பானிய யுத்தத்தை ஆரம்பித்து நடத்தினர். ஆனல் டோரிக் கட்சியினர் யுத்தம் நடப்பதற்கு விருப்பமற்ற நோக்கத்தைக் கொண்டவர்கள்.

விக் மந்திரி சபை:—(1706—10). மார்ல்பரோவின் ஐரோப்பிய வெற்றிகள் அவனுடைய ஆதிக்யத்தை விருத்தி செய்தது. அவனும் கொடால்பினும் விக்கர்களே யுத்தத்தை ஆதரிக்கின்றவர்கள் என்பதைக் கண்டு டோரிக் கட்சியை விட்டு விக்கர்கள் கட்சியைச் சேர்ந்துவிட்டார்கள். ஆகையால் அவர்கள் மந்திரி சபையில் விக்கர்களையே சேர்த்துக் கொண்டார்கள். இந்த மந்திரி சபையில் ராபர்ட் வால்போல் ஒரு மந்திரியாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டான். விக் மந்திரிகள் **1707**-ல் இங்கிலாந்துடன் ஸ்காட்லாந்தின் ஐக்கியச் சட்டத்தை நிறைவேற்றினர்கள். **1708**-ல்கொடால்பின் தன்னுடைய தீர்மான (Award) த்தினுல் ஐக்கியக் கிழக்கு இந்திய சங்கத்தை ஏற்படுத்தினுன். பதினுன்காம் லூயி சமாதானத்திற்குத் தயாராயிருந்தும் விக்கர்களுக்கு யுத்தத்தை நடத்துவதில் ஊக்கம் குன்ருமல் இருந்தது. விக் மந்திரிகள் **1710**-ல் டோரிக்கட்சியினரான **டாக்டர் சாசிவரல்** என்ற ஆங்கில மதப் பிரசங்கம் செய்பவரை, அவர் செய்த பிரசங்கங்கள் அரசாங்கத்திற்கு விரோதமானவை என்ற குற்றத்தைச் சாட்டி, பார்லிமெண்டில் விசாரணைக்குக் கொண்டுவந்தார்கள். பிரபுக்கள் சபையார் அவருக்குக் கொஞ்சம் அபராதத்தைப் போட்டு அவர் கொஞ்ச காலம் பிரசங்கம் செய்யாமலிருக்க வேண்டும் என்று தீர்மானித்தார்கள். இவ்வாறு விக் மந்திரிகள் செய்த காரியங்கள் ஜனங்களுக்குப் பிடிக்கவில்லை. அந்த வருஷத்தில் நடந்த பொதுத் தேர்தலில் விக்கர்கள் தோல்வி அடைந்து டோரிக்களே ஜெயம் பெற்றனர்.

டோரி மந்திரி சபை:—1710—14. டோரி மந்திரி சபையில் முக்கியமானவர்கள் ஆக்ஸ்போர்ட் பிரபுவான ராபர்ட் ஹார்லியும், பாலிங்ப்ரோக் பிரபுவான செயின்ட் ஜானும் ஆவர். அவர்கள் **1713**-ல் யூட்ரக்ட் சமாதான

உடன்படிக்கையைச் செய்தனர். அவர்கள் ஆனுக்குப் பிறகு எவர் அரசுரிமையைப் பெறவேண்டு மென்பதைப் பற்றி ஆலோசித்து அதற்குத் தக்க ஏற்பாடுகளைச் செய்ய முயன்றனர். 1701-ல் ஏற்பட்ட நிர்மாணச் சட்டத்தின் படி எதிர்மத வகுப்பினைச் சார்ந்த சோபையா வம்சத்தினர் அரசுரிமையைப் பெறுவதில் அவர்களுக்கு இஷ்டம் இல்லை. அவர்கள் அதற்கு ஏதிராகப் பழைய ஸ்டூவர்ட்டு வம்சத்தைச் சார்ந்த இரண்டாம் ஜேம்ஸின் குமாரனை ஜேம்ஸைப் பட்டத்திற்குக் கொண்டுவருவதற்கு வேண்டிய சூழ்ச்சிகளைச் செய்தார்கள். அவன் கத்தோலிக் மதஸ்தன் ஆதலால் சட்டப்படி இங்கிலாந்திற்கு அரசனாவதற்கு உரிமை இல்லாதவன். அவர்களுடைய சூழ்ச்சி நிறைவேறுவதற்குள் ஆன் 1714-ல் தேகவியோகமானாள்.

4. இங்கிலாந்துடன் ஸ்காட்லாந்தின் ஐக்கியம்—1707.

காரணங்கள்:—இங்கிலாந்துக்கும் ஸ்காட்லாந்துக்கும் அரசாங்கமுறை வேறாக இருந்தமையால் ஆங்கிலேயரும் ஸ்காட்டுகளும் ஒற்றுமையற்று இருந்தனர். இரண்டு தேசங்களுக்கும் ஐக்கியம்ஏற்படுவதற்குவேண்டிய முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. ஸ்காட்லாந்து அரசனான ஆறுவது ஜேம்ஸ் இங்கிலாந்தின் முதல் ஜேம்ஸாக 1603-ல் அரசனானதும், இரண்டுதேசங்களும் ஒரே அரசன் தலைமையின்கீழ் வந்தன. அவ்வரசன் மற்றைய விஷயங்களிலும் இரு தேசங்களுக்கும் ஒற்றுமையை ஏற்படுத்த எடுத்துக்கொண்ட பிரயத்தனங்கள் வீணாயின. முதலாம் சார்லஸ் ஆங்கிலக் கோயில் மதத்தையும், பிஷப்புகளையும், ஆங்கில ஸ்தோத்திரப் புத்தகத்தையும் ஒத்துக்கொள்ளும்படி ஸ்காட்டுகளை வற்புறுத்தியதன் காரணமாக "பிஷப்புகள்" யுத்தம் ஏற்பட்டு அவ்வரசன் ஸ்காட்டுகளால் தோற்கடிக்கப்பட்டான். முத

லாம் சார்லசுக்கும் பார்லிமெண்டுக்கும் நடந்த உள் நாட்டு யுத்தத்தில் ஸ்காட் சுத்தமதஸ்தர்கள் பார்லிமெண்டிற்கே உதவி செய்தார்கள். கிராம்வெல் காலத்தில் ஸ்காட் பார்லிமெண்ட் ஆங்கிலப் பார்லிமெண்டுடன் இணைக்கப்பட்டது. ஆனால், அவனுடைய முயற்சி அவனோடு இறந்துவிட்டது. ஏனென்றால், இரண்டாம் சார்லஸ் அரசனானதும் பழைய முறையே அமுலுக்கு வந்தது. இரண்டாம் ஜேம்ஸ் கத்தோலிக் ஆதலால் ஸ்காட் சுத்த மதஸ்தர்கள் அவன் ஆட்சியை விரும்பவில்லை. பிரபலக் கிளர்ச்சி நிர்மாணத்தை ஸ்காட்டுகள் ஒத்துக்கொண்டனர். க்ளென்கோ படுகொலையும், டரியன் குடியேற்ற வீழ்ச்சியும் ஸ்காட்டுகளுக்கு ஆங்கிலேயர்களின்மேல் கோபத்தை உண்டுபண்ணின. ஆன் இராணி ஆனதும் இரண்டுதேசங்களும் வேறுபடவேண்டும் அல்லது முழுமையும் ஒற்றுமைப்படவேண்டும் என்று ஜனங்கள் எண்ணினார்கள். ஸ்காட்லாந்தில் ஒரு தேசியக் கட்சி கிளம்பியது. அதற்குத் தலைவன் ஆன்ட்ரு ப்ளெட்சர் என்பவன். அவன் இரண்டு தேசங்களும் வேறுபட வேண்டும் என்றும் ஸ்காட்லாந்து சுயேச்சை அடையவேண்டும் என்றும் முயற்சி செய்தான். அவன் 1703-ல் செக்கியூரிட்டி சட்டம் (Act of Security) என்பதை ஸ்காட் பார்லிமெண்டில் நிறைவேற்றினான். அதில் ஆனுக்குப் பிறகு இங்கிலாந்தின் அரசியாவது அரசனாவது ஸ்காட்லாந்தை ஆளக்கூடாது என்று கண்டிருந்தது. ஸ்பானிய யுத்தம் நடந்துகொண்டிருந்தபடியால் ஆன் அந்த நிபந்தனையை ஏற்றுக்கொள்ளும்படி நேர்ந்தது. ஸ்காட்லாந்திற்கும் இங்கிலாந்திற்கும் விரோதம் அதிகமாக ஏற்பட்டது. ஆங்கிலேயர்கள் ஸ்காட்களுடன் செய்துக்கொண்டிருந்த வியாபாரத்தை நிறுத்தினார்கள். ஆங்கில சேனை ஸ்காட்லாந்தின் எல்லைப்புறத்திற்குக் கொண்டுபோகப்பட்டது. சீக்கிர

மாக இங்கிலாந்துடன் ஐக்கியப்படுவதினால்உண்டாகக்கூடிய நன்மைகளை ஸ்காட்டுகள் உணர்ந்தனர். பழைய ஸ்டுவர்டு வம்சம் திரும்பி வருவதில் அவர்களுக்கு இஷ்டம் இல்லை. ஆங்கிலேயருக்கும் ஸ்காட் தேசீயக் கட்சிக்கும் நடுவில் வேறொரு கட்சி ஏற்பட்டது. அந்தக் கட்சியினர் ஐக்கிய ஏற்பாட்டிற்கு வேண்டிய முயற்சியைச் செய்தனர். இரண்டு தேசத்தார்களும் ஓர் ஐக்கிய உடன்படிக்கையைச் செய்து கொண்டனர். ஐக்கியச் சட்டம் 1707-ல் நிறைவேறி அமுலுக்கு வந்தது.

ஐக்கியச் சட்டம் :—அதில் கண்டிருந்த நிபந்தனைகளின் பயனாக, இரண்டு தேசங்களுக்கும் ஒரே பார்லிமெண்ட்டு ஏற்பட்டது; ஸ்காட்டுகள் பிரபுக்கள் சபைக்கு 16 அங்கத்தினர்களையும், பொதுஜன சபைக்கு 45 அங்கத்தினர்களையும் அனுப்ப உரிமை பெற்றனர்; ஐக்கியப்பட்ட இவ்விரு தேசங்களும் சேர்ந்த பிரதேசம் கிரேட் பிரிட்டன் (Great Britain) என்று வழங்கலாயிற்று. செயிண்ட் ஆன்ட்ரூ கிராஸைக் கொண்ட ஸ்காட் வெள்ளைக் கொடியும், செயின்ட் ஜார்ஜ் கிராஸைக் கொண்ட ஆங்கிலச் சிகப்புக் கொடியும் இணைக்கப்பட்டன; இரண்டு தேசங்களுக்கும் சுயேச்சையான வியாபாரம் ஏற்பட்டது; ஸ்காட்டுகள் ஆங்கில வியாபாரத்தில் சமச் சுதந்திரங்களைப் பெற்றனர்; ஸ்காட்டுகள் தங்கள் சுத்தமதமான பிரஸ்பிடீரியன் வழியைப் பின்பற்ற அனுமதி பெற்றார்கள். ஸ்காட் நியாய சபைகளும் சட்டங்களும் ஒத்துக்கொள்ளப்பட்டன; இவ்வாறு ஸ்காட்லாந்து இங்கிலாந்துடன் ஐக்கியம் பெற்றது.

அதன் முக்கியம்:—ஸ்காட்டுகளுக்கு ஐக்கியச் சட்டம் பல நன்மைகளைக் கொடுத்தது. அவர்கள் ஆங்கிலேயர்களுடன் சமச் சுதந்திரங்களைப் பெற்று பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தின் ராணுவத்திலும், அரசாங்கத்திலும், வியா

பாரத்திலும் உன்னதப் பதவிகளை அடைந்தனர். ஆனாலும் அப்பொழுது அவர்களுக்கு மனவருத்தம் இருந்து கொண்டே இருந்தது. அந்த மனவருத்தத்தின் காரண மாக அவர்கள் ஸ்டூவர்ட்டு வம்சத்தவர்களின் சார்பாக இருமுறைகள் கிளர்ச்சியை உண்டுபண்ணி அடக்கப்பட் டார்கள். கடைசியாக ஐக்கியத்தின் நன்மைகளை அவர்கள் அடைந்து பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தில் உன்னதப் பதவி களை அடைந்தனர்.

5. ஆன் ஆட்சியில் இலக்கிய விருத்தி.

ஆன்காலம் எலிஸபெத் காலத்தைப்போல இலக்கிய விஷயங்களில் மிகவும் விருத்தி அடைந்து இருந்தது. கல்வி கற்றல் கண்ணியமானது என்று கனவான்கள் கருதினர். ஆக்ஸ்போர்டிலும், கேம்ப்ரிட்ஜிலும் விஞ்ஞான நிபுணர்களும் தத்துவ சாஸ்திரிகளும் விளங்கினர். ஸர் ஐஸாக் நியூடன் என்னும் கணித சாஸ்திர நிபுணர் ஆகர்ஷண சக்தி விதி யைக் கண்டு பிடித்தார். ஜான் ட்ரைடன் என்பவர் நாடக நூல்களை இயற்றினர். அலெக்ஸாண்டர் போப் என்னும் கவி அரியகாவியங்களைச் செய்தார். வசன நூல்கள் மிகவும் விருத்தி அடைந்தன. பத்திரிகைகளுக்கு வியாசங்கள் எழுது வோர்கள் முன்னுக்கு வந்தார்கள். ரிச்சர்ட் ஸ்டீல், ஜோஸப் அடிஸன், என்னும் இரண்டு உரைநடைநிபுணர்கள் 'டாட்லர்,' 'ஸ்பெக்டேடர்' என்னும் சஞ்சிகளை ஆரம்பித்துஅவைகளில் மேன்மையான வியாசங்களை எழுதினர். ஜோனதன் ஸ்விப்ட் என்பவர் 'கலிவருடைய பிரயாணங்கள்' என்னும் அரிய நூலை வெளியிட்டார். டேனியல் டீபோ என்னும் பெரியார் 'ராபின்ஸன் க்ரூஸோ' என்கிற அற்புதப் புத்த கத்தை எழுதினர். இவ்வாருக ஆன் காலத்தில் இலக்கி யம் மிகவும் விருத்தி அடைந்தது.

பயிற்சிகள் :

1. ஆன் இராணியின் குணங்களைப் பற்றி எழுதுக.
2. ஸாரா ஜென்னிங்ஸ் என்பவள் யார் ?
3. மார்ல்பரோவின் ஆதிசரித்திரத்தைச் சுருக்கமாக எழுதுக.
4. ஸ்பானிய அரசுரிமை யுத்தத்திற்குக் காரணங்கள் என்ன ?
5. மார்ல்பரோவின் நான்கு பெரிய வெற்றிகள் யாவை ?
6. ப்ளென்ஹீம் சண்டை எப்பொழுது, யாருக்கும் யாருக்கும் நடந்தது ? அதன் பலன்களை குறிப்பிடுக.
7. ஜிப்ரால்டார் பாறை எப்பொழுது, யார் காலத்தில் ஆங்கிலேயருக்குக் கிடைத்தது ? அதன் முக்கியம் என்ன ?
8. யூட்ரக்ட் உடன்படிக்கையின் நிபந்தனைகளைச் சொல்லுக.
9. ஓர் ஐரோப்பா படம் வரைந்து ஸ்பானிய அரசுரிமை யுத்தத்தில் நடந்த சண்டைகளைக் குறிப்பிடுக.
10. கட்சி அரசாங்கமும் மந்திரி சபையும் எவ்வாறு ஆன் காலத்தில் விருத்தி அடைந்தன ?
11. இங்கிலாந்துடன் ஸ்காட்லாந்தின் ஐக்கியம் எப்பொழுது, என், எவ்வாறு ஏற்பட்டது ? அதனால் உண்டான பலன்கள் என்ன ?
12. ஆன் ஆட்சியில் இலக்கியம் எவ்வாறு விருத்தி அடைந்தது ?

அத்தியாயம் II.

ஹனேவிரியன் வம்சம்.

ஹனேவிரியன் வம்சாவளி.

ஜேம்ஸ் I. (ஸ்டூவர்ட்டு)
|
எலிஸபெத் = ப்ரடரிக் எலெக்டர் பாலட்டைன்
|
சோபைய்யா = ஹனேவர் எலெக்டர்
|
ஜார்ஜ் I. எலெக்டர் ஹனேவர் 1714—27
|
ஜார்ஜ் II. 1727—60
|
- பிரடரிக், வேல்ஸ் இளவரசன்
  |
  ஜார்ஜ் III. 1760—1820
  |
  - ஜார்ஜ் IV 1820-30
  - வில்லியம் IV 1830-37
  - எட்வர்ட், கென்ட் ட்யூக்
    |
    விக்டோரியா இராணி
- வில்லியம், கம்பர்லண்ட் ட்யூக்

ஜார்ஜ் I, ஜாாஜ் II, இவ்வரசர்களின் ஆட்சி-வால்போலின் மந்திரி சபை - மந்திரிசபை ஆட்சியின் விருத்தி - ஆஸ்திரியா அரசுரிமை யுத்தம்-மூத்த வில்லியம் பிட் - ஏழாண்டுகளின் யுத்தம்-ஜார்ஜ் III; அவனுடைய அரசாங்க ஏற்பாடு-அமெரிக்கா சுதந்திர யுத்தம்-கைத்தொழில் கிளர்ச்சி - இளைய பிட் - ஐர்லாந்துடன் ஐக்கியம்--பிரஞ்சு கிளர்ச்சி, நெப்போலியன் யுத்தங்கள்-வியன்னு காங்க்ரெஸ்-நெப்போலியன் யுத்தங்களுக்குப் பிறகு இங்கிலாந்து-1832 சீர்திருத்தச் சட்டம்.

அதிகாரம் 1.

ஜார்ஜ் I, 1714—27;

ஜார்ஜ் II, 1727—60

முக்கியஸ்தர்கள்:—

மூத்த பாசாங்குக் காரனுன ஜேம்ஸ்
ஸர் ராபர்ட்டு வால்போல்
ஆன்ஸ்பச் கரோலினி
இளைய பாசாங்குக் காரனுன சர்லஸ் எட்வர்ட்
நியூகாவில் ட்யூக், தாமஸ் பெல்ஹாம்
மூத்த வில்லியம் பிட்.

முக்கியத் தேதிகள்:—

1714. ஜாாஜ் I பட்டத்திற்கு வருதல்
1715. ஜாகபைட் கிளர்ச்சி
1720. தென்கடல் குமிழி
1721. வால்போல் பிரதம மந்திரி ஆதல்
1727. இரண்டாம் ஜார்ஜ் அரசனுதல்
1733. எக்ஸைஸ் பில்
1742. வால்போலின் வீழ்ச்சி
1745. ஜாகபைட் கிளர்ச்சி
1748. ஏக்ஸ் உடன்படிக்கை
1756. ஏழாண்டுகள் யுத்த ஆரம்பம்
1757. மூத்த பிட் யுத்த மந்திரி ஆதல்
1759. வெற்றிகள் நிறைந்த வருஷம்
1760. ஜார்ஜ் IIன் மரிப்பு.

1. முதலாம் ஜார்ஜும் விக்கர்களின் முன்னேற்றமும்.

முதலாம் ஜார்ஜ் பட்டத்திற்கு வருதல்: முதலாம் ஜார்ஜ் ஸ்டுவேர்ட்டு வம்ச முதலாம் ஜேம்ஸின் பெரிய பேரன். அவன் ஹனேவர் சோபையாவின் குமாரன்.

எதிர்ப்பாளர் மதத்தைச் சார்ந்தவன். அவன், நிர்மாணச் சட்டத்தில் கண்டபடி ஆனுக்குப் பிறகு இங்கிலாந்தின் பட்டத்தை 1714-ல் பெற்ருன். அவன் பட்டத்திற்கு வருவதற்கு எதிராக டோரிக்கள் செய்த சூழ்ச்சி எவ்வாறு வீணுயிற்று என்பதை முன்னமேயே தெரிந்து கொண்டோம். விக்கர்கள் அவன் பட்டத்திற்கு வருவதற்கு



படம் 10. முதலாம் ஜார்ஜ்.

உதவியாய் இருந்தார்கள். ஹனேவிரியன் ஆட்சியும் ஏற்பட்டது. இதிலிருந்து விக்கர்கள் ஆதிக்யத்திற்கும், மந்திரி சபை விருத்திக்கும் இடம் உண்டாயிற்று.

அவன் குணம்: அவன் பட்டத்திற்கு வரும்பொழுது அவனுக்கு வயது ஐம்பது. அவனுக்கு சுருசுருப்புக் கிடையாது. அவன் ஹனேவரிலேயே வளர்ந்ததால் அவனுக்கு

ஆங்கில பாஷை தெரியாது. ஆங்கில அரசாட்சி முறையும் ஆங்கிலப் பழக்க வழக்கங்களும் அவனுக்கு புதியவையாகத் தோன்றின. அவன் அரசன் ஆவதற்கு விக்கர்கள் உதவி செய்தார்கள். ஆதலால் அவன் அவர்களேயே ஆதரித்தான். அவன் காலத்தில் கட்சி அரசாங்கமும் மந்திரி சபையும் முன்னேற்றம் அடைந்தன. அவனுக்கு முன் வில்லிய



படம் 11. இரண்டாம் ஜார்ஜ்.

மும் ஆனும் மந்திரி சபைக்குத் தலைமை வகித்து வந்தார்கள். முதலாம் ஜார்ஜுக்கு ஆங்கிலம் தெரியாததால் மந்திரிகளுள் ஒருவனேயே தலைமை வகிக்கும்படியாக ஏற்படுத்தப்பட்டது. அப்பேர்ப்பட்ட மந்திரிக்குப் பிரதம மந்திரி என்று பெயர் வழங்கலாயிற்று.

விக்கர்களின் ஆதிக்கியம்: முதல் இரண்டாம் ஜார்ஜ் மன்னர்கள் காலத்தில் (1714-60) விக் கட்சியினரே அரசாங்கத்தில் ஆதிக்கியம் பெற்றனர். அதற்குரிய காரணங்களாவன:--ஹனேவிரியன் அரசாட்சியை அவர்கள் ஆதரித்தார்கள்; ஆகையால் அவ்வரசர்கள் விக்கர்களை நம்பி அவர்களுக்கு உதவி செய்தார்கள். டோரிக்கள் ஜேம்ஸின் உரிமையை ஆதரித்த ஜாகபைட்டுகளுக்கு ஆதரவு கொடுப்பவர்களாகக் கருதப்பட்டார்கள். ஜாகபைட் கலகங்களை அடக்குவதற்கு அரசனுக்குப் புரிந்த உதவி விக்கர்கள் அதிகாரத்தை வலுப்படுத்தியது. அவர்கள் தங்கள் கட்சியை வலுப்படுத்திப் பார்லிமெண்டில் நெடுங்காலம் அதிகமாகத் தங்கள் இனத்தினரையே கொண்டுவந்து சேர்த்தனர். ஆகையால் ஒவ்வொரு விக்மந்திரி சபையும் நீடித்திருந்தது. உதாரணமாக வால்போல் (1721—42) பெல்ஹாம் (1744—54) முதலியவர்கள் நெடுங்காலம் மந்திரிகளாக இருந்தனர். மேலும் விக்கட்சியில் திறமை யுள்ள தலைவர்கள் இருந்தார்கள். நீண்டவிக் ஆதிக்யகாலத்தில் கட்சி அரசாங்கமும், மந்திரி சபையும் முன்னேற்றம் அடைந்தன.

2. பதினைந்தாம் ஆண்டு: ஜாகபைட் கிளர்ச்சி-1715.

காரணங்கள்:—பழைய ஸ்டூவர்ட்டு வம்சத்தினனான ஜேம்ஸ் ஆங்கிலேய அரசுப்பட்டம் தனக்குத்தான் உரியதென்று பாசாங்கு செய்தான். அதனால் அவனுக்கு மூத்த பாசாங்குக் காரன் என்ற பட்டப்பெயர் வழங்கலாயிற்று. அவன் இங்கிலாந்திலிருந்து துரத்தப்பட்ட இரண்டாம் ஜேம்ஸின் குமாரன். அவனுடைய உரிமையைப் பிரஞ்சு அரசன் ஆதரித்தான். அவனைப் பின்பற்றியவர்களுக்கு ஜாகபைட்டுகள் அல்லது ஜாகபஸ் என்கிற ஜேம்ஸைச் சார்ந்தவர்கள் என்று பெயர். பிரிட்டிஷ்தீவில் உள்ள ஜாகபைட்டுகள்

ஜேம்ஸ் உரிமையைக் கைக்கொண்டு ஹனேவர் அரசனுக்கு எதிராக 1715-ல் ஒரு கிளர்ச்சியை உண்டு பண்ணினர்கள்.

கிளர்ச்சி:— இங்கிலாந்திற்கு வடக்கே உள்ள கத்தோலிக்கர்களும்,ஸ்காட் மலைப்பிரதேசத்தவர்களும் ஜேம்ஸின் சார்பாகக் கிளம்பினர்கள். நார்தம்பர்லாந்தில் கிளம்பிய ஆங்கில ஜாகபைட்டுகள் தாமஸ் பார்ஸ்டர் என்பவன் தலைமையைக்கொண்டு கலகம் செய்தார்கள். அவர்கள் கலகம் சீக்கிரத்தில் சுலபமாக **பிரஸ்டன்** என்ற இடத்தில் அடக்கப்பட்டது. ஆனல் ஸ்காட்லாந்தில் ஏற்பட்ட கிளர்ச்சி மிகவும் மும்மரமாய் இருந்தது.மார் பிரபுவான ஜான் எர்ஸ்கின் ஸ்காட் மலைப் பிரதேசத்தவர்களைச் சேர்த்து ஸ்டுவர்ட்டு வம்சத்தைத் திருப்பிக்கொண்டு வருவதற்காக ஒரு பெரு முயற்சி செய்தான். அவன் **ப்ரேமார்** என்ற இடத்தில் எட்டாவது ஜேம்ஸின் கொடியை நாட்டினன்.மாக்டனல்டுகள், காமிரான்கள், பிரேசர்கள், மாக்கன்ஸிக்கள் முதலிய டோரி வகுப்பினர் அவனுக்கு உதவி செய்தனர். மார் ஆங்கிலச் சேனையுடன் **ஷேரிப்மூர்** என்ற இடத்தில் 1715-ல் சண்டை செய்தான். சண்டையில் வெற்றி எந்தக் கட்சிக்கு என்று சொல்ல முடியவில்லை. ஆனல் அந்தச் சண்டையின் முடிவு ஹனேவிரியன்களுக்கே நன்மையை விளைவித்தது. மார், சண்டை முடிந்ததும் பெர்த்திற்குச் சென்ருன். அவனுடைய மலைப் பிரதேசத்தவர்கள் தங்கள் தங்கள் வீடுகளுக்குச் சென்றனர். மூத்த பாசாங்குக்காரனன ஜேம்ஸ் அந்தச்சேனை கலைந்தபிறகுபிரான்ஸிலிருந்துஸ்காட்லாந்திற்கு வந்து சேர்ந்தான்.அவன் மந்த குணத்தைக் கண்டு ஸ்காட்டுகள் தங்கள் ஊக்கத்தை இழந்தனர். மார், ஜேம்ஸ், இருவரும் பிரான்சிற்குச்சென்ருர்கள். இவ்வாருகப் பதினைந்தாம்ஆண்டுக்கிளர்ச்சி ஜாகபைட்டுகளுக்குப் பயனளிக்காமல்

போயிற்று. அது ஹனேவீரியன் அரசனை வலுப்படுத்தியது. விக் கட்சியினருடைய ஆதிக்கியத்தை விருத்தி செய்தது. அதன் பலனுகப் பார்லீமெண்டின் பொதுத் தேர்தல் ஏழு வருஷங்களுக்கு ஒருதரம் ஏற்படவேண்டும் என்று 1716ல் நிறைவேற்றிய ஏழு வருஷச் சட்டம் (Septennial Act) கூறியது. ஜாகபைட் கிளர்ச்சி அபஜயம் அடைந்ததற்குப் பல காரணங்கள் உண்டு. அதன் தலைவர்கள் சக்தியில்லாதவர்கள். ஜேம்ஸ் திடமும், ஊக்கமும் அற்றவன். மிக வலிமைவாய்ந்த பிரஞ்சு அரசனுன பதினுன்காம் லூயி இறந்துவிட்டதால் அவனுக்கு இருந்த ஆதரவு குறைந்துவிட்டது. விக் அரசாங்கத்தினர் சுருசுருப்பான முறைகளை எடுத்துக்கொண்டு ஜாகபைட் கலகத்தை அடக்கினர்.

3. தேன் கடல் குமிழி, 1720.

அது இங்கிலாந்திற்கு ஏற்பட்ட ஒரு பெரிய வியாபார நஷ்டம். யூட்ரக்ட் உடன்படிக்கையிலிருந்து ஆங்கில வியாபாரம் முன்னேற்றம் அடைந்துவந்தது. பணக்காரர்கள் தங்கள் பணத்தை நல்ல வர்த்தக விஷயங்களில் போட்டு லாபம் கண்டுபிடிப்பதற்குத் தயாராக இருந்தார்கள். தேன் கடல் கம்பேனி என்று பெயருள்ள ஒரு வர்த்தகச் சங்கம் 1711-ல் ஏற்படுத்தப்பட்டது. அது ஸ்பானிய அமெரிக்காவுடன் வியாபாரம் செய்வதற்குரிய சுதந்திரத்தையும் பெற்றிருந்தது. அது வியாபாரத்தில் விருத்தி அடைந்து நல்ல லாபத்தை மேன்மேலும் அடைய ஆரம்பித்தது. அது பல விஷயங்களிலும் புகுந்தது. தேசீயக் கடனை அது நடத்துவதாக ஏற்றுக்கொண்டு அரசாங்கத்தினின்றும் அந்த உரிமையைப் பெற்றது. தேன் கடல் வர்த்தகச் சங்கத்தின் பங்குகள் விலை உயர்ந்து விற்கப்பட்டன. அவைகளின் விலை

முன்னிருந்ததைக் காட்டிலும் பத்து மடங்குகளுக்கு மேல் உயர்ந்தது. அந்த வியாபாரம் கடைசியில் ஒரு சூதாட்ட மாக முடிந்தது. பலவித வர்த்தகச் சங்கங்கள் கிளம்பின; அவைகளில் ஜனங்கள் தங்கள் பணத்தை ஏராளமாகப் போட்டார்கள். அந்த சங்கங்களுள் சில, உப்புத் தண்ணீரை நல்லஜலம் ஆக்குவதாகவும், ஸ்பெயினிலிருந்து கழுதைகளை ஏற்றுமதி செய்வதாகவும் விளம்பரம் செய்தன; மற்றும் சில, அவைகளுடைய நோக்கங்கள் பிந்தி வெளியிடப் படும் என்று கூறின. சிறிது காலத்திலேயே அந்த அநாமதேயச் சங்கங்கள் முடிவுக்குவந்தன. தென் கடல் சங்கம் அந்தக் குமிழிச் சங்கங்களின்மீது நியாய சபையில் வழக்குத் தொடுத்தது. உடனே ஒரு பெரிய கலவரம் ஏற்பட்டது. மோசடியான சங்கங்கள் நீர் குமிழிபோல் உடனே குலைந்தன. இதனுல் நல்ல சங்கங் களுடைய பங்குகள்கூட அவைகளின் விலைமதிப்பை இழக்க நேர்ந்தது. எங்கும் கலவரமும், சந்தேகமும், கஷ்ட மும் ஏற்பட்டன. மோசம் செய்தவர்களைத் தண்டிக்க வேண்டும் என்று எல்லோரும் விரும்பினுர்கள். தென்கடல் கம்பெனி அதிகாரிகளுடைய சொத்துகள் பரிமுதல் செய்யப்பட்டு அவர்கள் தங்கள் பதவியிலிருந்து துரத்தப் பட்டார்கள். மந்திரிகள் இந்த விஷயத்தில் ஈடுபட்டிருந்தார் கள் என்பது ஜனங்களுக்குத் தெரிந்ததும் அவர்களுக்குக் கோபம் உண்டாயிற்று. பார்லிமெண்டில் தீவிரமாக அவர் கள் தாக்கப்பட்டார்கள். அவர்களுள் சிலர் தற்கொலை செய்துகொண்டனர். ஆகையால் மந்திரிசபை கலைந்தது. ஸர் ராபர்ட் வால்போல் என்பவன் பிரதம மந்திரிப் பதவியை 1721-ல் பெற்று, தென்கடல் சங்கத்தை ஒழுங்குபடுத்தி நாட்டில் அமைதி உண்டாகும்படிச் செய்தான்.

4. ஸர். ராபர்ட் வால்போல்: பிரதம மந்திரி, 1721—42.

அவன் ஆரம்பச் சரித்திரம்:—வால்போல் 1676-ல் நார் போக்ஷயரில் பிறந்தான். அவன் ஈடன் பள்ளிக்கூடத்தில் நன்றாகக் கல்விகற்றான். அவன் ஆன் காலத்தில் கொடால் பின் மந்திரிசபையில் ஒரு மந்திரியாக இருந்தான். அவன் விக் கட்சியைச் சார்ந்தவன். டவுன்ஷண்ட் மந்திரிசபையில் 1714-ல் பொக்கிஷ மந்திரியாக நியமிக்கப்பட்டான். டவுன் ஷண்டின் வெளிநாட்டு நோக்கம் அவனுக்குப் பிடிக்காத தால் தன் பதவியை அவன் ராஜிநாமா கொடுத்தான். தென் கடல் குமிழி 1720-ல் உடைந்ததும், நாட்டைச் சீர்படுத்து வதற்குத் தக்கவர் ஒருவரும் இல்லாததால், அரசன் வால் போலை 1721-ல் பிரதம மந்திரியாக நியமித்தான். முதல் பிரதம மந்திரிப் பதவியை இங்கிலாந்தில் முதலாக வகித் தவன் ஸர். ராபர்ட் வால்போல் ஆவன்.

அவன் குணம்:—அவன் ஒரு பெரிய இராஜ தந்திர நிபுணன்; எப்பொழுதும் குதூகலமாக இருப்பவன்; நிதான புத்தியை உடையவன்; உலக விஷயங்களை நன்றாக அறிந்தவன். அவன் செம்மையான உழைப்பாளி; சிரமத் தைப் பாராட்டாதவன்; ஜனங்களின் நோக்கப்படி நடப்ப வன். அவன் கொண்டதே சரி என்று பிடிவாதம் பிடிப் பவன் அல்லன். அவன் காலத்தில் தேசம் மிகவும் முன் னேற்றத்தை அடைந்தது.

அவன் ஆட்சி:—கட்சி அரசாங்கமும் மந்திரி சபை விருத்தியும்:—அவன் ஆட்சியில் கட்சி அரசாங்கமும் மந்திரி சபையும் விருத்தி அடைந்தன. அவனுக்கு அனு கூலமாயுள்ள விக் கட்சியினர் பார்லிமெண்டில் அதிகமாக யிருக்க வேண்டியதற்கு அவன் ஏற்பாடுகளை எடுத்துக் கொண்டான். தன் கட்சிப் பிரதிநிதிகள் பொதுத் தேர்

தலில் திரும்பி வருவதற்கு ஏராளமாகப் பணம் செலவழித்தான். அவன் மந்திரிசபையை ஒழுங்காக அமைத்தான். அவன் முதல்பிரதம மந்திரியானதால் மற்றைய மந்திரிகள் தனக்கு அடங்கி நடக்க வேண்டும் என்று கட்டளையிட்டான். அதற்கு மாருக நடந்தவர்களை வீட்டுக்கு அனுப்பினுன். மந்திரிகள் எல்லோரும் அவனுல் விக் கட்சியிலிருந்தே நியமிக்கப்பட்டனர். அவர்கள் எல்லோரும் ஒரேவித அபிப்பிராயம் உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று ஏற்பாடு செய்தான். அவர்களில் எவரும் மந்திரிசபை இரகசியங்களை வெளியிடக்கூடாது. தற்காலத்திய மந்திரிசபையின் விதிகள் எல்லாம் பெரும்பாலும் வால்போல் காலத்தில்தான் ஏற்பட்டன. அவனுடைய ஆட்சி முறையை டோரிக்களின் தலைவனுன பாலிங் புரோக்கும், விக் இளைஞர்களின் கூட்டத்திற்குத் தலைவனுன வில்லியம் பிட்டும் எதிர்த்து வந்தார்கள். ஆயினும் அவன் சாமர்த்தியமாக நடந்து கொண்டதால் அவன் ஆட்சி நெடுங்காலம் நீடித்திருந்தது.

பண விஷயம்:—அவனிடம் பொக்கிஷ இலாகா இருந்தது. இங்கிலாந்தின் பொக்கிஷ மந்திரிகளுக்குள் அவன் சிறந்தவன் ஆவன். அவன் பணவிஷயங்களில் நிபுணன்; கணக்குகளைக் கவனிப்பதில் கெட்டிக்காரன். அவன் மந்திரிப் பதவி பெற்றதும் தென் கடல் குமிழியினுல் ஏற்பட்ட நஷ்டத்திலிருந்து தேசத்தைக் காப்பாற்றினுன். தேசியக் கடன் குறைவதற்கு ஒரு தனிப்பட்ட குறைக்கும் நிதி (Sinking Fund) யை ஏற்படுத்தினுன். அவன் இங்கிலாந்தில் சுயேச்சை வியாபாரம் (Free trade) விளங்குவதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக் கொண்டான். அவன் இங்கிலாந்தின் சுயேச்சை வியாபார நிபுணர்களில்

முதல்வன் ஆவன். அவனுக்கு முன், தேச ஏற்றுமதிகள் இறக்குமதிகள் எல்லாவற்றின்பேரிலும் அதிகமான வரிகள் விதிக்கப்பட்டிருந்தன. அவன் சில வரிகளைத் தள்ளியும் அநேக சாமான்களின் வரிகளைக் குறைத்தும் நாட்டில் வியாபாரம் அதிகரித்துச் செழித்து ஓங்கும் படிச் செய்தான். அவன் 1733-ல் கலால சட்டம் (Excise Bill) என்பதைப் பார்லிமெண்டில் கொண்டுவந்தான். அதன்படி சாராயம், புகையிலை இவ்விரண்டையும் இறக்குமதி வரி விதிக்காமல் உள்நாட்டில் உபயோகப்படுத்தும்பொழுது உள்நாட்டு வரி விதிக்க வேண்டும் என்று நியமிக்கப்பட்டிருந்தது. ஆனால் அதற்கு எதிர்ப்பு அதிகமாக இருந்தபடியால் அது சட்டமாக்கப்படவில்லை. அதிலிருந்து வால்போலின் சுயேச்சை வியாபார நோக்கம் நமக்குத் தெரிகிறது.

அவன் மதத்தரிப்பு:—மத விஷயங்களில் அவன் விசாலமான நோக்கத்தைக் கொண்டிருந்தான். சுத்தமத எதிர்ப்பாளர் (Puritan Dissenters) களுக்கு உத்தியோகங்களைக் கொடுத்தான். நாட்டிலுள்ள மத விரோதச் சட்டங்களை நீக்குவதற்கு அவனுக்கு இஷ்டம் இல்லை. ஏனென்றால் ஆங்கிலமதக் கோயிலாளர்கள் அவைகளை விலக்குவதற்கு விரோதமாக இருந்தார்கள். அவன் பொதுவாக மதத்தரிப்பு காட்டி நாட்டில் அமைதி உண்டு பண்ணினன்.

குடியேற்ற நாடுகளின் அபிவிருத்தி:-அவன் குடியேற்ற நாடுகளின் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டான். அவன் காலத்தில்தான் அதாவது 1733-ல் ஜார்ஜியா குடியேற்ற நாடாயிற்று. அதற்கு இரண்டாம் ஜார்ஜ் பெயரை ஒட்டி அவ்வாறு பெயர் கொடுக்கப்பட்டது. வால்போல் குடியேற்ற நாடுகளுக்குப் பல சுதந்திரங்களைக் கொடுத்தான்.

அவன் வெளி நாட்டு நோக்கம்:—அவன் வெளி நாடுகளுடன் சண்டையில்லாமல் சமாதானமாக இருக்கவேண்டும் என்று விரும்பினன். "தூங்கும் நாய்களை எழுப்பக் கூடாது" (Let sleeping dogs lie) என்பதுதான் அவனது நோக்கம். அவன் காலத்தில் இங்கிலாந்து ஐரோப்பிய யுத்தங்களில் ஈடுபட்டுக் கொள்ளவில்லை. அதற்குக் காரணம் அவனுடைய சமாதான நோக்கமே ஆகும். ஐரோப்பாவில் நடந்த போலிஷ் யுத்தத்தில் பதினாயிரம் வீரர்கள் இறந்தார்கள்; ஆனால் அதில் ஆங்கிலேயன் ஒருவனும் இல்லை என்று இரண்டாம் ஜார்ஜின் மனைவி கரோலினி இடத்தில் அவன் சொன்னன். அவன் என்ன சொல்லியும் ஜனங்கள் யுத்த முஸ்திப்பிலேயே இருந்தார்கள். அவன் தன் சமாதான நோக்கத்திற்கு எதிராக 1739-ல் ஸ்பெயின் தேசத்துடன் யுத்தம் செய்ய நேரிட்டது. ஏனென்றால் அமெரிக்காவில் உள்ள ஸ்பானியர்கள் ஜெங்கின்ஸ் என்னும் ஆங்கில வர்த்தகனுடைய காதை அறுத்து அவனைத் தொந்திரவு செய்தார்கள். இதைச் சொல்லி அவன் தன்னுடைய அறுந்த காதையும் ஆங்கிலேயர்களுக்குக் காண்பித்தான். ஆகையால் இங்கிலாந்தில் ஸ்பானியர்கள் மீது கொதிப்பு அதிகமாயிற்று. வால்போல் வேறு வழியில்லாமல் யுத்தத்திற்குச் சம்மதித்தான். அந்த யுத்தத்திற்கு ஜேன்கின்ஸின் காதுயுத்தம் (Jenkins' Ear War) என்று பெயர். குதூகலத்துடன் ஜனங்கள் யுத்தத்தை வரவேற்றனர். வால்போல் அவர்களைப் பார்த்து "நீங்கள் இப்பொழுது சந்தோஷத்துடன் மாதாகோயில் மணியை அடிக்கிறீர்கள்; சீக்கிரமாக உங்கள் கையைப் பிசைவீர்கள்" என்று சொன்னன். அவன் யுத்தத்தை அரை மனதுடன் நடத்தினன்.

அவன் இராஜிநாமா கொடுத்தல்:—சிறியதாக ஆரம்பிக்கப்பட்ட ஜென்கின்ஸ் காது யுத்தம் ஒரு வருஷத்தில் முடிந்துவிடும் என்று வால்போல் எண்ணினான். ஆனால் அது வளர ஆரம்பித்தது. **ஆஸ்திரிய அரசுரிமை யுத்தம்** என்கிற பெரிய போர் **1740**-ல் ஆரம்பமாயிற்று. அதில் இங்கிலாந்து தலையிட்டுக் கொள்ள வேண்டும் என்று ஜனங்கள் விரும்பினர். வால்போலுக்கு யுத்தம் செய்ய இஷ்டம் இல்லை. ஆதலால் அவன் **1742**-ல் இராஜிநாமா கொடுத்து மந்திரி வேலையிலிருந்து விலகிக்கொண்டான். அரசன் அவனுக்கு ஆர் போர்டு பிரபு என்கிற பட்டத்தைக் கொடுத்தான். வால்போல் அதற்குப் பின் மூன்று வருஷங்கள் ஜீவித்திருந்து **1745**-ல் தேக வியோகமானான். சமாதானம் நிறைந்த அவனுடைய நீடித்த ஆட்சியில் இங்கிலாந்து சுபிக்ஷமாக இருந்தது. அவன் இங்கிலாந்தின் சிறந்த பிரதம மந்திரிகளில் ஒருவன் ஆவன்.

5. ஆஸ்திரிய அரசுரிமை யுத்தம்.

War of the Austrian Succession (1740—48)

காரணங்கள்:—இந்த யுத்தம் ஆஸ்திரிய அரசு நிலைமையைப் பற்றி இங்கிலாந்திற்கும் ப்ரான்சிற்கும் ஆரம்பம் ஆயிற்று. ஆஸ்திரியாவின் சக்கரவர்த்தியான ஆறும் சார்லஸ் **1740**-ல் இறந்தான். அவன் இறக்கும் முன் **ப்ராக்மாடிக் சான்க்ஷன் (Pragmatic Sanction)** என்னும் சாஸனத்தில் அவனுடைய அரசுரிமை அவனுக்குப் பிறகு அவன் குமாரி மேரியா தெரிசா **(Maria Theresa)** வுக்கே உரியது என்றும், அவனுடைய இராஜ்ஜியம் முழுமையும் அவளே சக்கரவர்த்தினியாக ஆளவேண்டும் என்றும் எழுதி, ஐரோப்பிய முக்கிய அரசர்களின் சம்மதத்தின் அறிகுறியாக அவர்களுடைய கை எழுத்துக்களை

வாங்கியிருந்தான். ஆனால் அவன் இறந்த உடனே ப்ரஷ்யா வின் அரசனான ப்ரடரிக் (Frederick) ஆஸ்திரியாவின் மீது படை எடுத்து அதனிடம் இருந்து ஸைலீஷியா (Silesia) வைப் பிடுங்கிக்கொண்டான். மேரியா தெரிஸா கோபம்கொண்டு பிரஷ்யாவுடன் யுத்தத்திற்கு சென்றாள். ப்ரான்ஸ், ஸ்பெயின், ஸார்டினியா முதலிய தேசங்கள் பிரஷ்யாவுடன் சேர்ந்தன. பிரான்ஸ் இங்கிலாந்திற்கு விரோதி ஆதலால், இங்கிலாந்து, ஹாலந்தையும் சேர்த்துக் கொண்டு ஆஸ்திரியாவுக்கு உதவி செய்தது. பிரஞ்சுக்காரர் களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் ஏற்கனவே உள்ள கடல் ஆதிக்யமும், குடியேற்ற நாடுகளின் விருத்தி வியாபாரம் முதலிய விஷயங்களின் நிமித்தம் ஏற்பட்ட விரோதமும் யுத்தத்தை வலுக்கச் செய்தது.

விவரங்கள்:—இரண்டாம் ஜார்ஜ் ஆங்கிலச் சேனைக் குத் தலைமை வகித்து ஹனேவரைப் பிரஞ்சு எதிர்ப்பி லிருந்து காப்பதற்குச் சென்றான். அவன் 1743-ல் மெயின் நதிக்கரையில் உள்ள டேடின்ஜன் (Dettingen) என்ற இடத்தில் பிரஞ்சு சேனையோடு சண்டை செய்து வெற்றி பெற்றான். அதுதான் ஆங்கில அரசன் தலைமையின் கீழ் நடந்த கடைசிச் சண்டை. அந்தச் சண்டையின் வெற்றி யினால் ஆங்கிலேயர் பிரஞ்சு எதிர்ப்பிலிருந்து ஹனே வரைக் காப்பாற்றினார்கள். பிறகு பிரஞ்சுப் படை நெதர் லாண்ட்ஸை எதிர்த்தது. அதைக் காப்பதற்கு இங்கிலாந்தி லிருந்து ஓர் ஆங்கிலச் சேனை சென்றது. அதற்குத் தள கர்த்தன் அரசனின் குமாரனான கம்பர்லண்டு ட்யூக் வில்லி யம் என்பவன். அவன் பிரஞ்சு சேனையை 1745-ல் பாண்டி னாய் (Fontenoy) என்ற இடத்தில் எதிர்த்துச் சண்டை யிட்டான். அவன் தீவிரமாகப் போர் புரிந்தும் தோல்வியே

அடைந்தான். அந்தத் தோல்வியினுல் இங்லாந்திற்குப் பல தீமைகள் விளைந்தன. பிரஞ்சுக்காரர்கள் நெதர்லாண்ட்வில் உள்ள எல்லைப்புறக் கோட்டைகளைப் பிடித்துக்கொண்டனர். அரசனின் அபஜயத்தைக்கேட்டு ஜாக்கபைட்டுகள் ஒரு பெரிய கிளர்ச்சியை உண்டுபண்ணினர். அதற்குப் பின் ஐரோப்பிய யுத்தம் மூன்று வருஷங்கள் நடந்தது. நிலச் சண்டையில் பிரஞ்சுக்காரர்கள் வெற்றிபெற்றனர். கடல் சண்டையில் ஆங்கிலேயரே ஜபம் அடைந்தனர். ஆன்சன் என்னும் ஆங்கில மாலுமி ஸ்பானியர்களைப் பசிபிக் சமுத்திரத்தில் தோற்கடித்து உலகம் முழுவதையும் கடல் மார்க்கமாகச் சுற்றிவந்தான்.

ஏக்கன் சமாதான உடன்படிக்கை:—யுத்தம் 1748-ல் ஏக்கன் அல்லது எயிக்ஸ் லா சப்பேல் (Aix las Chapelle) சமாதான உடன்படிக்கையால் முடிவு பெற்றது. அதன்படி ஆங்கிலேயரும் பிரஞ்சுக்காரரும் அவரவர்கள் பிடித்த நாடுகளையும் கைதிகளையும் திருப்பிக் கொடுத்துவிட்டார்கள். ஸைலிஷியாவைப் பிரஷியா, ஆஸ்திரியாவினிடம் இருந்து கைக்கொண்டது. ஏக்கன் உடன்படிக்கை ஐரோப்பாவில் நீடித்ததான அமைதியை ஏற்படுத்தவில்லை. ஏனென்றுல் மேரியா தெரிசா கோபம்கொண்டு ஸைலிஷியாவைத் திரும்பவும் கைப்பற்ற யுத்தம் செய்வதற்கு ஆயத்தம் செய்து கொண்டிருந்தாள்.

6. நாற்பத்தைந்தாம் ஆண்டு ஜாகபைட் கிளர்ச்சி (1745)

காரணங்கள்:—ஜாகபைட்டுகள், ஆங்கிலச் சேனை 1745-ல் பாண்டினுயில் தோல்வி அடைந்ததைக் கேள்விப்பட்டதும் சந்தோஷம் அடைந்து பழைய ஸ்டுவர்ட் வம்சத்தைத் திரும்பவும் கொண்டுவருவதற்குக் கிளர்ச்சி செய்தார்கள். இப்பொழுது ஜாகபைட் கிளர்ச்சிக்குத் தலைமையாக


சார்லஸ் எட்வர்ட் சென்ற மார்க்கம்
ஜாகபைட் கிளர்ச்சிகள்
1715, 1745
x கல்லோடன் மூர் 1746
மாயுடார்ட்
வட
கடல்
பர்த்
ஷெரிப் மூர் 1715
பால்கர்க் 1746
x பிரெஸ்டன்பான்ஸ் 1745
எடின்பரோ
செவியட் குன்றுகள்
கம்பர்லந்து
லாங்காஷயர்
ஐரிஷ்
கடல்
டர்பீ

படம் 12.

ஜேம்ஸின் குமாரனுன இளைய பாசாங்குக்காரன் என்று சொல்லப்பட்ட சார்லஸ் எட்வர்ட் ஸ்டூவர்ட் கிளம்பினுன். இவன் தன் தகப்பன்மாதிரி இல்லாமல் சுரு சுருப்பும் ஊக்கமும் உள்ளவன். பிரஞ்சு அரசனுன பதினைந்தாம் லூயி அவனுக்கு உதவி செய்வதாக உறுதி கூறினுன். ஆகையால் அவன் ஒரு பெரிய கிளர்ச்சியை உண்டுபண்ணினுன்.

கிளர்ச்சி:—சார்லஸ் எட்வர்ட் 1745-ல் தன்னுடைய சில ஜாகபைட் தோழர்களுடன் ஸ்காட்லாந்தின் மலைப் பிரதேசத்தின் மேற்குப்புறத்தில் உள்ள மாய்டார்ட் இடத்தில் வந்து இறங்கினுன். மலைப் பிரதேசத்தவர்கள் அவனுடன் உத்சாகத்துடன் சேர்ந்துகொண்டார்கள். அவன் அவர்களைச் சேர்த்துக்கொண்டு எடின்பரோவுக்கு வந்து சேர்ந்தான். அவன் ஜெனரல் கோப் (Cope) என்னும் தளகர்த்தனுடைய தலைமையின்கீழ்த் தன்னை எதிர்த்த பிரிட்டிஷ் சேனையை பிரஸ்டன் பான்ஸ் சண்டையில் தோற்கடித்தான். ஸ்காட்லாந்து முழுவதிலும் அவன் நிமித்தமாக ஒரு பெரிய கலவரம் ஏற்பட்டது. பிறகு இங்கிலாந்தின் மேல் அவன் படை எடுத்து, கம்பர்லண்டு, லாங்காஷயர் வழியாக டார்பி (Derby) வரைக்கும் வந்தான். ஆனுல் அவனுக்குப் பயம் மேலிட்டபடியால் திரும்பி ஸ்காட்லாந்திற்குச் சென்றுன். அவன் 1746-ல் பால்கர்க் (Falkirk) சண்டையில் ஜயம்பெற்றுன். ஒரு பிரிடிஷ் சேனை கம்பர்லண்டுட்யூக் வில்லியத்தின் தலைமையின்கீழ் அவனைத் துரத்திச் சென்று 1746-ல் கலடன்மூர் (Culloden Moor) சண்டையில் தோற்கடித்தது. இதுதான் பிரிட்டிஷ் பூமியில் நடந்த கடைசிச் சண்டை. இளைய பாசாங்குக்காரன் பிரான்ஸிற்கு உயிர் தப்பி ஓடிவிட்டான். ஸ்காட் மலைப்பிர

தேசத்தவர்களே கம்பர்லண்டினுல் அடக்கப்பட்டார்கள். மிகவும் கடுமையாக அவன் நடந்துகொண்டமையால் அவனுக்குக் "கசாப்புக்காரன்" (Butcher) என்று பெயர் வந்தது. மலேப்பிரதேசத்தவர்கள் தங்கள் ஆயுதங்களேப் பறிகொடுத்தனர். ஸ்காட்லாந்தில் அமைதி ஏற்பட்டது. ஸ்காட் வீரர்கள் ஆங்கிலச் சேனையில் சேர்ந்துகொண்டனர். ஹனேவிரிய அரசாங்கம் நிலே நிறுத்தப்பட்டது.

7. மூத்த வில்லியம் பிட்.

William Pitt, the Elder (1708-78)

அவன் ஆதி சரித்திரம்:—மூத்த வில்லியம் பிட் இங்கிலாந்தின் இராஜீய நிபுணர்களில் சிறந்தவன். அவன் சென்னே கவர்னராக இருந்த தாமஸ் பிட்டின் பேரன். அவன் 1708-ல் பிறந்தான். பார்லிமெண்ட் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1735-ல் அதில் ஒரு மெம்பர் ஆனுன். விக் கட்சியில் சேர்ந்து அதில் உள்ள இளேஞர்களுக்குத் தலேவனுகி வால்போல் அரசாங்கத்திலிருந்த லஞ்சம் முதலிய கெடுதிகளே எதிர்த்தான். அவன் ஹென்ரி பெல்ஹாம் மந்திரிசபையில் சேனேக்குச் சம்பளம் கொடுக்கிற (Pay master of the Forces) பதவியை 1746-ல் பெற்றுன். நியூகாஸில் ட்யூக், தாமஸ் பெல்ஹாம் மந்திரியானதும் அவனுடன் சண்டை போட்டுக்கொண்டு 1754-ல் தன் வேலேயிலிருந்து நீங்கி அவனே எதிர்த்து வந்தான். ஏழாண்டுகள் போர் 1756-ல் ஆரம்பித்தது; இங்கிலாந்திற்கு உலகத்தில் எல்லாப் பக்கங்களிலிருந்தும் அபஜயமே கிடைத்தது. நியூகாஸிலினுல் யுத்தத்தை நடத்த இயலவில்லே. ஆகையால் 1757-ல் பிட்டை அரசன் யுத்த மந்திரியாக நியமித்தான்.

அவன் குணம்:—அவனிடத்தில் நற்குணங்கள் மிகுந்திருந்தன. அவன் ஒரு பெரிய தேசாபிமானி. தேசத்தின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டான். அவனிடத்தில் ஜனங்களுக்குப் பிரியம் அதிகம், ஆகையால், அவனுக்கு 'பெரிய பொதுஜனப் பிரியன்' (Great Commoner) என்று பெயரிடப்பட்டது. அவன் பேச்சுவன்மை மிகுந்தவன். அவன் உண்மையை விரும்பினுன்; பொய் சொல்பவர்களையும் லஞ்சம் வாங்குபவர்களையும் அவன் வெறுத்தான்; சுத்தமான மனதை உடையவன்; ஆங்கிலப் பொது ஜன சமூகத்தின் பரிசுத்தத்திற்குப் பாடுபட்டான். ஆனுல் அவன் ஆடம்பரப்பிரியன்; தற்புகழ்ச்சியில் ஈடுபட்டவன். ஆயினும் பதினெட்டாம் நூற்ருண்டு ஆங்கில இராஜ தந்திர நிபுணர்களில் சிறப்பு மிகுந்தவன் இவனே ஆவன்.

அவன் யுத்தமந்திரி வேலை:—அவன் ஏழாண்டுகள் போரில் இங்கிலாந்தின் தோல்விகளை வெற்றிகளாக மாற்றினுன். யுத்த மந்திரிக்குரிய உன்னத குணங்கள் அவனிடத்தில் இருந்தன. அவனுக்கு தைரியம் அதிகம். அந்தத் தைரியத்தைப் பிறருக்கு உண்டுபண்ணும் சக்தியும் அவனிடத்தில் உண்டு. "நானே இங்கிலாந்தை ஆபத்திலிருந்து காப்பாற்ற முடியும்; பிறரால் முடியாது" என்று அவன் கூறினுன். அவன் பெரிய யுத்த திட்டங்களை ஏற்படுத்துவதில் சமர்த்தன். பொறுமையுடன் சிரமத்தைப் பாராட்டாது தான் ஏற்படுத்திய திட்டங்களின்படி நடந்து வந்தான். நல்ல தளகர்த்தர்கள் யார் என்பதைக் கண்டுபிடித்து அவர்களை முன்னுக்குக் கொண்டுவருவதில் திறமை உள்ளவன். சிறந்த வீரர்களும் மாலுமிகளும், சேனையிலும் கப்பற்படையிலும் உயர்ந்த பதவிகளைப் பெற்ருர்கள். அப்பேர்ப்பட்டவர்களில் சிலர் ஊல்ப், (Wolfe) க்ளைவ்

(Clive) என்பவர்கள். அவனுடைய யுத்த திட்டங்கள் மிகவும் திறமையானவை. அவன் பிரஷ்யாவுக்கு வேண்டிய யுத்த சாமான்களை அனுப்பிப் பிரான்ஸைத் தோற்கடிக்கும் படிச் செய்தான். பிரஞ்சு ஊக்கத்தை ஐரோப்பாவிலேயே இல்லாதபடி ஒழிக்க வேண்டும் என்பது அவனுடைய நோக்கம்.

"நாம் எல்ப் நதிக்கரையில் கனடாவை ஜயிக்கலாம்" என்று சொன்னான். பிரஞ்சு கடற்கரையிலிருந்து அதன் மாலுமிகள் வெளிக்கிளம்ப முடியாமல் ஆங்கிலக் கப்பற் படையை முற்றுகையிடச் செய்தான். அதனால் பிரஞ்சுக் காரர்கள் தங்கள் குடியேற்ற நாடுகளையும், வியாபாரத்தை யும் காப்பாற்ற முடியாமற் போயிற்று. அவன் முயற்சியால் இங்கிலாந்திற்கு மேன்மேலும் வெற்றிகளை தொடர்ந்து வந்தன. அவனுக்கு வெற்றிதரும் நிபுணன் (Inspirer of Victories) என்ற பிருதுப்பெயர் உண்டாயிற்று. ஐரோப்பா, கனடா, இந்தியா, கடல் முதலிய இடங்களி லிருந்து 1759-ல் ஜயம் நிறைந்த செய்திகள் இங்கிலாந் திற்கு வந்தன.

அவன் இராஜிநாமா கொடுத்தல்:—புது அரசனாக 1760-ல் வந்த மூன்றாம் ஜார்ஜ் அரசன் அவனுடைய யுத்த முஸ்திப்பையும் விக்கர்களின் ஆதிக்யத்தையும் விரும்ப வில்லை. 1761-ல் ஸ்பெயின், பிரான்சுடன் சேர்ந்ததால், பிட் அந்த தேசத்துடன் யுத்தத்திற்குப்போகவேண்டும் என்றான் அரசனும் மந்திரிசபையினர்களும் அதற்கு எதிராக இருந் தார்கள். ஆகையால் அவன் யுத்த மந்திரிப் பதவியிலிருந்து நீங்கினான். அரசன் அவனுக்குச் சாதாம் பிரபு என்கிற பட் டத்தைக் கொடுத்தான். சாதாம் 1766-ல் பிரதம மந்திரியாக இருந்தான். அமெரிக்கக் குடியேற்ற நாடுகளை இங்கிலாந்து செம்மையாக நடத்த வேண்டும் என்றும், ஐர்லாந்தைச் சமாதானப் படுத்தவேண்டும் என்றும், இந்தியாவிற்கு நல்ல

அரசாங்கம் கொடுக்கவேண்டும் என்றும், பார்லிமெண்ட் சீர்திருத்தப்படவேண்டும் என்றும் அவன் விரிவான நோக்கங்களைக் கொண்டிருந்தான். அவன் 1778-ல் பிரபுக்கள் சபையில் பேசிக்கொண்டிருக்கும்பொழுது அசௌகரியமாகக் கீழே விழுந்தான். கீழே விழுந்த அவன் வீட்டுக்குக் கொண்டுபோகப்பட்டு உயிரை நீத்தான். மிகவும் பரந்த எண்ணங்களை உடைய இராஜ தந்திர நிபுணன் அவனேயாவன்.

8. ஏழாண்டுகள் யுத்தம்
The Seven Years' War (1756–63)

காரணங்கள்:—இங்கிலாந்திற்கும் பிரான்சிற்கும் ஏழு வருஷங்கள்நடந்தயுத்தத்திற்கு ஏழாண்டுகள் யுத்தம் என்று பெயர். ஏக்ஸ்லா ஷப்பேல் உடன்படிக்கையின்படி மேரியா தெரிசா ஸைலிஷியாவைப் பிரஷியாவுக்குக் கொடுக்கும்படியாக நேரிட்டதால் அவள் கோபம் மிகுந்து யுத்தத்திற்குத் தயாரானாள். அவளுக்குப் பிரான்ஸ் உதவி செய்ய வந்தது. பிரான்ஸ் இங்கிலாந்தின் விரோதியானதால் ஆங்கிலேயர் பிரஷ்யாவுக்கு உதவி செய்தனர். ஆங்கில மாலுமிகளும் பிரஞ்சு மாலுமிகளும் அடிக்கடி கடலில் சச்சரவு செய்துகொண்டிருந்தனர். அமெரிக்காவில் பிரஞ்சுக்காரர்கள் ஆங்கிலேயர்களை ஆலிகானி மலைகளுக்கு மேற்கில் போகக் கூடாதென்று தடுத்து, பிரஞ்சு குடியேற்ற நாடுகளாகிய லூயிஸியானாவையும் கானடாவையும் சேர்க்க வரிசையாகக் கோட்டைகளைக் கட்டினார்கள். இந்தியாவில் ஆங்கில, பிரஞ்சு வர்த்தகச் சங்கங்கள் சச்சரவுகள் செய்துகொண்டுசுதேசநவாப்புகள் விஷயங்களில் ஈடுபட்டுத் தங்கள் தங்கள் அதிகாரத்தை நிலை நிறுத்த முயன்றன. இவ்வாறு 1756-ல் உலகம் முழுதும் ஆங்கிலேயருக்கும் பிரஞ்சுக் காரருக்கும் பெருத்த யுத்தம் ஏற்பட்டது.


பிரிடிஷ் தீவுகள்
மின்டன் 1759.
க்வீபெக்
1759
லாஹோகி
1759
பிளாஸி
1759
ஏழாண்டுகள்போர் 1756-63

படம் 13.

விஷயங்கள் :—இங்கிலாந்தின் அபஜயங்கள் :—ஆரம்பத்தில் இரண்டு வருஷங்கள் வரையில் (1756-57) இங்கிலாந்துக்குப் பல இடங்களிலிருந்து அபஜயங்கள் வந்து கொண்டிருந்தன. ஹனேவரிலிருந்த ஆங்கிலச் சேனை பிரஞ்சுக்காரரால் தோற்கடிக்கப்பட்டது. மத்திய தரைக்கடலில் உள்ள மினர்க்காவில் ஆங்கிலக் கப்பற்படைத் தலைவன் பிங் (Byng) பிரஞ்சுக்காரருடன் சண்டையிடுவதற்குப் பின் வாங்கியதன் காரணமாக ஆங்கில அரசாங்கத்தால் தூக்கில் போடப்பட்டான்.

அமெரிக்காவில் ஆங்கிலதளகர்த்தன் ப்ராடாக் (Braddock) பின்புறக் காடுகளில் தாக்கப்பட்டு பிரஞ்சுக்காரர்களிடத்தில் தன் சேனையுடன் சரணாகதி அடைந்தான். இந்தியாவில் வங்காள நவாப்பான சுராஜ் உட் டவுலா பிரஞ்சு உதவியைக்கொண்டு கல்கத்தாவைக் கைக்கொண்டு ஆங்கிலேயர்களைச் சிறையில் போட்டான்.

இங்கிலாந்தின் வெற்றிகள் (1757-63):—பிட் 1757-ல் யுத்த மந்திரி ஆனதும் விடாமுயற்சியுடன் உழைத்து இங்கிலாந்துக்கு வெற்றிகளைக் கொடுத்தான். 1759-ஆம் வருஷத்திற்கு வெற்றிகள் நிறைந்த வருஷம் என்று பெயர். அந்த வருஷத்தில் பல இடங்களில் இருந்து ஆங்கிலேயர்களுக்கு ஜயங்கள் வந்துகொண்டிருந்தன. ஜெர்மனியில் ஆங்கில சேனைத்தலைவன் பிரன்ஸ்விக் பர்டினண்ட் (Ferdinand of Brunswick) பிரஞ்சு சேனையை மின்டன் (Minden) சண்டையில் தோற்கடித்தான். குவிபிரான், லாகாஸ் கடல் சண்டைகளில் ஆங்கிலக் கப்பற்படை ஜயம் பெற்று பிரஞ்சு படையெடுப்பிலிருந்து இங்கிலாந்தைக் காப்பாற்றியது. கனடாவில் நடந்த குவீபெக் (Quebec) சண்டையில் ஆங்கிலவீரன் ஊல்ப் (Wolfe) பிரஞ்சுவீரன்

மான்ட்காம் (Montcalm) என்பவனைத் தோற்கடித்தான். சண்டையில் அவ்விரு வீரர்களும் இறந்தனர். இந்தியாவில் ஆங்கில தளகர்த்தன் க்ளைவ் சுராஜ் உட் டவுலாவை பிளாஸிச் சண்டையில் 1757-ல் தோற்கடித்து ஆங்கில அதிகாரத்தை வங்காளத்தில் ஸ்தாபித்தான். ஸர் அயர் கூட் பிரஞ்சுசேனையை வாண்டிவாஷ் சண்டையில் 1760-ல் முறி அடித்தான். அடுத்த வருஷத்தில் புதுச்சேரி ஆங்கிலேயர் கைவசம் ஆயிற்று. யுத்தம் கொஞ்சகாலம் நடந்தது. பாரிஸ் உடன்படிக்கையால் முடிவுக்கு வந்தது.

பாரிஸ் சமாதான உடன்படிக்கை (1763):—அந்த உடன்படிக்கையில் கண்ட விஷயங்களாவன: இங்கிலாந்துக்குப் பிரான்ஸினிடமிருந்து கனடா, கேப் பிரட்டன் தீவு, மினர்க்கா, டொபாகோ, க்ரேனடா, செயின்ட் வின் சென்ட், டாமினிக்கா முதலிய மேற்கு இந்தியத் தீவுகளும், ஆப்பிரிக்காவில் உள்ள செனிகல் பிரதேசம் முதலியவைகளும், ஸ்பெயினிடமிருந்து ப்ளோரிடாவும் கிடைத்தன. இந்தியாவில் பிரஞ்சுக்காரர்களுடைய வியாபார ஸ்தலங்கள் திருப்பிக் கொடுக்கப்பட்டன; ஆயினும் அவர்களுடைய அதிகாரம் ஒழிந்து ஆங்கிலேயர்களே ஆதிக்யம் பெற்றனர். ஆங்கில சாம்ராஜ்யம் உலகத்தில் தீவிரமாக விருத்தியாயிற்று.

பயிற்சிகள்

1. முதலாம் ஜார்ஜ் ஸ்டுவர்ட்டு வம்சத்தவர்களுக்கு என்ன உறவு? ஒரு வம்சாவளி வரைந்து காட்டுக.

2. முதலாம் ஜார்ஜ் எந்த உரிமையின் காரணமாக இங்கிலாந்தின் அரசன் ஆனன்?

3. முதலாம் ஜார்ஜின் குணங்கள் என்ன? அவன் காலத்தில் என் மந்திரி சபை விருத்தியாயிற்று?

4. விக்கர்களின் ஆதிக்யத்திற்குக் காரணங்கள் யாவை?

5. "பதினைந்தாம் ஆண்டு" கிளர்ச்சி என்றால் என்ன? அது எவ்வாறு அடக்கப்பட்டது? அதனால் என்ன பலன்கள் உண்டாயின?

6. தென் கடல் குமிழியைப்பற்றி ஒரு குறிப்பு எழுதுக.

7. இங்கிலாந்தின் முதல் பிரதம மந்திரி யார்? அவன் செய்த விஷயங்களைச் சுருக்கமாகச் சொல்க.

8. 'காபினெட்' என்றால் என்ன?

9. ஆஸ்திரிய அரசுரிமை யுத்தத்தில் இங்கிலாந்து அடைந்த வெற்றி எது? தோல்வி எது?

10. 'நாற்பத்தைந்தாம் ஆண்டு' கிளர்ச்சி யாரால், என், எப்படி உண்டாயிற்று?

11. மூத்த வில்லியம் பிட் ஏழாண்டுகள் போரில் இங்கிலாந்திற்கு என்ன உதவி செய்தான்? அவன் ஏன் தன் வேலையை இராஜிநாமா கொடுத்தான்?

12. ஏழாண்டுகள் யுத்தத்திற்குக் காரணங்கள் என்ன? அந்த யுத்தத்தில் ஆங்கிலேயர்களுக்குக் கிடைத்த வெற்றிகளில் இரண்டைக் கூறுக. அந்த யுத்தம் எந்த உடன்படிக்கையால், எப்பொழுது முடிந்தது? அதனால் இங்கிலாந்திற்குக் கிடைத்த இலாபங்கள் என்ன?

13. ஓர் உலகப் படம் வரைந்து அதில் ஏழாண்டுகள் போரில் நடந்த நிகழ்ச்சிகளில் முக்கியமானவைகளைக் குறிப்பிடுக.

அதிகாரம் 2

ஜார்ஜ் III, 1760—1820

முக்கியஸ்தர்கள்.

ஜான் வில்கிஸ்.

நார்த் பிரபு.

ஜார்ஜ் வாஷிங்டன்.

இளைய பிட்.

நெப்போலியன் போனபார்ட்.

நெல்ஸன் பிரபு.

வெலிங்டன் ட்யூக், ஆர்தர் வெல்லெஸ்லி.

ஜான் வெஸ்லி.

ஜேம்ஸ் வாட்.

முக்கியத் தேதிகள் :—

1760. மூன்றும் ஜார்ஜ் பட்டத்திற்கு வருதல்.

1761. மூத்த பிட் வேலையிலிருந்து நீங்கல்.

1763. பாரிஸ் சமாதான உடன்படிக்கை.

1765. முத்திரைக் காகிதச்சட்டம்.

1768. வில்கிஸ் தொந்திரவுகள்.

1770. நார்த் பிரதம மந்திரி ஆதல்.

1773. பாஸ்டன் தேக் கச்சேரி.

1775. அமெரிக்காவின் சுதந்திரப் போர்.

1776. அமெரிக்காவின் சுதந்திர விளம்பரம்.

1777. சரடோகா அபஜயம்.

1781. யார்க்டவுன் அபஜயம்.

1783. வெர்ஸேல்ஸ் சமாதான உடன்படிக்கை.

1783. இளையபிட் மந்திரி ஆதல்.

1784. பிட் இந்தியா சட்டம்.

1789. பிரஞ்சுக் கிளர்ச்சி.

1793. பிரஞ்சுக் கிளர்ச்சி யுத்தம்.
1798. நைல் சண்டை.
1800. ஐர்லாந்து ஐக்கியச் சட்டம்.
1801. பிட்டின் இராஜிநாமா.
1802. அமியன்ஸ் உடன்படிக்கை.
1803. நெப்போலியனுடன் யுத்த ஆரம்பம்.
1805. டிராபால்கர் ஆஸ்டர்லிட்ஸ் சண்டைகள்.
1808. தீபகற்ப யுத்தம் ஆரம்பம்.
1812. நெப்போலியனின் ரஷியப் படையெடுப்பு.
1815. வாடர்லூ சண்டை; வியன்ன காங்கிரஸ்; பாரிஸ் சமாதான உடன்படிக்கை.
1820. மூன்ரும் ஜார்ஜின் மரிப்பு.

1. மூன்ரும் ஜார்ஜ் தன் அதிகாரத்தை வலுப்படுத்த முயலல். 1760—83.

காரணங்கள் :—மூன்ரும் ஜார்ஜ் மன்னன் 1760-ல் பட்டத்திற்கு வந்தான். அவன் இரண்டாம் ஜார்ஜின் பேரன். இங்கிலாந்தில் பிறந்து வளர்ந்த முதல் ஹனேவிரியன் அரசன் அவனே. அவன் பிடிவாதம் மிகுந்தவன். அவன் தன் அதிகாரத்தை விருத்தி செய்யவேண்டும் என்று ஆவல்கொண்டான். சட்டப்படி அவனுக்கிருந்த அதிகாரத்தை நடத்திக்காட்ட ஆரம்பித்தான். முக்கியமாக அவனுடைய மந்திரிகளை அவனே நியமிக்கவேண்டும் என்று விரும்பினுன். அவன் அரசன் ஆனதும் விக்கர்களின் ஆதிக்கியத்தை ஒழித்து அவர்களில் முக்கியஸ்தர்களான மூத்த பிட் நியூகாஸில்ட்யூக் முதலியவர்களை மந்திரிப்பதவியிலிருந்து விலகும்படிச் செய்தான். முதல் பத்து வருஷங்களுக்குத் தான் சொல்வதைக் கேட்கும் மந்திரிகளையே நியமித்தான். டோரிக்கள் அரசன் அதிகாரத்தை ஆதரிப்பவர்கள் ஆத

லால் அவர்களே பார்லிமெண்டில் அதிகமாக வரும்படி யான முயற்சிகளை எடுத்துக் கொண்டான். கடைசியாக நார்த் பிரபு என்னும் டோரியை பிரதம மந்திரியாகச்செய்து கொண்டான். இவ்வாறு இருபத்து மூன்று வருஷங்கள் தன் அதிகாரத்தை விருத்தி செய்து கொள்ள முயன்றான்.

நிகழ்ச்சிகள்:—மூன்றும் ஜார்ஜும் அவன் மந்திரி களும் முன்னேக்கம் இல்லாதவர்கள். பல விஷயங்களில்

படம் 14. மூன்றும் ஜார்ஜ்

ஈடுபட்டுத் தொந்திரவுகளை வரவழைத்துக் கொண்டார்கள். பிரஜைகளினுடைய உரிமைகளுக்கு எதிராக நடந்தார்கள். ஜான் வில்கிஸ் என்பவன் 'நார்த் பிரிட்டன்' என்கிற பத் திரிகை வெளியிடுபவன்; அவன் அரசனுடைய பார்லி மென்ட் பிரசங்கத்தையும் மந்திரிகளைப் பற்றியும் கண் டித்து எழுதினன் என்று அவன்மேல் ஒருவிசாரணைதுவக் கப்பட்டது. சாதாரணமான வில்கிஸ் ஜனங்களால் பெரிய

மனிதனுகக் கருதப்பட்டான். அவனைப் பார்லிமெண்டிற்குப் பிரதிநிதியாக ஜனங்கள் தேர்ந்தெடுத்தார்கள். அரசன் அவன் பார்லிமெண்டிற்கு வரக்கூடாதவழிகளைத் தேடினன். கடைசியாக வில்கிஸே ஜயம் பெற்ருன். அரசனும் அவன் மந்திரிகளும் அமெரிக்காவில் உள்ள ஆங்கிலக்குடியேற்ற நாடுகளின் சுதந்திரங்களைக் குறைக்க ஆரம்பித்ததால் அவைகளுக்கும் இங்கிலாந்திற்கும் யுத்தம் உண்டாயிற்று. அந்த யுத்தத்தில் இங்கிலாந்து அபஜயம் அடைந்தது. இவ்வாருக அயல் நாட்டு விஷயங்களில் தன் அதிகாரத்தைச் செலுத்த முயன்று தொந்திரவுகளை வரவழைத்துக் கொண்டான்.

2. அமெரிக்கா சுதந்திர யுத்தம்
(The war of American Independence 1775-83.)

காரணங்கள்: அமெரிக்காவில் உள்ள ஆங்கிலக்குடியேற்ற நாடுகளுக்கும் தாய் தேசமான இங்கிலாந்திற்கும் ஒரு பெரிய போர் நிகழ்ந்தது. ஆங்கிலக்குடியேற்றவாசிகள் சுதந்திரத்தாகம் மிகுந்தவர்கள். பதின்மூன்று ஆங்கிலக் குடியேற்ற நாடுகளிலும் சுயேச்சையான அரசாங்கம் இருந்து வந்தது.

மூன்ரும் ஜார்ஜும் அவன் மந்திரிகளும் குறுகிய நோக்கங்கள் உள்ளவர்களாகத் தங்கள் அதிகாரத்தைச் செலுத்த ஆரம்பித்தார்கள். குடியேற்ற நாடுகள் இங்கிலாந்தின் பிரயோஜனத்திற்கே ஏற்பட்டவை என்று கருதினர்கள். நாவா சட்டப்படி அவைகள் தங்கள் சாமான்களை ஆங்கிலக் கப்பல்களிலேயே அனுப்பவேண்டியிருந்தது. மேலும் அவர்களுக்கு வியாபார விஷயங்களில் சுதந்திரம் இல்லை. அவர்களுக்கு வேண்டிய சாமான்களை அவர்களே செய்து கொள்ளக் கூடாதென்றும், இங்கிலாந்தில் செய்யப்பட்டவைகளையே வாங்கவேண்டும் என்றும் கட்டாயப்படுத்தப்

பட்டார்கள். ஏழாண்டுகள் யுத்தச் சிலவில் கொஞ்சம் அவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று ஆங்கிலேயர்கள் நினைத்தார்கள். அதற்காக, அவர்களுடைய சம்மதம் இல்லாமலேயே அவர்களுக்கு வரி விதிக்கப்பட்டது. மந்திரி க்ரென்வில் பிரபு முத்திரைக் காகிதச் சட்டம் (Stamp Act) ஒன்றை 1765-ல் நிறைவேற்றினன். அமெரிக்கர்கள் ஆங்கில முத்திரைக் காகிதங்களைத் தாங்கள் பத்திரம் எழுதுவதற்கு உபயோகப்படுத்த வேண்டும் என்று அதில் சொல்லி யிருந்தது. உடனே அமெரிக்கர்கள் அதை எதிர்த்தார்கள்; அவர்கள் சம்மதம் இல்லாமல் வரிகள் விதிப்பதற்கு ஆங்கில அரசாங்கத்திற்கு அதிகாரம் இல்லை என்று சொல்லி ஸ்டாம்பு வரியைக் கொடுக்க மறுத்தார்கள். மந்திரி ராக்கிங்ஹாம் பிரபு ஸ்டாம்ப் சட்டத்தை எடுத்து விட்டான்; ஆயினும் ஆங்கிலேயர்களுக்கு இஷ்டப்பட்ட பொழுது குடியேற்ற நாடுகளின்மீது வரிவிதிக்க அதிகாரம் உண்டு என்று ஒரு சட்டத்தை ஏற்படுத்தினன். அதையும் அமெரிக்கர்கள் எதிர்த்தார்கள். பொக்கிஷ மந்திரி டவுன்ஷண்ட் தேயிலை, கண்ணடி, காகிதம் முதலியவைகளின்மீது ஒரு வரியை விதித்தான். இதனுலும் அமெரிக்கரின் எதிர்ப்பு அதிகமாயிற்று. பிரதம மந்திரியாகிய நார்த் பிரபு தேயிலையின்மீதுள்ள வரியை மாத்திரம் நிறுத்தி மற்ற வரிகளை எடுத்துவிட்டான். ஆயினும் அவர்களுடைய எதிர்ப்பு இருந்துகொண்டே இருந்தது. அவர்கள் 1773-ல் பாஸ்டன் துறைமுகத்தில் வந்த கப்பல்களில் இருந்த தேயிலைப் பெட்டிகளைத் தூக்கிக் கடலில் எறிந்து சமுத்திரத்திற்கு ஒரு தேக் கச்சேரி கொடுத்தனர். இந்தப் பாஸ்டன் தேக்கச்சேரியே யுத்தத்திற்குத் தற்போதைய காரணமாயிற்று. ஆங்கில அரசாங்கத்தாருக்கு அமெரிக்கர்மீது கடுங்கோபம் உண்டாயிற்று. அவர்கள் பாஸ்டன் துறைமுகத்தை மூடி

ஞர்கள்; மசா சூஸெட்ஸ் குடியேற்ற நாட்டின் பாத்திய சாஸனத்தை ரத்து செய்தார்கள். கிளர்ச்சி செய்தவர்களை அடக்குவதற்கு ஓர் ஆங்கிலச் சேனை வந்து சேர்ந்தது. அமெரிக்கக் குடியேற்ற நாடுகள் ஒன்று சேர்ந்து இங்கிலாந்துடன் யுத்தத்திற்குத் தயாராயின.

விஷயங்கள்:—யுத்தம் 1775 ல் ஆரம்பித்தது. முதல் இரண்டு வருஷங்களுக்கு அது ஆங்கிலேயருக்கும் ஆங்கிலக் குடியேற்ற நாடுகளுக்கும் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தமாகவே நடந்து வந்தது. ஜார்ஜ் வாஷிங்டன் என்ற வீரன் குடி



படம் 15. ஜாஜ் வாஷிங்டன்.

யேற்ற நாடுகளின் படைக்குத் தளகர்த்தன் பதவியை வகித்தான். முதலில் லெக்ஸிங்டன், பங்கர்ஸ் குன்று சண்டைகளில் ஆங்கிலேயர்களே வெற்றிபெற்றார்கள். கூடிய சீக்கிரத்தில் குடியேற்ற சேனை வலுப்படுத்தப்பட்டது. குடியேற்ற நாடுகள் ஒன்று சேர்ந்து பிலடல்பியா காங்கிரஸில் சுயேச்சை சாஸன விளம்பரம் ஒன்றை 1776-ஆம் ஜூலை 4உ-ல் வெளியிட்டன. அதற்குப்பிறகு அவைகள் அமெரிக்க



அமெரிக்கரின் சுதந்தரயுத்தம். 1775-83

படம் 16

ஐக்கிய இராஜ்யங்கள் என்று வழங்கப்பட்டன. ஆங்கிலேய சேனையின் தளகர்த்தன் பர்காயின் சரடோகா என்னும் இடத்தில் அமெரிக்க சேனையினுல் தோற்கடிக்கப்பட்டு அதனிடம் 1777-ல் சரணம் புகுந்தான். அதனுல் ஆங்கிலேயர்களுக்கு ஐரோப்பாவில் உள்ள கௌரவம் குறைந்தது. இங்கிலாந்தின் விரோதிகளான பிரான்சும் ஸ்பெயினும் பகிரங்கமாக ஆங்கிலக் குடியேற்ற நாடுகளுக்கு உதவிசெய்தன. உள்நாட்டு யுத்தம் ஒரு பெரிய உலக யுத்தமாயிற்று; ஆங்கிலச் சேனையின் தலைவன் காரன்வாலிஸ் பிரபு 1781-ல் யார்க்டவுன் சண்டையில் தோல்வி அடைந்து அமெரிக்க சேனையினிடம் சரணம் புகுந்தான். மேற்கு இந்தியத் தீவுகளில் ஆங்கிலக் கப்பற்படைத் தலைவன் ராட்னி ஒரு பிரான்கோ - ஸ்பானிஷ் கப்பற்படையைத் தோற்கடித்துக் கடலில் ஆங்கில ஆதிக்யத்தை நிலை நாட்டினுன். யுத்தம் 1783-ல் வெர்ஸேல்ஸ் உடன்படிக்கையின்படி முடிவிற்கு வந்தது.

வேர்ஸேல்ஸ் உடன்படிக்கை:—1783. இதன் நிபந்தனைகளாவன:—ஆங்கில அமெரிக்கன் குடியேற்ற நாடுகள் சுதந்திரம் பெற்று ஐக்கிய இராஜ்யங்கள் என்று வழங்கலாயின. ஸ்பெயின் ஆங்கிலேயரிடம் இருந்து ப்ளோரிடாவையும், மினுர்க்காவையும், பிரான்ஸ் டொபாகோ சாண்டாலூஷியா முதலிய மேற்கு இந்தியத் தீவுகளையும் ஆப்பிரிக்காவில் உள்ள செனிகலையும் அடைந்தது. இந்த யுத்தத்தினுல் இங்கிலாந்து தன் குடியேற்ற நாடுகளைச் செம்மையாக நடத்தவேண்டும் என்று தெரிந்து கொண்டது.

அமெரிக்க வெற்றிக்குக் காரணங்கள் :—ஆங்கிலக் குடியேற்ற வாசிகள் சுயேச்சையும் தீரமும் உள்ளவர்கள். தங்களுடைய சுதந்திரங்களில் ஆசை உள்ளவர்கள். அவர்களுடைய உரிமைகளுக்கு ஆபத்து ஏற்பட்டதால் அவர்க

ளுக்குள் இருந்த வித்தியாசங்களை ஒழித்து ஒற்றுமைப் பட்டு யுத்தம் செய்தார்கள். அவர்களுடைய தேசம் மலைகளும், பின்புறக் காடுகளும், நதிகளும், நீர் வீழ்ச்சி களும் மிகுந்தது; அவைகளைப் பற்றி அவர்களுக்கு நன்றாகத் தெரியும்; அவர்களுடைய விரோதிகளுக்கு அவைகளெ ல்லாம் புதியனவாய் இருந்தன. அமெரிக்க சேனைத் தலைவர்களான வாஷிங்டன் போன்றவர்கள் மிகவும் திறமை உடையவர்கள். ஆங்கிலச் சேனை திறமையற்றிருந்தது. அமெரிக்காவிலிருந்து இங்கிலாந்திற்கு சமாசாரங்கள் சரி யாக எட்டவில்லை. மூன்றும் ஜார்ஜூம் அவன் மந்திரி களும் முன்னோக்கமும் விசால அறிவும் இல்லாதவர்கள்; பிடிவாதமே மிகுந்தவர்கள்; ஆதலால் தாங்கள் கொண்டதே சரியென்று நினைத்தனர். ஆங்கிலக் கப்பற்படை சரியாகக் கவனிக்கப்படவில்லை; அது கொஞ்சகாலம் திறமையற்றிருந் தால் கடல் ஆதிக்யத்தை இழந்தது. அதன் காரணமாகவே காரன்வாலிஸ் யார்க் டவுனில் தோல்வி அடைந்தான். ஐரோப்பிய நாடுகளான பிரான்சும் ஸ்பெயினும் அமெரிக்கர் களுடன் சேர்ந்து கொண்டதால் அவர்கள் வெற்றி பெறுவது சுலபமாயிற்று.

3. இளைய வில்லியம் பிட், (1759—1806)

அவன் ஆதி சரித்திரம்:—அவன் இங்கிலாந்தின் இராஜிய நிபுணர்களில் சிறந்தவன். அவன் சாதாம் பிரபு வான மூத்த வில்லியம் பிட்டின் குமாரன். தகப்பனு ருடைய திறமை அவன் இடத்தில் இருந்தது. அவனைப் “பழைய கட்டையில் இருந்து வெட்டி எடுக்கப்பட்ட துண்டு” என்று சொல்வதுண்டு. அவன் தன் தந்தைக்கு வெற்றி மிகுந்த வருஷமாகிய 1759-ல் பிறந்தான். அவன் சிறு குழந்தைப் பருவம் முதற்கொண்டே நுட்ப அறிவு

உடையவனாக விளங்கினான். அவன் கேம்பிரிட்ஜில் நன்றாகக் கல்வி கற்றான். அவனுக்கு இராஜிய விஷயங்களில் செம்மையான பயிற்சி கொடுக்கப்பட்டது. அவன் 1780-ல் பார்லிமென்டிற்குப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டான். அவன் டோரிக் கட்சியைச் சேர்ந்தான். அவனுடைய இராஜியத் திறமை எல்லோருக்கும் தெரிந்தது. அவன்

படம் 17. இளைய பீட்.

1783-ல் பிரதம மந்திரிப் பதவியைப் பெற்றான். அவனுக்கு அப்பொழுது வயது இருபத்து நான்கு. அவன் தான் இங்கிலாந்தின் பிரதம மந்திரிகளுக்குள் இளைஞன் ஆவன்.

அவன் குணம்:—அவன் தகப்பனாரைப்போலப் பிரகாசம் மிகுந்த தீக்ஷண்யம் உள்ளவன் அல்லன்; ஆயினும் உழைப்பும் முயற்சியும் மிகுந்தவன். வால்போல் மாதிரியே

உலக விஷயங்களைச் செம்மையாக அறிந்தவன்; ஆயினும் அவனிடத்தில் தூய்மையான உண்மைக் குணங்கள் இருந்தன. அவன் விசாலமான நோக்கங்களை உடையவன். அவன் இங்கிலாந்தை மிகவும் ஆபத்தான காலத்தில் தன் முயற்சியினுல் காப்பாற்றினுன்.

அவன் ஆட்சி:—1783—1801. அவன் பிரதம மந்திரி ஆனதிலிருந்து அரசனுடைய ஆதிக்யம் குறைந்தது. அவன் முதல் பத்து வருஷங்கள் நாட்டின் அமைதிக்காகவும் சிறந்த சீர்திருத்தங்கள் செய்வதற்காகவும் பாடுபட்டான்.

பண விஷயங்கள்:—அவன் வால்போல் போலவே பொக்கிஷ விஷயங்களில் நிபுணன். அமெரிக்க சுதந்திரப் போரினுல் ஆங்கிலப் பொக்கிஷம் குறைவுபட்டிருந்தது. குறைக்கும் நிதி (Sinking Fund) யில் தேசீய வருமானத்திலிருந்து சேர்த்து அவன் தேசியக் கடனை மிகவும் சிறிய தொகையாக்கினுன். அவன் அரசாங்கத்தைச் சிக்கனமாக நடத்தியதால் பொக்கிஷம் நிறைந்திருந்தது. அவன் சுயேச்சை வியாபார (Free Trade)த்தை விருத்தி செய்வதில் ஊக்கம் கொண்டிருந்தான். ஏற்றுமதிகள் இறக்குமதிகளின் வரிகளைக் குறைத்தும் தள்ளியும் வியாபாரத்தை விருத்தி செய்தான். பிரான்சுடன் சுயேச்சை வியாபார ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டான்.

பார்லிமேன்ட் சீர்திருத்தம்:—பார்லிமென்டிற்குப் பிரதிநிதிகள் அனுப்புகிற திட்டமும், பொதுத் தேர்தல் முறைகளும் சீர்கேடு அடைந்திருந்தன. அவைகளைச் சீர்திருத்துவதற்காக ஒரு சட்டத்தைக் கொண்டுவந்தான். அதற்கு எதிர்ப்பு ஜாஸ்தியாக இருந்ததால் இது நிறைவேற்றப் படவில்லை.

பிட் இந்தியா சட்டம்:—1784. இந்தியாவில் நல்ல அரசாங்கம் ஏற்படுவதற்காக பார்லிமெண்டில் இந்தச் சட்டத்தை அவன் நிறைவேற்றினன். அது ரெகுலேடிங் சட்டத்தினல் உண்டான தீமைகளை ஒழித்தது.

ஐர்லாந்தின் ஐக்கியம்:—1800. பிட், ஐர்லாந்து இங்கிலாந்துடன் ஐக்கியப் படுவதற்குப் பாடுபட்டான். பிரபலக் கிளர்ச்சி நிர்மாண காலத்திலிருந்து ஐர்லாந்து மத விஷயங்களிலும் இராஜாங்க விஷயங்களிலும் சுதந்திரம் இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தது. ஐரிஷ் பார்லிமென்ட் 1494-ல் ஏற்பட்ட பாய்னிங்ஸ் சட்டப்படி ஆங்கிலப் பார்லிமென்டிற்குக் கீழ்ப்படுத்தப் பட்டிருந்தது. ஹென்ரி க்ராட்டான் என்னும் ஐரிஷ் இராஜிய நிபுணன் 1782-ல் ஐரிஷ் பார்லிமென்டிற்கு சுயேச்சாதிகாரத்தைப் பெற்ருன். பிரஞ்சுக் கிளர்ச்சி உண்டானதும், ஐர்லாந்திலும் கிளர்ச்சி ஏற்பட்டது. ஐர்லாந்தில் ஆங்கிலேயருக்கு எதிராக 1798-ல் ஒரு பெரிய கலகம் உண்டாயிற்று. அந்தக் கலகம் சீக்கிரமாக அடக்கப்பட்டது. பிட் ஐர்லாந்தின் ஐக்கியச் சட்டத்தை 1800-ல் நிறைவேற்றினன். அதன்படி ஐரிஷ் பார்லிமென்ட் ஆங்கிலப் பார்லிமென்டுடன் இணைக்கப்பட்டது. பிரபுக்கள் சபைக்கு முப்பத்திரண்டு அங்கத்தினர்களையும், பொது ஜன சபைக்கு நூறு அங்கத்தினர்களையும் அனுப்புவதற்கு ஐர்லாந்து உரிமை பெற்றது. முழு வியாபாரச் சுயேச்சை கிரேட் பிரிட்டனுக்கும் ஐர்லாந்திற்கும் ஏற்பட்டது. செயின்ட் பாட்ரிக் கிராஸ் கொண்ட ஐரிஷ் நீலக்கொடி பிரிட்டிஷ் கொடியுடன் இணைக்கப்பட்டு "யூனியன் ஜாக்" **(Union Jack)** என்ற ஒரு பொதுக் கொடி பிரிட்டிஷ் தீவுகளுக்கு உண்டாயிற்று. இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, ஐர்லாந்து இம்மூன்று பாகங்களும் சேர்ந்த பிரதேசம் "ஐக்கிய இராஜ்யம்" (United

Kingdom) என்று வழங்கலாயிற்று. ஐரிஷ் கோயில் ஆங்கிலக் கோயிலுடன் இணைக்கப்பட்டது. ஆனால் ஐரிஷ் கத்தோலிக்குகளுக்கு மதச் சுதந்திரம் கொடுக்கப்படவில்லை.

பிட் இராஜிநாமாக் கொடுத்தல்: 1801ல் ஐரிஷ் கத்தோலிக்குகளுக்கு மதச் சுதந்திரம் அளிப்பதாகப் பிட் வாக்களித்திருந்தான். ஆனால் அரசன் அது, தான் பட்டத்திற்கு வந்த பொழுது எடுத்துக் கொண்ட சத்தியத்திற்கு மாறானதாகும் என்றும் அப்படிச் செய்தால் தன் கிரீடம் தலையிலிருந்து போய் விட்டதாகும் என்றும் சொல்லி மறுத்தான். பிட் தான் வாக்களித்தபடி நடக்க முடியாமற் போனதால் தன் உத்தியோகத்தை இராஜி நாமா கொடுத்து நீங்கிக் கொண்டான்.

அவன் வெளிநாட்டு நோக்கம்:—பிரான்சில் கிளர்ச்சி உண்டாகி நாடுமுழுவதும் கலவரம் ஏற்பட்டு ஐரோப்பாவில் அமைதியில்லாமற் போனமையால் அவன் சீர்திருத்தங்களை நிறுத்தி விட்டு வெளிநாட்டு விஷயங்களைக் கவனிக்க வேண்டியதாயிற்று. பிரான்சின் கிளர்ச்சி இங்கிலாந்திற்குப் பரவாது இருப்பதற்கு வேண்டிய முறைகளைக் கைக்கொண்டான். இராஜியக் கூட்டங்கள் கூடக் கூடாதென்று தடை உத்திரவு போட்டான். இராஜியச் சங்கங்களைக் கலைத்தான். கிளர்ச்சிக் காரர்களை நாட்டில் இருந்து துரத்தினன். பிரான்சுடன் 1793ல் யுத்தத்திற்குச் சென்றான். ஐரோப்பிய தேசங்களுடன் நட்புச் செய்து கொண்டு பிரான்சுடன் எட்டு வருஷங்கள் போர் புரிந்தான். அவன் தகப்பனைப்போலச் சிறந்த யுத்த மந்திரி அல்லாமற்போனலும் சிரமத்தைப் பாராட்டாமல் உழைத்து வந்தான். இங்கிலாந்து கடலில் ஜயம் பெற்றது; ஆனல் பிரான்ஸ் நிலச் சண்டைகளில் வெற்றி அடைந்து வந்தது. யுத்தம் முடிவதற்கு

முன் 1801-ல் அவன் வேலையிலிருந்து நீங்கிய வரலாற்றை முன்னமேயே நாம் தெரிந்துகொண்டோம்.

அவன் இரண்டாம் ஆட்சி:—1804—06. அவன் வேலையிலிருந்து நீங்கியதும் அடிங்டன் என்பவன் அவன் ஸ்தானத்தில் நியமிக்கப்பட்டான். அவன் திறமை அற்றவன். இங்கிலாந்து 1803-ல் பிரஞ்சு சக்கரவர்த்தியான நெப்போலியனுடன் யுத்தத்திற்குச் சென்றது. அரசன் வேறு வழியில்லாமல் 1804-ல் பிட்டை மறுபடியும் மந்திரியாக நியமித்தான். ஐரோப்பிய முக்கிய தேசங்களுடன் சிநேகம் செய்துகொண்டு பிரான்சுடன் மும்மரமாகப் போர் புரிந்தான். ட்ராபால்கர் கடல் சண்டையில் ஆங்கிலக் கப்பற்படை 1805-ல் வெற்றி பெற்றது. ஆனால் அதே வருஷத்தில் நடந்த ஆஸ்டர்லிட்ஸ் நிலச் சண்டையில் நெப்போலியன் ஓர் ஐரோப்பிய சேனையைத் தகர்த்துப் பெரிய வெற்றியைப் பெற்றான். அதைக் கேள்விப்பட்டதும் மனம் உடைந்து 1806-ல் பிட் உயிர் நீத்தான். அவன் இங்கிலாந்தின் பிரதம மந்திரிகளுக்குள் உன்னத ஸ்தானம் பெற்றவன் ஆவன். அவன் தைரியத்துடனும் சுயநலத்தைப் பாராட்டாமல் தேசத்திற்குச் சேவை செய்தான். "இங்கிலாந்து தன்னுடைய முயற்சியினால் காத்துக் கொண்டது; அதைப் பின்பற்றி நடந்து ஐரோப்பிய தேசங்களும் காத்துக்கொள்ளும்,'' என்று பிட் கூறினான். அவன் இங்கிலாந்து முன்னேற்றம் அடைவதற்குத் தன் உயிரைத் தியாகம் செய்தான். அவன் ஒரு பெரிய தேசாபிமானி.

4. பிரஞ்சுக் கிளர்ச்சி

காரணங்கள்:—பிரான்சில் 1789-ல் ஒரு பெரிய கிளர்ச்சி உண்டாயிற்று. இது உண்டானதற்குப் பல காரணங்கள் இருந்தன. பிரான்ஸ் வெகு காலமாகக்

கொடுங்கோல் அரசின் கீழ் இருந்தது. அரசர்கள் இஷ்டம்போல் நடந்து வந்தார்கள். அவர்கள் ஆடம்பரமாக இருந்து நாட்டின் அரசாங்கத்தை ஒழுங்காகக் கவனிக்கவில்லை. பதினைரும் லூயி அரசனும் மேரி அன்டாயினட் இராணியும் குடிகளின் சௌகரியத்தைக் கவனிக்காமல் தங்கள் சுகத்தையே கவனித்துச் சிறிதேனும் பொறுப்பின்றி ஆட்சி புரிந்து வந்தார்கள். பிரபுக்களும் மதகுருமார்களும் யதேச்சையான சுதந்திரங்களை அனுபவித்து ஜனங்களை வறுத்தி வந்தார்கள். பழைய காலத்து நிலமான்ய ஏற்பாடு இங்கிலாந்தில் ட்யூடர் காலத்திற்கு முன்பே ஒழிந்துவிட்டாலும் பிரான்சில் நிலைத்து நின்றுவிட்டது. ஏழைக் குடியானவர்களும் சாதாரண ஜனங்களுமே உழைத்துப் பாடுபட்டார்கள்; அவர்கள் பாடுபட்ட பலனை மேல் வகுப்பினர் அனுபவித்து உல்லாசமாகக் காலம் கழித்து வந்தனர். வரிகளினுடைய பாரத்தை ஏழைகளே தாங்கினர். பொக்கிஷத்தில் இருந்த பணம் வரிசையாக நடந்த யுத்தங்களில் சிலவழிக்கப்பட்டது. குடிகள் வரி கொடுக்க முடியாமல் தவித்தனர். அமெரிக்கச் சுதந்திரப் போரில் கலந்துகொண்ட பிரஞ்சுக்காரர்கள் திரும்பி வந்து சுதந்திர தாகத்தைக் கிளப்பி விட்டனர். பெரிய ராஜிய தத்துவ ஞானிகள் சுயேச்சை, சகோதரத்துவம், சமத்துவம் முதலிய கிளர்ச்சி விஷயங்களை ஜனங்களுக்குப் போதித்தனர். அவர்களுள் சிறந்தவர் வால்டேர், ரூஸோ என்பவர்கள் ஆவர். வால்டேர் மனிதனுடைய பகுத்தறிவே சிறந்தது என்றும் கூறினர். ரூஸோவும் மனிதனுடைய உரிமைகளைப்பற்றி ஜனங்களுக்கு ஊக்கத்துடன் எடுத்துரைத்தார். "மனிதன் சுயேச்சையுடன் பிறக்கிறன்; ஆனல் அவன் எங்கும் சங்கிலிகளினல், கட்டுப்பட்டிருப்பதை நான் பார்க்கிறேன்"

என்று அவர் சொன்னார். பிரஞ்சு தத்துவ ஞானிகள் பிரசங்கித்த விஷயங்கள் மற்றைய நாடுகளுக்குப் பரவ, அவ்வரசர்கள் அரசாங்கத்தில் சில சீர்திருத்தங்களைச் செய்து கொண்டனர்; ஆனால், பிரான்சில் ஒரு சீர்திருத்தமும் செய்யப்படவில்லை. பதினாறும் லூயி வேறு வழியில்லாமல் பிரஞ்சு பார்லிமென்டான ஸ்டேட்ஸ் ஜெனரலைக் கூட்டுவதற்குத் தீர்மானித்தான்; அது 1614-ல் கலைக்கப்பட்டு, 1789 வரையில் சந்திக்கவே இல்லை. அது கூடியது பிரஞ்சுக் கிளர்ச்சிக்குத் தற்போதையக் காரணம் ஆயிற்று.

விஷயங்கள்:—ஸ்டேட்ஸ் ஜெனரல் சந்தித்துப் பெரிய மாறுதல்களை அரசாங்கத்தில் செய்தது. அரசனுடைய அதிகாரத்தைக் குறைத்தது. எல்லா பிரஞ்சுக்காரர்களுக்கும் சமச் சுதந்திரங்கள் உண்டு என்று சொல்லிற்று. இராஜிய மத விஷயங்களில் சுயேச்சை கொடுத்தது. அரசன் சதியாலோசனை செய்து கொண்டிருந்தான். நாட்டில் அமைதியில்லாமல் குழப்பம் ஏற்பட்டது. தலைநகராகிய பாரிஸில் உள்ள ஜனங்கள் கலவரம் செய்தனர். பாஸ்டில் என்னும் பயங்கரமான பழைய சிறைச்சாலையை உடைத்து அவர்கள் கைதிகளை வெளியில் விட்டனர். அவர்கள் வெர்ஸேல்ஸில் இருந்து அரசனையும் அரசியையும் இழுத்துச் சென்றார்கள். பழைய அரசாங்கமுறையில் ஈடுபட்டவர்கள் தண்டிக்கப்பட்டார்கள், அல்லது நாட்டில் இருந்து துரத்தப்பட்டார்கள். அரசனும் அரசியும் 1793-ல் கொலை செய்யப்பட்டு நாட்டில் குடி அரசு ஏற்படுத்தப்பட்டது. பிரான்ஸில் ஏற்பட்ட கிளர்ச்சியினால் இவ்வாறான பயங்கரமான ஆட்சி (Reign of Terror) உண்டாயிற்று.

அதன் பலன்கள்: பிரஞ்சுக் கிளர்ச்சி ஐரோப்பா முழுவதும் கலவரத்தை உண்டுபண்ணி விட்டது. பழைய அரசாங்க முறையைச் சார்ந்தவர்கள் ஐரோப்பிய அரசர்

களின் உதவியை நாடினார்கள். ஆஸ்திரியா சக்கரவர்த்தியும், பிரஷ்யாவின் அரசனும் பிரஞ்சுக் கிளர்ச்சிக்காரர்களைத் தங்கள் நாடுகளுக்கு வராமல் தடுத்தார்கள். பிரான்ஸ் 1792-ல் ஆஸ்திரியா, பிரஷ்யாவின்மீது யுத்தம் தொடங்கிற்று. அது ரைன்நதி வரைக்கும் உள்ள பிரதேசங்களை ஜெயித்துக் கொண்டது. மற்றையநாட்டு ஜனங்களுக்கு அவர்களுடைய அரசர்களுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்ய உதவி புரிவதாக விளம்பரம் செய்தது. ஆதியில் இங்கிலாந்து பிரஞ்சுக் கிளர்ச்சி நல்லதென்று நினைத்தது. நூறு வருஷங்களுக்கு முன் நடந்த அவர்களுடைய பிரபலக் கிளர்ச்சிமாதிரிதான் அது இருக்கும் என்று ஆங்கிலேயர்கள் நினைத்தார்கள். பிட் அதைப்பற்றி நல்ல அபிப்பிராயத்தையே கொண்டிருந்தான். அது மிகவும் கொடுமையானதென்பதைக் கண்டு தன் எண்ணத்தை மாற்றிக்கொண்டான். எட்மண்ட் பர்க் (Edmund Burke) பிரஞ் கிளர்ச்சியின் கெடுதியைப்பற்றி தன்னுடைய புத்தகத்தில் எழுதிவைத்தான். பிட் தன் சீர்திருத்தங்களை நிறுத்திவிட்டு பிரஞ்சுக்கிளர்ச்சி இங்கிலாந்திற்கு வரக்கூடாத முறைகளைப் பின்பற்றினன். பிரஞ்சுக் கிளர்ச்சி மிகவும் முரட்டுத்தனமாக நடத்தப்பட்டதால் எங்கும் யுத்தங்களை விளைவித்தது.

5. பிரஞ்சுக் கிளர்ச்சி யுத்தம், 1793—1802.

காரணங்கள்: பிரான்சிற்கும் இங்கிலாந்திற்கும் 1793-ல் யுத்தம் ஆரம்பமாயிற்று. பிரஞ்சு அரசன் அரசியைக் கொன்றது இங்கிலாந்தில் கோபத்தை உண்டுபண்ணியது. பிரஞ்சுக் கிளர்ச்சிக்காரர்கள் ஆங்கிலேயர்களைத் தங்கள் அரசாங்கத்திற்கு விரோதமாகக் கிளப்பிவிட்டார்கள். உடன்படிக்கைகளுக்கு எதிராக பெல்ஜியத்தின் மீது

அவர்கள் படை எடுத்தார்கள். இங்கிலாந்து உடனே ஆஸ்திரியா, பிரஷ்யா, ஹாலந்து இவைகளுடன் சேர்ந்து கொண்டு பிரான்சுடன் போருக்குச் சென்றது.

விஷயங்கள்: நிலச் சண்டைகளில் பிரஞ்சுக்காரர்கள் வெற்றிபெற்றனர். அவர்களுக்குத் தலைவனாக நெப்போலியன் என்கிற பிரபலப் போர்வீரன் கிளம்பினான். பிரான்சில் உள்ள டூலானைப் பிடிப்பதற்குச் சென்ற ஆங்கிலச் சேனை அவனால் 1793-ல் தோற்கடிக்கப்பட்டது. ஹாலந்தும் ஸ்பெயினும் பிரான்சுடன் சேர்ந்ததுகொண்டது. கடல் சண்டைகளில் இங்கிலாந்தே வெற்றிபெற்றது. சேயின்ட் வின் சென்ட் முனைச் சண்டையில் ஸ்பானிய கப்பற் படையை 1797-ல் ஆங்கிலக் கப்பற்படை வீரன் ஜார்விஸ் முறியடித்தான். அதே வருஷத்தில் காம்பர்டவுன் (Camperdown) சண்டையில் டச்சுக் கப்பற்படை தோல்வி அடைந்தது. நைல் சண்டையில் ஆங்கிலக் கப்பற்படைத் தலைவன் நெல்ஸன் பிரஞ்சு கப்பற்படைமீது ஒரு சிறந்த வெற்றியைப் பெற்று, நெப்போலியன் இந்தியாவின்மீது படைஎடுக்க முடியாமற் செய்தான். நெப்போலியன் இதாலிக்குத் திரும்பிச் சென்று 1800-ல் ஆஸ்திரியப் படையை மரேன்கோ சண்டையில் தோற்கடித்துப் பிரஞ்சு அதிகாரத்தை வட இதாலியில் ஸ்தாபித்தான். ஆங்கிலக் கப்பற் படை 1801-ல் கோபன் ஹேகன் சண்டையில் டேனிஷ் கப் பற்படையைத் தோற்கடித்துப் பிடித்துக் கொண்டது.

அமியன்ஸ் உடன்படிக்கை:—1802. இந்த உடன் படிக்கையின்படி யுத்தம் முடிவுக்கு வந்தது. இங்கிலாந்து ஜெயித்தபிரதேசங்களைத் திருப்பி பிரான்சுக்குக் கொடுத்தது. ஆனால் ஸ்பெயினிடம் இருந்து டிரினிடாடையும், ஹாலந்திடம் இருந்து இலங்கையையும் பெற்றது. ஆங்கி

மால்டாவை செயின்ட் ஜான் வீரர்களுக்குக் கொடுத்து விடுவதாக ஒப்புக்கொண்டார்கள்.

6. நெப்போலியனுடன் யுத்தம்:--1803-15.

காரணங்கள்:—அமியன்ஸ் உடன்படிக்கை ஐரோப்பாவில் நீடித்ததான நிம்மதியை ஏற்படுத்தவில்லை. நெப்போலியன் பிரான்சின் சக்கரவர்த்தியாகி ஐரோப்பாவைத் தனக்குக் கீழ்க்கொண்டு வருவதற்கான பிரயத்தனங்களைச் செய்தான். பிரஞ்சு கடற் கரையில் தட்டையான அடிப்புறத்தை உடைய படகுகளை ஆயிரக் கணக்காகச் செய்து இங்கிலாந்தின்மீது படை எடுப்பதற்குத் தயாரானன். இங்கிலாந்து மால்டாவைத் திருப்பிக்கொடுப்பதற்கு மறுத்துவிட்டது. ஆகையால் இரு தேசங்களுக்கும் யுத்தம் ஆரம்பமாயிற்று.

விஷயங்கள்:—ஆங்கிலேயர்கள் கடலில் வெற்றி பெற்றுத் தங்கள் ஆதிக்யத்தை நிலை நிறுத்தினர். இங்கிலாந்தின் மீது படை எடுப்பதற்காக இரண்டு பிரஞ்சுக் கப்பற்படைகள் பிரஸ்டிலும் டூலனிலும் வைக்கப்பட்டிருந்தன. ஆங்கிலேயர்கள் ஜாக்கிரதையாக இருந்தபடியால் விரோதிகளுடைய எண்ணம் பலிக்கவில்லை. ஆங்கிலக் கப்பற் படைத் தலைவனான நெல்சன் பிரபு 1805-ல் பிரான்கோ-ஸ்பானிஷ் கப்பற்படையை டிராபால்கார் சண்டையில் தோற்கடித்தான். வெற்றி அடைந்த அவன் சண்டையில் இறந்தான். இந்தக் கடல் ஜயத்தால் இங்கிலாந்து நெப்போலியனுடைய படை எடுப்பிலிருந்து காப்பாற்றப்பட்டது; இங்கிலாந்தின் கடல் ஆதிக்யம் நிலை நிறுத்தப் பெற்றது. ஆனல் நிலச்சண்டைகளில் நெப்போலியனே வெற்றி பெற்ருன். அவன் அதே வருஷத்தில் ஆஸ்டர்லிட்ஸ் என்னும் இடத்தில் ஆஸ்திரிய சேனையை முறியடித்து ஆஸ்திரியாவைத் தனக்கு வணங்கச்

செய்தான்; பிரஷ்யாவை 1806-ல் ஜேனு சண்டையில் தோற்கடித்து இந்த தேசத்தைத் தன் குடையின்கீழ் கொண்டுவந்தான்; ரஷ்யாவை 1807-ல் ப்ரீட்லன்ட் (Friedland) சண்டையில் தோற்கடித்து ஸார் அலெக்ஸாண்டரைத் தன்னுடன் டில்சிட் உடன்படிக்கையைச் செய்துகொள்ளும்படி செய்தான். இவன் இவ்வாருக ஐரோப்பா முழுவதற்கும் அதிகாரியானுன். அவன் பர்லின் உத்தரவு (Berlin Decrees) களின்படி ஐரோப்பிய தேசங்களெல்லாம் தனக்குக் கீழ்ப்படிந்தே நடக்க வேண்டும் என்று ஆஞ்ஞாபித்தான். அவைகளில் இங்கிலாந்தோடு ஐரோப்பிய தேசங்கள் வியாபாரம் செய்யக்கூடாதென்று கண்டிருந்தது. இந்த ஏற்பாட்டிற்கு நெப்போலியனின் ஐரோப்பிய கண்ட நிர்மாணம் (Continental System) என்று பெயர். இது அவன் வீழ்ச்சிக்குக் காரணமாயிற்று. டென்மார்க், போர்ச்சுகல்போன்ற தேசங்கள் இங்கிலாந்துடன் இரகசியமாக வியாபாரம் செய்யலாயின.



படம் 18. நெப்போலியன்

ஐரோப்பாவில் விலைகள் உயர்ந்ததனுலும், வியாபாரம் சீர்கேட்டை அடைந்ததனுலும் நெப்போலியன் ஆட்சிக்கு விரோதமாகப் பல இடங்களில் கலகங்கள் ஏற்பட்டன.

தீபகற்ப யுத்தம்:—1808-14. காரணங்கள்:— இந்த யுத்தம் நெப்போலியனுடன் இங்கிலாந்து செய்தயுத்தத்தின் ஒருபிரிவு. போர்ச்சுகல், ஸ்பெயின் தேசங்கள் அடங்கிய தீபகற்பத்தில் இந்த யுத்தம் நடந்ததால் இதற்குத் "தீபகற்ப யுத்தம்" என்று பெயர். போர்ச்சுகல் நீடித்தகாலமாக இங்கிலாந்துடன் நட்புக்கொண்டிருந்த தேசம். அது நெப்போலியனின் ஐரோப்பியக் 'கண்ட நிர்மாணத்தை' எதிர்த்து அவன் கோபத்தைக் கிளப்பிற்று. அவன் ஒரு பிரஞ்சு சேனையை அந்த தேசத்திற்கு அனுப்பி அதன் அரசனைப் பிரேஸிலுக்கு ஓடும்படியாகச் செய்து அதைத் தன் இராஜ்யத்துடன் சேர்த்துக்கொண்டான். அவன் 1808-ல் ஸ்பெயின் அரசனைத் தள்ளிவிட்டுத் தன்னுடைய சகோதரனை ஜோஸப் நெப்போலியனை அரசனாக நியமித்தான். இதனால் அவனுக்கு விரோதமாக ஒரு பெரிய தேசியக் கிளர்ச்சி உண்டாயிற்று. இங்கிலாந்து போர்ச்சுகலுக்கும் ஸ்பெயினுக்கும் உதவிசெய்து யுத்தத்தை மும்முரமாக நடத்தியது.

விஷயங்கள்:— தீபகற்ப யுத்தத்தில் இங்கிலாந்திற்கு வெற்றிகள் கொண்டுவந்த வீரன் வெலிங்டன் ட்யூக் ஆர்தர் வெல்லெஸ்லி என்பவன். இவனை இரும்புப் பிரபு (Iron Duke) என்றும் சொல்வதுண்டு.

அவன் விமிரோ சண்டையில் பிரஞ்சு சேனையைத் தோற்கடித்து அதைப் போர்ச்சுகலில் இருந்து துரத்திவிட்டு இங்கிலாந்திற்குத் திரும்பினன். ஆங்கிலச் சேனைக்கு ஸர் ஜான் மூர் (Sir John Moore) தலைவனாகி 1809 ல் பிரஞ்சுக்காரர்களைக் கருண்ணு (Corunna) சண்டையில் தோற்கடித்தான்; ஆயினும், சண்டையில் அவன் இறந்தான். ஆர்தர் வெல்லெஸ்லி தீபகற்பச் சேனைக்கு மறுபடியும் தளகர்த்தனாகி ஜோஸப் நெப்போலியனை டலவேரா (Talavera)

சண்டையில் அதே வருஷத்தில் ஜயித்தான்; இப்பொழுது தான் அவனுக்கு வெலிங்டன் பிரபு என்கிற பட்டம் கொடுக்கப்பட்டது. அவன் லிஸ்பனுக்குத் திரும்பி டாரேஸ் வெட்ரஸ் (Lines of Torres Vedras) என்னும் சுவர்களை எழுப்பி அதை 1810-ல் காப்பாற்றினுன். அவன் பிரஞ்சு சேனையை 1812-ல் சலமான்கா (Salamanca) சண்டையில் தோற்கடித்து ஸ்பெயினின் தலைநகரான மாட்ரிடைப் பிடித்துக்கொண்டான். ஸ்பானியர்கள்

படம் 19. வெலிங்டன் டியூக்

கொரில்லா சண்டை செய்து அவனுக்கு உதவி செய்தார்கள். அவன் 1813ல் விடோரியா (Vitoria) சண்டையில் பிரஞ்சுச்சேனையை முறி அடித்து அதைப் பிரனீஸ் மலைகளுக்கு அப்பால் துரத்திப் பிரான்சின்மீது படை எடுத்தான். அவன் 1814 ல் டுலூஸைக் கைப்பற்றிப் பாரிஸை நோக்கிச் சென்றுன். தீபகற்ப யுத்தம் இவ்வாறு முடிந்தது.

நேப்போலியன் வீழ்ச்சி:—தீபகற்ப யுத்தம் நெப்போலியனின் வலுவைக் குறைத்தது. இது நடந்து கொண்டிருக்கும்பொழுது ஐரோப்பாவின் மற்றைய இடங்களில் இருந்தும் அவனுக்கு எதிர்ப்பு ஏற்பட்டது. அவன் 1812ல் அவனுக்கு எதிராகக் கிளம்பிய ரஷியச் சக்கரவர்த்தியைத் தண்டிக்க மாஸ்கோவின்மீது படை எடுத்தான். அப்போது குளிர்காலமானதால் அவனுடைய பெரிய சேனை (Grand Army) குளிர் தாங்க முடியாமல் அநேகமாக இறந்துவிட்டது. அவன் திரும்பி வரும்பொழுது ஜெர்மனியில் கிளர்ச்சி உண்டாகி 1813 ல் லீப்ஸிக் (Leipzig) சண்டையில் தோல்வி அடைந்து ரைன் நதிக்கு அப்பால் துரத்தப்பட்டான். 1814ல் பிரான்சு பல பக்கங்களில் இருந்து படை எடுக்கப்பட்டது. நெப்போலியனை அரசுரிமையிலிருந்து நீக்கி அவனுடைய விரோதிகள் அவனை எல்பா (Elba) தீவிற்கு அனுப்பினார்கள். அவன் 1815ல் அதில் இருந்து தப்பித்துப் பிரான்சிற்குத் திரும்பிவந்து ஜனங்களால் குதூகலமாக வரவேற்கப்பட்டான். அவன் நூறு நாட்கள்தான் மறுபடியும் சக்கரவர்த்தியாக இருந்தான். ஏன் என்றால் அவனுடைய விரோதிகள் அவனை ஒழிப்பதற்கு ஆயத்தம் ஆனார்கள்.

வாடர்லு சண்டை, 1815:—நெப்போலியன் பெல்ஜியத்தின் தலைநகரான பரஸ்ஸெல்சுக்கு அருகாமையில் உள்ள வாடர்லு என்கிற இடத்தில் ஐரோப்பியச் சேனைகளை எதிர்க்கத் தயாரானான். வெலிங்டன் பிரபு அந்த சேனைகளுக்குத் தலைவனாக நியமிக்கப்பட்டான். ரஷியர்களும் ஆஸ்திரியர்களும் வந்து சேருவதற்கு முன் நெப்போலியன் வேகமாக சண்டையைத் தொடங்குவதற்குத் தயாரானான். சமயத்தில் ரஷ்யச் சேனையின் தளகர்த்தனை ப்ளூச்சர் வெலிங்டனுடன் வந்து சேர்ந்து


ஐரோப்பா
1815
கோபன்ஹேகன் 1801
1812. மாஸ்கோ.
லிப்ஸிக் 1813
1802. ஆமியான்ஸ்
வாடர்லூ
ஜேனா 1806
1815. பாரிஸ்
ஆஸ்டர்லிட்ஸ் 1805
வியென்னா 1815
ஹோஹன்லிண்டன் 1801
1809. கருன்னா
1800. மாரெங்கோ
மாட்ரிட்
லிஸ்பன்
1805. டிரபால்கார்

படம் 20.

கொண்டான். சண்டை மும்மரமாக நடந்தது. முடிவில் நெப்போலியன் தோல்வி அடைந்து சிறைபிடிக்கப்பட்டு செயின்ட் ஹெலினு தீவிற்கு அனுப்பப்பட்டான். அங்கே ஆறு வருஷங்கள் சிறைவாசம் செய்து இறந்தான்.

வியன்னு காங்கிரஸ், 1815:—ஆஸ்திரியாவின் தலை நகரான வியன்னுவில் ஐரோப்பிய தேச அதிகாரிகள் டினர்கள். அவர்கள் நெப்போலியன் செய்தவாறு எவனும் மறுபடியும் ஐரோப்பிய சமாதானத்தைக் கெடுக்கமுடியாத ஏற்பாடுகளைச் செய்தனர்.

பாரிஸ் சமாதான உடன்படிக்கை, 1815:—இந்த உடன்படிக்கையால் நெப்போலியனுடன் நடந்த பெரிய போர் முடிவுக்கு வந்தது. பிரான்சிற்குப் பதினெட்டாம் லூயி அரசன் ஆனுன்; பிரான்ஸ் சிறிய தேசமாகச் செய்யப்பட்டது. பிரஷ்யாவுக்கு ரைன் பிரதேசம் கிடைத்தது. பெல்ஜியமும் ஹாலந்தும் ஒரே இராஜ்யமாக இணைக்கப்பட்டன. நார்வேயும் ஸ்வீடனும் அதே மாதிரியாக ஆயின. இங்கிலாந்துக்கு பிரான்சினிடம் இருந்து மௌரிஷியசும் சில மேற்கு இந்தியத் தீவுகளும், ஹாலந்திடமிருந்து இலங்கையும் நன்னம்பிக்கை முனையும் கிடைத்தன. ஐரோப்பா முழுவதும் அரசர்கள் ஜனங்களின் சௌகரியத்தைக் கவனிக்காமல் தங்கள் ஆதிக்யத்தையே விருத்தி செய்துகொண்டனர்.

நெப்போலியன் யுத்தங்களுக்குப் பிறகு இங்கிலாந்தின் நிலைமை:—நீடித்த யுத்தங்களினுல் இங்கிலாந்திற்குப் பொருள் நஷ்டமும், மனிதச் சேதமும் ஏராளமாக உண்டாயிற்று. பொக்கிஷம் வரண்டது; தேசியக் கடன் மலைபோல வளர்ந்தது. வரிகள் உயர்ந்தன. வியாபாரம் நிலைகுலைந்தது. நாட்டில் வேலையில்லாக் கொடுமை மிகுந்தது. 1815ல் தான்யச் சட்டங்கள் பார்லிமெண்டில் நிறைவேற்றப்

பட்டன. அவைகளின்படி வெளிநாட்டில் இருந்து இறக்குமதியாகிற தான்யங்களுக்கு உயர்ந்த வரிகள் போடப்பட்டன. இவைகள் இங்கிலாந்தில் தான்யம் விளை விப்போர்களின் விருத்திக்காக ஏற்படுத்தப்பட்டன. ஆனால் நாட்டில் கோதுமையின் விலை மிகவும் உயர்ந்து ஜனங்கள் கஷ்டப்பட்டார்கள். அரசாங்கமும் செம்மையாக நடத்தப்படவில்லை. அது ஜனங்களை அடக்குமுறைகளுக்கு உட்படுத்தி ஆண்டு வந்தது. நாட்டில் சிறு கலகங்களும் கிளர்ச்சிகளும் ஏற்பட்டன. கைத்தொழில்களில் மாறுதல்கள் ஏற்பட்டதால் நாட்டுப்புறத்தில் இருந்து பட்டணங்களுக்கு ஜனங்கள் செல்லலானார்கள். பொது ஜனத் தேர்தலிலும், பிரதிநிதிகள் அனுப்புகிற முறையிலும் பார்லிமென்ட் சீர்திருத்தம் ஏற்படவேண்டும் என்று எங்கும் கிளர்ச்சி ஏற்பட்டது.

7. தொழிற் கிளர்ச்சி (The Industrial Revolution)

காரணங்கள்:— மூன்றாம் ஜார்ஜ் மன்னன் ஆட்சியில் தொழிற்கிளர்ச்சி ஏற்பட்டது. கையினால் செய்யப்பட்ட தொழில்கள் யந்திரங்களில் செய்யப்பட ஆரம்பித்தன. இப்பேர்ப்பட்ட கிளர்ச்சிக்கு 'தொழிற் கிளர்ச்சி' என்று பெயர். ஆங்கில இராஜ்யம் பெரியதானதால் ஆங்கில சாமான்கள் விற்பனைக்கு இடங்கள் உண்டாயின. சாமான்கள் செய்வதில் புதிய முறைகள் கண்டுபிடிக்கப்பட்டன. **ஜேம்ஸ் வாட்** நீராவியின் சக்தியைக் கண்டுபிடித்தான். நீராவியின் சக்தியால் யந்திரங்கள் ஓட்டப்பட்டன. புதிய யந்திரங்கள் தொழில்களின் விருத்திக்கு ஆதாரமாயின.

தொழில்கள்:— எல்லாவிதத் தொழில்களும் முன்னேற்றம் அடைந்தன. அவைகளுக்குள் முக்கியமானது **பருத்தித் தொழில்.** இந்தத் தொழில் விருத்திக்குப் புதிய

முறைகள் கண்டுபிடிக்கப்பட்டன. ஹார்க்ரீவ் நூல் நூற்கும் ஜென்னியையும் ஆர்கரைட் தண்ணீர் சட்டத்தையும், க்ராம்ப்டன் மியூல் (Mule) என்பதையும். கார்ட்ரைட் பவர் லூம் (Power Loom) என்கிற சக்தித் தறியையும் கண்டுபிடித்தார்கள். நிலக்கரித் தொழில் மிகவும் முன்னேற்றம் அடைந்தது; நிலக்கரிச் சுரங்கங்களில் நீராவிக் குழாய்கள் வைத்து வேலை செய்யப்பட்டன; டேவி என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட சேப்டி விளக்கு (Safety Lamp)



படம் 21. ராக்கெட்

சுரங்கங்களில் வேலை செய்பவர்களுக்கு மிகவும் உபயோகம் உள்ளதாயிற்று. இரும்பு, எஃகுத் தொழில்கள் நீராவி யந்திரங்களால் விருத்தி அடைந்தன; இரும்பு சாமான்கள் ஏராளமாகச் செய்யப்பட்டன. பேல் என்பவன் நீராவிப் படகைக் கண்டுபிடித்தான். ஜார்ஜ் ஸ்டீபென்ஸன் ராக்கெட் (Rocket) என்னும் ரயில் என்ஜினை உண்டுபண்ணி


இங்கிலாந்து
தொழிற்கிளர்ச்சி
1760-1820
டர்ஹாம்
கப்பல்
யார்க்
கம்பளம்
லிவர்ப்பூல்
ஷெப்பீல்ட்
பர்மிங்ஹாம்
இரும்பு சாமான்கள்
ஸ்வான்ஸி
தகர சாமான்கள்
லண்டன்

படம் 22.

னன். போக்குவரத்து சாதனங்கள் புதிய முறைகளால் விருத்தி அடைந்தன. இரயில் பாதைகள் ஆரம்பிக்கப் பட்டன. ஜான் மாகடம் (John Macadam) பெரிய சாலைகளைச் சமனிட்டு ஒழுங்குபடுத்தினன். இங்கிலாந்து முழுமையும் கப்பல்கள் செல்லும் கால்வாய்கள் வெட்டப் பட்டன.

பலன்கள்: நன்மைகள்:—தொழிற் கிளர்ச்சியினால் இங்கிலாந்திற்குப் பல நன்மைகள் உண்டாயின. சாமான்கள் யந்திரங்களில் ஏராளமாகவும் சீக்கிரமாகவும் செய்யப்பட்டன; அவைகள் விலை சரசமாகவும் விற்கப்பட்டன. நாட்டில் பெரிய தொழிற்சாலை அதிபதிகள் பணக்காரர்கள் ஆயினர். ஜனங்கள் விருத்தி அடைந்து புதிய பட்டணங்களும் உண்டாயின. இங்கிலாந்தின் வியாபாரம் மிகவும் முன்னேற்றத்தை அடைந்தது. அது செல்வமும் செல்வாக்கும் மிகுந்த நாடாக உலகத்தில் விளங்கலாயிற்று.

தீமைகள்:—தொழிற் கிளர்ச்சியினால் பல தீமைகளும் உண்டாயின. சிலர் பணக்காரர்களாகவும் பலர் ஏழைகளாகவும் ஆயினர். நாட்டில் தொழில் விருத்தியடைய, விவசாயம் குறைய ஆரம்பித்தது. விவசாயத்திலும் ஒரு பெரிய கிளர்ச்சி ஏற்பட்டுப் புது முறைகள் கையாளப்பட்டாலும், ஜனங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களெல்லாவற்றையும் நாட்டில் விளைவிக்க முடியவில்லை. நாட்டுப்புறங்களில் இருந்து நகரங்களுக்கு ஜனங்கள் சென்றதால் கிராமங்கள் பாழாயின. நகரங்களில் ஜன நெருக்கம் ஏற்பட்டு வியாதிகள் அதிகமாயின. யந்திர சாலைகள் சுகாதார விதிகளின்படி கட்டப்படவில்லை; மனிதர்கள், ஸ்திரிகள், குழந்தைகள் எல்லோரும் ஏராளமாகச் சேர்ந்து கட்டிடங்களுக்குள்ளும் சுரங்கங்களிலும் அதிக நேரம் வேலை செய்தனர். தொழிலாளர்களுக்கு எங்கும்

கஷ்டங்கள் ஏற்பட்டன. தொழிற் கிளர்ச்சியினல் பார்லி மெண்டின் சீர்திருத்தம் மிகவும் அவசியம் ஆயிற்று. பாழான கிராமங்கள் பார்லி மெண்டிற்குப் பிரதி நிதிகளை அனுப்பிக்கொண்டிருந்தன; ஆனல் புதிதாக ஏற்பட்ட மான்செஸ்டர், பர்மிங்ஹாம் போன்ற நகரங்களுக்கு அந்த உரிமை இல்லை. நாட்டில் ஏழைகள் அதிகமாயினர். எங்கும் கலவரம் ஏற்பட்டு ஜனங்கள் அனுகூலமான சீர் திருத்தங்களை எதிர்பார்த்தனர்.

8. ஜான் வெஸ்லி, 1703—91:—

பதினெட்டாவது நூற்ருண்டில் ஆங்கிலேயர்கள் மத விஷயங்களில் ஈடுபடாது பொருள் திரட்டுவதிலேயே ஊக் கம் கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஜான் வெஸ்லி என்னும் மதச் சீர்திருத்தக்காரர் கிளம்பி ஜனங்களின் எண்ணங்களைக் கடவுளின்மீது செலுத்தப் பிரயாசைப் பட்டார். அவர் 1703-ல் பிறந்தார். அவர் சிறு பிராயத்தி லிருந்தே மதத்தைச் சீர்திருத்துவதில் ஊக்கம் கொண்டார். அவர் 1729ல் ஒரு சிறிய மதச் சங்கத்தை ஆக்ஸ் போர்டில் ஸ்தாபித்தார். அவருக்கு ஆரம்பத்தில் உதவி செய்தவர்கள் அவருடைய சகோதரரும் ஆங்கிலக் கவியுமான சார்லஸ் வெஸ்லியும், மதப்பிரசாரரான ஜார்ஜ் உயிட்பீல்டும் ஆவர். அவர்கள் ஆரம்பித்த சங்கமே மேதாடிஸ்ட் அல்லது ஒழுங்கு முறை இயக்கம் (Methodist Movement) என்று வழங்கலாயிற்று. அந்த இயக்கத் தினர் தெய்வபக்தி மிகுந்தவர்கள்; அவர்கள் ஒழுங் கான குணங்களை யுடையவர்கள். ஜான்வெஸ்லி லிங்கன் காலேஜில் ஆசிரியராக இருந்தார். அவர் 1735 ல் அமெரிக் காவில் உள்ள ஜார்ஜியா குடியேற்ற நாட்டிற்குச் சென்ருர். அவர் 1738 ல் இங்கிலாந்திற்குத் திரும்பி வந்தார். அவர்

மிகவும் ஊக்கத்துடன் மதவிஷயங்களைப் பற்றிப் பிரசங்கம் செய்தார். ஆங்கில மாதாகோயில் குருமார்கள் அவரையும் அவர் சிஷ்யர்களையும் தங்கள் கோயில்களில் பிரசங்கங்கள் செய்ய இடம் கொடுக்க மறுத்தார்கள். ஆகையால் அவர் மெதாடிஸ்டுகள் தொழுவதற்குத் தனிப்பட்ட கோயில்களை 1739-ல் கட்டினர். அவர்நாடு முழுதும் அலைந்து திரிந்துப் பிரசங்கங்கள் செய்தார். இவருடைய முறைகளை அநேகர் பின்பற்றினர்கள். ஆனல் சிலர் அவருக்கு எதிரிகள் ஆனர்கள். அவரும் அவருடைய இயக்கத்தினரும் வியாதியஸ்தர்களையும் கைதிகளையும் கண்டு மனத் தேற்றுதலைச் செய்தார்கள். ஏழை ஜனங்கள் அவர்கள் கூறியதைக் கேட்டு மத ஊக்கம் கொண்டார்கள். ஜான் வெஸ்லி அவர் இயக்கத்தை நன்ருக ஸ்தாபித்து விட்டு 1791-ல் இறந்தார். அவர் ஆங்கில மதச் சீர்திருத்தக்காரர்களுள் சிறந்தவர் ஆவர்.

பயிற்சிகள்:—

1. மூன்ரும் ஜார்ஜ், இரண்டாம் ஜார்ஜுக்கு என்ன உறவு ? அவன் ஏன், எவ்வாறு தன் அதிகாரத்தை விருத்தி செய்து கொள்ள ஆரம்பித்தான் ? அவன் அவ்வாறு செய்ததினுல் உண்டான பலன்கள் என்ன ?

2. அமெரிக்காவில் உள்ள ஆங்கிலக் குடியேற்ற நாடுகள் இங்கிலாந்துடன் என் யுத்தம் செய்தன ? குடியேற்ற நாடுகளின் பெரிய தளகர்த்தன் யார்? இங்கிலாந்து தோல்வி அடைந்த இரண்டு இடங்கள் யாவை ? இங்கிலாந்தின் தோல்விக்கு காரணங்கள் என்ன? யுத்தம் எந்த உடன்படிக்கையினுல் முடிந்தது?

3. இளைய வில்லியம் பிட்டின் ஆதி சரித்திரம் யாது ? அவன் செய்த சீர்திருத்தங்களைக் குறிப்பிடுக. அவன் அயர்லாந்தின் ஐக்கியச் சட்டத்தை எப்படி நிறைவேற்றினுன் ? அவன்

ஏன் தன் வேலையை இராஜினாமா கொடுத்தான்? அவனுடைய வெளிநாட்டு நோக்கங்கள் யாவை? அவன் எவ்வாறு இங்கிலாந்தைக் காப்பாற்றினன்?

4. பிரஞ்சுக் கிளர்ச்சி ஏன், எவ்வாறு உண்டாயிற்று? அதன்பலன்கள் என்ன?

5. பிரஞ்சுக் கிளர்ச்சி யுத்தம் ஏன் ஏற்பட்டது? அதில் இங்கிலாந்துக்குக் கிடைத்த நான்கு கடல் வெற்றிகளைக் கூறுக. எந்த உடன்படிக்கையால் அந்த யுத்தம் முடிவிற்கு வந்தது?

6. நெப்போலியனுடன் நடந்த யுத்தத்திற்குக் காரணங்கள் என்ன? டிராபல்கர் சண்டையில் யார் வெற்றி பெற்றார்? நெப்போலியன் ஐரோப்பாவில் எவ்வாறு ஆதிக்யம் பெற்றான்? அவனது ஐரோப்பிய கண்ட நிர்மாணம் என்பது யாது?

7. தீபகற்பயுத்தத்தின் காரணங்கள் யாவை? அந்த யுத்தத்தில் பிரபல ஆங்கிலத் தளகர்த்தன் யார்? அவனுடைய தீபகற்ப வெற்றிகளுள் நான்கைக் கூறுக.

8. நெப்போலியனின் வீழ்ச்சிக்குக் காரணங்கள் யாவை? அவன் எந்தச் சண்டையில் முடிவாகத் தோற்கடிக்கப்பட்டான்?

9. வியன்னு காங்கிரஸ் ஏன் கூட்டப்பட்டது? பாரிஸ் சமாதான உடன்படிக்கையின் நிபந்தனைகள் யாவை? ஐரோப்பா படம் வரைந்து அதில் குறிப்பிடுக.

10. நெப்போலியன் யுத்தங்களுக்குப் பிறகு இங்கிலாந்தின் நிலைமை என்ன?

11. தொழில் கிளர்ச்சி என்றால் என்ன? அது ஏன், எவ்வாறு ஏற்பட்டது? அதனல் உண்டான நன்மைகளில் இரண்டையும் தீமைகளின் இரண்டையும் குறிப்பிடுக.

12. ஜான் வெஸ்லியைப்பற்றி ஒரு குறிப்பு எழுதுக.

அதிகாரம் 3.

ஜார்ஜ் IV, 1820—30

முக்கியஸ்தர்கள் :—

ப்ரன்ஸ்விக் கரோலினி
லன்டன்டெரி பிரபு
லிவர்பூல் பிரபு.
ஜார்ஜ் கானிங்.
ஜான் ஹஸ்கிஸன்.
வெலிங்டன் பிரபு.
டேனியல் ஓ கானல்.

முக்கியத் தேதிகள் :—

1820 ஜார்ஜ் IV அரசனுதல்.
1822 ஜார்ஜ் கானிங் மந்திரி ஆதல்.
1827 நவாரினே சண்டை.
1829 கத்தோலிக் மதச் சுயேச்சைச்சட்டம்.
1830 நான்காம் ஜார்ஜின் மரிப்பு.

அரசன் ஆதல்:—மூன்றும் ஜார்ஜ மன்னன் இறந்ததும், அவனுடைய குமாரனுன வேல்ஸ் இளவரசன் நான்காம் ஜார்ஜ் என்னும் பட்டத்துடன் அரசன் ஆனன். அவன், தன் தந்தை அசக்தமாய் இருக்கும் பொழுதிலிருந்தே அரசாங்க விஷயங்களைக் கவனித்து வந்தான். அவன் ஆடம்பரத்தில் பிரியம் உள்ளவன் ; சுய நலத்தையே கருது பவன் ; அவனுக்கு ஆனந்தம் கொடுக்கும் விஷயங்களில் ஈடு பட்டவன் ; அவன் சுருசுருப்பு இல்லாதவன், அவன் தந்தை இருந்தபொழுதும் இறந்தபொழுதும் அவனை ஒருவரும் நேசிக்கவும் இல்லை, மரியாதை செய்யவும் இல்லை.

இராணி கரோலினியின் வழக்கு:—ஜார்ஜ் 1795 ல் ப்ரன்ஸ்விக் கரோலினியை மணம் செய்து கொண்டான். அதற்குப் பிறகு அவர்கள் சண்டை போட்டுக்கொண்டு பிரிந்து விட்டார்கள். ஜார்ஜ் அரசன் ஆனதும், கரோலினி இங்கிலாந்துக்குத் திரும்பி வந்து தன்னை இராணியாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டாள். ஜார்ஜ் அவளை வெறுத்தான்; அவன் விவாகத்தை

படம் 23 ஜார்ஜ் IV

ரத்து செய்யப் பிரபுக்கள் சபையில் ஒரு சட்ட.த்தைக் கொண்டுவர மந்திரிகளைத் தூண்டினன். ஜனங்கள் அபிப்பிராயம் கரோலினியின் சார்பாக இருந்தது. எதிர் கட்சியினரான விக்கர்கள் அவள் சார்பாகப் பேசினர்கள். விசாரணை நடந்து கொண்டிருக்கும் பொழுது அவள் விசாரணையால் அரசனுடைய கௌரவம் குறைந்தது.

காடோ தெரு சதியாலோசனை :—1820. டோரி மந்திரி சபையினர் முன்போல் அரசாங்கத்தை நடத்தினர். ஆர்தர் திஸில்வுட், மந்திரி சபையினர் எல்லோரையும் கொல்லுவதற்குச் சதியாலோசனைசெய்தான். அவனுடைய நண்பன் ஒருவனுல் அது வெளிப்பட்டது. திஸில்வுட்டும் அவனுடைய தோழர்களும் தூக்கில் போடப்பட்டார்கள். பிரதம மந்திரி லிவர்பூல் பிரபுவினுல் மந்திரி சபையின் ஒற்றுமையை ஏற்படுத்த முடியவில்லை. ஜார்ஜ்கானிங் மந்திரிப் பதவியிலிருந்து விலகிக் கொண்டான். லண்டன் டெரி பிரபு 1822-ல் தற்கொலை செய்து கொண்டு உயிர் நீத்தான்.

லிவர்பூல் பிரபுவின் புதிய மந்திரிசபை:—1822-27. லண்டன்டெரி பிரபு வலுத்த பழைய காலத்து டோரி. அவன் இறந்த பிறகு, லிவர்பூல் பிரபு தன் மந்திரி சபைக்குப் புதிய டோரிகளைச் சேர்த்துக் கொண்டான். புதிய டோரிக்களுக்குத் தலைவன் ஜார்ஜ்கானிங்.

ஜார்ஜ்கானிங்:—அவன் வெளிநாட்டுக் காரியதரிசியாக நியமிக்கப்பட்டான். அவன் வெளிநாட்டு விஷயங்களைச் செம்மையாகக் கவனித்தான். அவன் விசாலமான நோக்கங்களைக் கொண்டவன். அவன் தேசிய இயக்கங்களுக்கும் சுயேச்சை இயக்கங்களுக்கும் உதவி செய்தான். ஐரோப்பிய அரசர்களும் சக்கரவர்த்திகளும் சேர்ந்து ஜனங்களின் இயக்கங்களை 1815 லிருந்து அடக்கி வந்தார்கள். ஆஸ்திரியா, ரஷ்யா சக்கரவர்த்திகளும், பிரஷ்யா அரசனும் அதில் சேர்ந்தவர்கள். அவர்கள் ஆட்சிக்கு எதிராகப் பல இடங்களில் கிளர்ச்சிகள் ஏற்பட்டன. ஸ்பெயின், போர்ச்சுகல், நேப்பில்ஸ் முதலிய இடங்களில் தேசிய இயக்கங்கள் உண்டாகி அரசாங்கங்களில் மாறுதல்கள் செய்யப்பட்டன. தென் அமெரிக்காவில் உள்ள ஸ்பானிய, போர்ச்சுகீஸி

யக் குடியேற்ற நாடுகள் சுதந்திரம் பெற அவைகளின் தாய் தேசங்களுக்கு எதிராகக் கிளர்ச்சிகள் செய்தனர். அமெரிக்க ஐக்கிய இராஜ்யங்களுக்குத் தலைவனான மன்ரோ புது உலகத்தில் ஐரோப்பிய தேசங்களில் தலையிடக்கூடாது என்று ஒரு அமுலைக் கொண்டுவந்தான். அவன் அவ்வாறு செய்வதற்குக் கானிங் உதவி செய்தான். அவன் கிரேக்க சுதந்திர யுத்தத்தில் துருக்கியர்களுக்கு எதிராகக் கிரேக்கர்களுக்குச் சகாயம் புரிந்தான். அந்த யுத்தத்தில் பிரபல ஆங்கிலக் கவியான பைரன் பிரபு சண்டை செய்து இறந்தான். ஆங்கிலக் கப்பற்படை 1827-ல்நவாரினோசண்டையில் துருக்கியக் கப்பற்படையைத்தோற்கடித்ததால் கிரேக்கர்கள் சுதந்திரம் பெற்றார்கள். அதே வருஷத்தில் கானிங் பிரதம மந்திரி ஆனான். அவன் ஆறு மாதங்களுக்குள் இறந்தான். அக்காலத்திய இராஜிய நிபுணர்களுள் அவன் சிறந்தவனாக விளங்கினான்.

ராபர்ட் பீல்:—அவன் உள்நாட்டுக் காரியதரிசியாக இருந்தான்; கிரிமினல் சட்டச் சீர்திருத்தம் செய்தான். சிறு குற்றங்களுக்கு பெருந்தண்டனைகள் விதிக்க ஏற்பட்ட சட்டங்களை மாற்றினான்.

ஜான் அஸ்கிஸன்: அவன் வியாபார விஷயங்களுக்கு மந்திரி. அவன் அநேக சாமான்களின் மேல் விதிக்கப்பட்ட வரிகளைக் குறைத்தான்; தொழிலாளர் சங்கங்களுக்கு எதிராக இருந்த சட்டங்களை நீக்கினான். அவன் காலத்தில் இங்கிலாந்தின் வியாபாரம் விருத்தியாயிற்று.

வேலிங்டன் பிரபு: 1828—30. அவன் இரண்டு வருஷங்கள் பிரதம மந்திரியாக இருந்தான். அவன் மந்திரி சபையில் பழைய டோரிக்களையே நியமித்தான். புதிய டோரிக்கள் வேலையைவிட்டு நீக்கிக்கொண்டார்கள். கத்தோலிக்குகள் இராஜீயச் சுதந்திரங்கள் இல்லாமல் கஷ்டப்

பட்டுக் கொண்டிருந்தார்கள். ஐர்லாந்தில் பெரிய கிளர்ச்சி ஏற்பட்டது. அதற்குத் தலைவன் டேனியல் ஓ கானல்; அவன் கத்தோலிக் மதஸ்தன்; கத்தோலிக் சங்கம் ஒன்றை ஏற்படுத்தினுன். அவன் பார்லிமெண்டிற்குப் பிரதிநிதியாக ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டான்; ஆனல் அவன் கத்தோலிக் ஆதலால் பார்லிமெண்ட் சபைக்குள் விடப் படவில்லை. தேசத்தில் கத்தோலிக்குகளுக்கும் எதிர்ப்பு மதஸ்தர்களுக்கும் உள்நாட்டு யுத்தம் ஏற்படும் நிலைமை யில் இருந்தது. பரிசோதனைச் சங்கச் சட்டங்கள் 1828-ல் எடுக்கப்பட்டன. கத்தோலிக் மதச் சுயேச்சைச் சட்டம் (Catholic Emancipation Act) 1829-ல் நிறைவேறி யது. கத்தோலிக்குகள் இராஜீயச் சுதந்திரங்களும் பெற் ருர்கள். வெலிங்டன் பிரபு வெளிநாட்டு விஷயங்களில் ஐரோப்பிய அரசர்களின் ஆதிக்யத்தை ஆதரித்தான். நான் காம் ஜார்ஜ் பத்து வருஷங்கள் அரசனுக இருந்து 1830-ல் தேக வியோகமானுன்.

பயிற்சிகள்

1. நான்காம் ஜார்ஜின் குணங்களைப் பற்றி எழுதுக.

2. அரசி கரோலினியின் வழக்கைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்?

3. காடோ தெரு சதியாலோசனை எவ்வாறு முடிந்தது?

4. ஜார்ஜ் கானிங்கின் வெளிநாட்டு நோக்கங்கள் யாவை?

5. லிவர்ப்பூல் புதிய மந்திரி சபையினர் செய்த நல்ல விஷயங்களைக் குறிப்பிடுக.

6. கத்தோலிக் மத சுயேச்சைச் சட்டம் யாரால், எப் பொழுது, ஏன் இயற்றப்பட்டது?

அதிகாரம் 4.

வில்லியம் IV, 1830—'37.

முக்கியஸ்தர்கள் :—

க்ரே பிரபு.
லார்ட் ஜான் ரஸ்ஸெல்.
லார்ட் பால்மெர்ஸ்டன்.
மெல்பர்ன் பிரபு.

முக்கியத் தேதிகள்.

1830. நான்காம் வில்லியம் அரசன் ஆதல்.
க்ரே பிரபுவின் விக் மந்திரி சபை.
1832. முதல் சீர்திருத்தச் சட்டம்.
1833. அடிமைகளுக்கு சுயேச்சை கொடுத்த சட்டம்.
1834. ஏழைகளுக்கு உதவிசெய்ய ஏற்பட்ட புதிய சட்டம்.
1835. நகரசபை சீர்திருத்தச் சட்டம்.
1837. நான்காம் வில்லியத்தின் மரிப்பு.

நான்காம் வில்லியம் அரசன் ஆதல் :—அவன் நான்காம் ஜார்ஜின் சகோதரன். அவன் நெடுநாட்கள் கப்பற் படையில் இருந்ததால் அவனுக்கு "மாலுமி அரசன்" என்று பெயர். அவன் நல்ல சுபாவம் உடையவன்; காருண்யம் மிகுந்தவன்; உண்மையைக் கடைப் பிடித்தவன். அவன் ஜனங்களுடைய அன்பைப் பெற்றான். அவனுடையகாலத்தில் பல சீர்திருத்தச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டதால் அவனுடைய ஆட்சிக்கு "சீர்திருத்தங்கள் நிறைந்த ஆட்சி" என்று பெயர்.

க்ரே பிரபு மந்திரி சபை :—1830-ல் நடந்த பொதுத் தேர்தலில் விக்கர்களே ஜயம்பெற்று பார்லிமென்டிற்கு அதிகமாக வந்தார்கள். க்ரே பிரபு பிரதம மந்திரி ஆனான்;

தன் மந்திரிசபையில் விசாலமான நோக்கமுள்ளவர்களை அங்கத்தினர்களாக நியமித்தான். அவர்களுள் முக்கியமானவர்கள் பால்மெர்ஸ்டன் பிரபு, மெல்பர்ன்பிரபு லார்ட் ஜான் ரஸ்ஸெல். இவர்கள் பிறகு பிரதம மந்திரிகளாக வந்தார்கள். அவர்களால் அநேகச் சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன.

படம் 24. வில்லியம் IV.

1. பார்லிமெண்ட் சீர்திருத்தச் சட்டம். 1832.

காரணங்கள்:—பார்லிமென்டை சீர்திருத்தவேண்டுமென்று ஜனங்கள் அபிப்பிராயப் பட்டார்கள். பொதுத்

தேர்தல்களிலும் பிரதிநிதிகள் அனுப்பும் முறைகளிலும் பல கெடுதிகள் இருந்தன. பழைய முறைகள் மாறுதல் அடையவில்லை. அவைகள் முதலாம் எட்வர்ட் காலத்தில் ஏற்படுத்தியவாறே இருந்தன. தொழிற் கிளர்ச்சியினால் நாட்டில் பல மாறுதல்கள் ஏற்பட்டதை முன்னமேயே அறிந்துகொண்டோம். காமன்ஸ் சபைக்குப் பிரதிநிதிகள் ஜனத்தொகைக்குத் தகுந்தவாறு அனுப்பப் படவில்லை. பெரிய ஜில்லாக்களான யார்க்ஷயர் அல்லது லாங்காஷயர், ரட்லண்ட் அல்லது வெஸ்ட்மோர்லண்டு போன்ற சிறிய ஜில்லாக்கள் அனுப்பிய அளவே பிரதிநிதிகளை அனுப்பி வந்தன. மான்செஸ்டர், ஷெப்பீல்டு, லீட்ஸ், பர்மிங்ஹாம் போன்ற பல பெரிய பட்டணங்கள் பிரதிநிதிகள் அனுப்பும் உரிமையே இல்லாதிருந்தன. ஆனால் சில பாழடைந்த பட்டணங்கள் (Rotten Boroughs) ஒவ்வொன்றும் இரண்டு பிரதிநிதிகளை அனுப்பி வந்தன. பொதுத் தேர்தலில் சில ஜனங்களுக்கே வோட்டுப்போடும் உரிமை இருந்தது. பொதுஜன சபையில் பெரிய மிராசுதார்கள் செல்வாக்குப் பெற்றிருந்தார்கள். செல்வம் மிகுந்த புதிய தொழில் அதிகாரிகளும் வியாபாரிகளும் பிரதிநிதிகள் அனுப்பும் உரிமை இல்லாதிருந்தார்கள். இளைய பிட் பார்லிமென்ட் சீர்திருத்தம் செய்ய முயன்றும் முடியாமல் போயிற்று. பிரஞ்சுக் கிளர்ச்சியில் ஏற்பட்ட கெடுதியினால் இங்கிலாந்தில் சீர்திருத்தங்கள் நிறுத்தப்பட்டன. நான்காம் ஜார்ஜ் காலத்தில் விக்கர்கள் பார்லிமெண்டில் முயற்சிகள் எடுத்துக்கொண்டார்கள். டோரிக்களினுடைய எதிர்ப்பினால் அவை வீணாயின. நாடு முழுவதும் சீர்திருத்த உணர்ச்சி ஏற்பட்டது. சீர்திருத்தச் சங்கங்கள் பர்மிங்ஹாம் முதலிய பெரிய பட்டணங்களில் ஸ்தாபிக்கப்பட்டன. ஆகையால் விக்கர்கள்

அதிகாரம் பெற்றதும் அவர்கள் பார்லிமென்டின் சீர் திருத்தத்தை முதன்மையாகக் கவனிக்கத் தொடங்கினர் கள்.

எவ்வாறு நிறைவேறியது:—மந்திரி லார்ட் ஜான் ரஸ் ஸெல் 1831-ல் ஒரு சீர்திருத்தச் சட்டத்தை பொதுஜன சபையில் கொண்டு வந்தான். அது நிறைவேற்றப்பட வில்லை. பார்லிமென்ட் கலைக்கப்பட்டது. பொதுத் தேர்த லில் சீர்திருத்தக்காரர்களே தேர்ந்தெடுக்கப்பட்டு அதிக மாக பார்லிமென்டிற்கு வந்தார்கள். இரண்டாவது பில் பொதுஜன சபையில் நிறைவேறியது; ஆனால் பிரபுக்கள் சபையில் தள்ளப்பட்டது. நாடு முழுவதும் கலவரங்கள் ஏற்பட்டன. அரசன் பிரபுக்கள் சபையில் புதுப் பிரபுக் களை ஏற்படுத்திச் சட்டத்தை நிறைவேற்றுவதாகப் பய முறுத்தினன். உடனே அந்தச் சட்டத்திற்கு எதிராக இருந்த வெலிங்டன் பிரபு அது சபைக்குக் கொண்டுவந்த பொழுது தன்னுடைய நேயர்களுடன் வெளியேறியதால் சட்டம் நிறைவேறியது.

நிபந்தனைகள்:—1832 சீர்திருத்தச் சட்டத்தில் கண்ட விஷயங்களாவன:—இரண்டாயிரம் ஜனங்களுக்குக் குறை வான எல்லாப் பட்டணங்களும் பிரதிநிதிகள் அனுப்பும் சுதந்திரத்தை இழந்தன. இரண்டாயிரத்திலிருந்து நாலா யிரம் ஜனங்கள் வரையில் உள்ள பட்டணங்கள் ஒவ் வொன்றும் ஒரு பிரதிநிதி அனுப்ப உரிமை பெற்றன. இவ்வாறு காலியான இடங்கள் ஜனங்கள் நிறைந்த பெரிய ஜில்லாக்களுக்கும் புதிய பட்டணங்களுக்கும் கொடுக்கப்ப ட்டன. பொது ஜனங்களுக்கு வோட்டுக் கொடுக்கும் உரிமை அதிகமாகக் கொடுக்கப்பட்டது. ஜில்லாக்களில் குத்தகைதார்களும் வருஷம் ஐம்பது பவுன் கொடுக்கும் நிலச் சுவான்தார்களும் வோட்டுரிமை பெற்றார்கள். பட்ட

ணங்களில் பத்துபவுன் வரி கட்டுபவர்களுக்கு அந்த உரிமை கொடுக்கப்பட்டது.

அதன் முக்கியம்:—டோரிக்கள் சீர்திருத்தச் சட்டத்தை ஒரு பெரிய மாறுதலைச் செய்த சட்டம் என்று கருதினர்கள். இதுவரையில் நிலம் உடையவர்களே பார்லிமென்டில் ஆதிக்யம் பெற்றிருந்தார்கள்; இதற்குப் பிறகு அவர்களுடைய அதிகாரம் குறைந்தது. அதிகப் பணக்காரர்களும், அதிக ஏழைகளும் அல்லாத மத்தியதர ஜனங்களுக்கும் ஆதிக்யம் கிடைத்தது. குடியானவர்களும் கடைக்காரர்களும் வோட்டுரிமை பெற்றுர்கள். இதற்குப் பிறகும் ஓட் உரிமை பெருத ஜனங்கள் அதிகமாக இருந்தார்கள். எல்லா ஜனங்களும் அந்த சுதந்திரத்தைப் பெற இன்னும் மூன்று சீர்திருத்தச் சட்டங்கள் நிறைவேற்ற வேண்டியதாய் இருந்தது. உடனே பொதுத் தேர்தல் நடந்து சீர்திருத்தப்பட்ட பார்லிமேன்ட் பல சீர்திருத்தங்களைச் செய்தது.

2. மற்றையச் சீர்திருத்தங்கள்

பிரிடிஷ் சாம்ராஜ்யத்தில் உள்ள அடிமைகளுக்கு 1833ல் சுயேச்சை கொடுக்கப்பட்டது. அடிமைகளை வைத்திருந்தவர்கள் நஷ்ட ஈடாக இருபது மிலியன் பவுன் பெற்றுர்கள். ஏழைகளைக் கவனிப்பதற்காகப் புதிய சட்டம் 1834ல் நிறைவேற்றப்பட்டது; குறைந்த கூலிகளைப் பெறுகிற ஏழைத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்பட்டவை நிறுத்தப்பட்டன; பல பாரிஷ்கள் சேர்ந்த யூனியன்கள் ஏற்படுத்தப்பட்டு ஏழைகளைக் கவனித்து வந்தன. நகர சபைச் சட்டம் 1835ல் நகரங்களில் பெரிய மாறுதல்களைச் செய்தது. நகரசபை அங்கத்தினர்கள் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

வெளிநாட்டு விஷயங்கள் :—பால்மெர்ஸ்டன் பிரபு வெளிநாட்டு மந்திரியாக இருந்தான். அவன் தைரியம் மிகுந்தவன்; யாரையும் இலட்சியம் செய்யாதவன். ஐரோப்பா கண்டத்தில் ஏற்பட்ட தேசீய, சுயேச்சை இயக்கங்களுக்கு உதவி செய்தான். பெல்ஜியம், போர்ச் சுகல், ஸ்பெயின் முதலிய தேசங்கள் அவன் உதவியால் சுதந்திரம் பெற்றன.

மேல்பர்ன் பிரபு,—அவன் 1834ல் பிரதம மந்திரி ஆனன். அவன் நன்ருகப் படித்தவன்; கெட்டிக்காரன்; விசாலமான மனதை உடையவன். ஆனல் அவனுக்கு உறுதியான திடச் சித்தம் கிடையாது. தன்னுடைய கட்சியின் ஒற்றுமையைக் கவனிப்பதே அவன் முக்கிய நோக்கமாயிற்று. அவனுக்குப் பார்லிமெண்டில் எதிர்ப்பு அதிகம் ஏற்பட்டது. புதிய டோரிக்கட்சிக்குத் தலைவன் ஸர். ராபர்ட் பீல். அவன் நல்ல அரசாட்சியும், திடப் பொக்கிஷத் திட்டமும், நிதானமான சீர்த்திருத்தமும் செய்வதற்கும் மத ராஜீய விஷயங்களில் அப்பொழு தைய நிலைமையைக் காப்பாற்றவும் எண்ணம் கொண் டிருந்தான். அவனுடைய புதிய டோரிக் கட்சியினர் கன்ஸ்ர்வேடிவ்கள் (Conservatives) என்று பெயர் கொண்டார்கள். விக்கர்கள் லிபரல்கள் (Liberals) என்ற புதுப் பெயருடன் அழைக்கப்பட்டார்கள். அரசன் அவர் களிடத்தில் வெறுப்புக்கொண்டான். அவன் 1834-ல் மெல்பர்ன் பிரபுவைத் திடீரென்று வேலையில் இருந்து நீக்கி, பீலைப் பிரதம மந்திரியாகச் செய்தான். ஆனல் பீலின் கட்சியினர் பொதுஜன சபையில் குறைவாக இருந்தனர். அவன் புதுப் பார்லிமெண்டைக் கூட்டினன். அதிலும் அவன் கட்சியினர் அதிகமாக இல்லை. ஆகையால் அவன்

இராஜிநாமா கொடுத்தான். மெல்பர்ன் பிரபு திரும்பவும் பிரதம மந்திரி ஆனான். நான்காம் வில்லியம் 1837ல் இறந்ததால், அவன் ஆட்சி முடிவுபெற்றது.

பயிற்சிகள் :—

1. நான்காம் வில்லியம் நான்காம் ஜார்ஜுக்கு என்ன உறவு? அவனுக்கு "மாலுமி அரசன்" என்று ஏன் பெயர் வந்தது?

2. நான்காம் வில்லியத்தின் ஆட்சிக்குச் "சீர் திருத்தங்கள் நிறைந்த ஆட்சி" என்று பெயர் வந்ததன் காரணம் என்ன?

3. க்ரே பிரபு மந்திரிசபையின் முக்கிய அம்சங்கள் என்ன?

4. பார்லிமென்ட் ஏன் சீர்திருத்தப்பட வேண்டியிருந்தது? பார்லிமென்ட் சீர் திருத்தச் சட்டம் எப்பொழுது, எவ்வாறு நிறைவேறியது? அதில் கண்டிருந்த நிபந்தனைகள் யாவை? அந்தச் சட்டம் எவ்வாறு முக்கியமானது? சீர்திருத்தப்பட்ட பார்லிமென்ட் செய்த சீர்திருத்தங்களில் மூன்றைச் சொல்க.

5. மெல் பர்ன் பிரபு விக்கர்களின் ஆதிக்யத்தை எவ்வாறு நிலை நிறுத்தினான்? அப்பொழுது அவனுடைய எதிர்க் கட்சியின் தலைவன் யார்?

அத்தியாயம் 3.

விக்டோரியா மகாராணியின் ஆட்சி

சாக்ஸே கோபர்க் கோதா வம்சாவளி

விக்டோரியா = சாக்ஸனி கோபர்க்
1837—1901 | ஆல்பர்ட் (1861)

எட்வர்ட் VII 1901—10

ஜார்ஜ் V 1910—36

முக்கியஸ்தர்கள்:—

சாக்ஸனி கோபர்க் ஆல்பர்ட்
மெல்பர்ன் பிரபு
ஸர் ராபர்ட் பீல்
லார்ட் ஜான் ரஸ்ஸெல்
டெர்பி பிரபு
அபெர்டீன் பிரபு
பால்மெர்ஸ்டன் பிரபு
வில்லியம் ஈவார்ட் கிளாட்ஸ்டன்
பென்ஜமின் டிஸ்ரேலி பீக்கன்ஸ்பீல்ட் பிரபு
சாலிஸ்பரி பிரபு.

முக்கியத் தேதிகள்:—

1837 விக்டோரியா அரசி ஆதல்
1839 பென்னி போஸ்டேஜ் ஆரம்பம்.
1846 தானியச் சட்டங்கள் ரத்து.
1848 ஐரோப்பாவில் கிளர்ச்சிகள்.
1854 கிரிமியா யுத்த ஆரம்பம்.
1856 பாரிஸ் உடன்படிக்கை.
1857 இந்திய சிப்பாய்க் கலகம்.
1858 கிழக்கு இந்தியா கம்பெனியின் முடிவு.
1861 அமெரிக்கா உள் நாட்டு யுத்தம்.
1867 இரண்டாவது சீர்திருத்தச் சட்டம்
1869 சூயஸ் கால்வாய் வெட்டுதல்.
1878 பெர்லின் உடன்படிக்கை.
1884 மூன்றாவது சீர்திருத்தச் சட்டம்.
1886 முதல் ஐரிஷ் சுய ஆட்சிச் சட்டம்.
1887 இராணியின் தங்க விழா.
1897 இராணியின் வைரவிழா.
1898 ஆம்டுர்மன் சண்டை.
1899 போயர் யுத்த ஆரம்பம்.
1901 விக்டோரியாவின் மரிப்பு.

விக்டோரியாவின் ஆட்சி:—இராணி பட்டததிற்கு வருதல்—சார்டிஸம் - பீல் மந்திரி சபை - தானியச் சட்டங்கள் ரத்து - பால்மர்ஸ்டனின் வெளி நாட்டு நோக்கம் - க்ரிமியா யுத்தம் - டிஸ்ரேலி - மேலும் பார்லிமென்டின் சீர்திருத்தம் - க்ளாஸ்டனின் முதல் மந்திரி சபை - பெர்லின் உடன்படிக்கை- இங்கிலாந்தும் எகிப்தும் - ஐர்லாந்தும் சுய ஆட்சியும் - குடியேற்ற நாடுகளின் வளர்ச்சி - குடியேற்ற நாடுகளைப்பற்றிய புதிய நோக்கம்.

விக்டோரியா அரசி ஆதல்:—விக்டோரியா 1837-ல் அரசி ஆனாள். அவள் நான்காம் வில்லியத்தின் சகோதரனைகென்ட் ட்யூக் எட்வர்டின் மகள். அவள் பட்டத்திற்கு வரும்பொழுது அவளுக்கு வயது பதினெட்டு. இவளுடைய இராஜ்ஜியத்தில் இருந்து ஹனோவர் பிரிக்கப்பட்டது. ஏனென்றால் அங்கு பெண்கள் ஆளக்கூடாது. இங்கிலாந்தில் ஆண்டவர்களுள் அவளுடைய ஆட்சியே மிகவும் நீடித்தது. அவள் அறுபத்து நான்கு வருஷங்கள் ஆண்டாள். அவள் செம்மையாக ஆண்டதால் அவளுக்கு "மகா ராணி" என்று பிருதுப்பெயர் கொடுக்கப்பட்டது. அவள் நிதானமும் அடக்கமும் உடையவள். தைரியம் மிகுந்தவள்; புத்தி தீட்சண்யம் உள்ளவள். அவள் 1840-ல் சாக்ஸனி கோபர்க்கோதாவின் ட்யூக் ஆல்பர்ட்டை மணம் செய்து கொண்டாள். ஆல்பர்ட்டிற்கு 'பிரின்ஸ் கான்ஸார்ட்' (Prince Consort) என்ற பட்டம் கொடுக்கப்பட்டது. அவன் அரசாட்சி விஷயத்தில் இராணிக்கு மிகவும் உதவியாக இருந்தான்.

மெல்பர்ன் பிரபு:—1837—41. அவன் விக்டோரியாவின் முதல் பிரதம மந்திரி. அவன் விக் கட்சிக்குத் தலைவன். அவன் அரசாட்சி விஷயத்தில் இராணிக்கு நல்ல

படம் 25. விக்டோரியா மகாராணி.

புத்திமதிகளைச் சொல்லி வந்தான். அவன் காலத்தில் முக்கியமான சில சீர்திருங்கள் செய்யப்பட்டன. பிரிடிஷ் தீவுகளுக்குள் பென்னி போஸ்டேஜ் 1839ல் ஏற்படுத்தப் பட்டது. அதை ஏற்படுத்தியதற்குக் காரணமாக இருந்த வன் ரோலண்ட் ஹில். சாஸன இயக்கம் (Chartist Movement) ஒன்று ராபர்ட் ஓவன் தலைமையின் கீழ் ஏற்பட்டது. அந்த இயக்கத்தை ஏற்படுத்தினவர்கள் "ஜனங்கள்

சாஸனம்" என்கிற பத்திரத்தை எழுதி அதில் கண்டபடி அரசாங்கம் நடத்த வேண்டும் என்று வற்புறுத்தினார்கள். அதில் கண்ட விஷயங்களாவன :—இருபத்தோரு வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ஓட் சுதந்திரம் கொடுக்க வேண்டும்; பார்லிமென்ட் அங்கத்தினர்களுக்குச் சொத்து இருக்கவேண்டும் என்று வற்புறுத்தக் கூடாது; ஜில்லாக்கள் தேர்தல் விஷயங்களில் சமமாகப் பிரிக்கப்படவேண்டும்; ஓட் இரகசியமாகச் செய்தல் வேண்டும்; பார்லிமென்டிற்கு ஒவ்வொரு வருஷமும் பொதுத்தேர்தல் அவசியம்; பார்லிமென்ட் அங்கத்தினர்களுக்குச் சம்பளம் கொடுக்க வேண்டும். அந்த இயக்கம் 1838-ல் ஆரம்பமாயிற்று. அது பத்து வருஷங்கள் நீடித்துப்பின்பு அரசாங்கத்தாரால் கலைக்கப்பட்டது. இங்கிலாந்தில் ஐக்கியச்சட்டத்தை ரத்து செய்வதற்கு இயக்கம் ஏற்பட்டது. இந்தியாவில் முதல் ஆப்கன் யுத்தம் ஆரம்பிக்கப்பட்டு ஆங்கிலேயர்களுக்கு நஷ்டம் ஏற்பட்டது. கனடாவில் உள்ள ஆங்கிலேயர்களும் பிரெஞ்சுக்காரர்களும் சச்சரவுகள் செய்துகொண்டிருந்தார்கள். 1841-ல் இங்கிலாந்தில் பொதுத் தேர்தல் நடந்தது. தேர்தலில் கான்ஸர்வேடிவ் கட்சிக்காரர்கள் வெற்றிபெற்று பார்லிமெண்டிற்கு அதிகமாக வந்தார்கள். ஆகையால் மெல்பர்ன் பிரபுவும் அவனுடைய விக்கர்களும் தங்கள் பதவியை இழந்தார்கள்.

ஸர் ராபர்ட் பீல்:—1841-46. அவன் கன்ஸர்வேடிவ் கட்சியின் தலைவன். அவன் எங்கும் சமாதானம் நிலைக்கவும் பிரிட்டிஷ் வியாபாரம் விருத்தி அடையவும் பாடுபட்டான். ஏற்றுமதி இறக்குமதி வரிகளை அவன் ஏராளமாகக் குறைத்து இங்கிலாந்தைச் சுயேச்சை வியாபார நாடாகச் செய்தான். அந்தக் குறைவை ஈடு செய்ய வருமான வரி விதிக்கப்பட்டது.

தானியச் சட்டங்கள் ரத்து:—அவன் 1846-ல் தானியச் சட்டங்களை ரத்து செய்தான். அந்தச் சட்டங்கள் 1815-ல் நிறைவேற்றப்பட்டவை. அவைகளால் பல தீமைகள் விளைந்தன. அவைகளின்படி வெளி நாடுகளில் இருந்துவந்த தானியங்கள்மீது உயர்ந்த வரிகள் விதிக்கப்பட்டன. அவை

படம் 26. ஸர் ராபர்ட் பீல்

கள் ஆங்கில பூமியில் கோதுமை விளைவிப்பவர்களின் லாபத்திற்காக ஏற்பட்டவை. ஆனால் நாட்டில் ரொட்டியின் விலை அதிகமானதால்ஜனங்கள்கஷ்டப்பட்டார்கள். தானியச் சட்டங்களுக்கு எதிராக ஒரு சங்கம் ஏற்படுத்தப்பட்டது. அந்தச் சங்கத்தில் முக்கியமானவர்கள் ரிச்சர்ட் காப்டன், ஜான் ப்ரைட் என்பவர்கள். அவர்கள் தானியச் சட்டங்

களை ஒழிப்பதற்குப் பாடுபட்டார்கள். ஐர்லாந்தில் உருளைக் கிழங்கில் வியாதி ஏற்பட்டுப் பஞ்சம் உண்டாயிற்று. பீல் உலக விஷயங்களை நன்ருக அறிந்தவன்; இராஜிய நிபுணன்; பொக்கிஷ விஷயங்கள் செம்மையாகத் தெரிந்தவன். சுயேச்சை வியாபாரத்திற்குப் பாடுபட்டவன். தானியச் சட்டங்களை அவன் ரத்து செய்தான். அதனுல் வெளி நாடுகளிலிருந்து தானியங்கள் ஏராளமாக வந்தன. ரொட்டியின் விலை குறைந்தது. இங்கிலாந்து முடிவாகச் சுயேச்சை வியாபார நாடாயிற்று. பீல், தன் கட்சியினர் குறைந்தமையால் தன் வேலையை இராஜிநாமா கொடுத்தான். அவனுடைய கான்ஸர்வேடிவ் கட்சியினர் இரு பிரிவுகளாகப் பிரிந்தார்கள். அவர்கள் சுயேச்சை வியாபாரத்தை ஆதரிப்பவர்கள்; வெளி நாட்டுச் சரக்குகளின் மேல் வரி போட்டுச்சுயநாட்டின் வியாபாரத்தை ஆதரிப்பவர்களும் ஆவர்.

லார்ட் ஜான் ரஸ்ஸேல்:—1846-52. அவன் பீலுக்குப் பிறகு பிரதம மந்திரி ஆனுன். அவன் விக் கட்சியின் தலைவன். தானியச் சட்டங்களை ரத்து செய்தும் ஐர்லாந்தில் ஜனங்களைக் கொடிய பஞ்சம் வறுத்தியது. ஐர்லாந்திலிருந்து பலர் அமெரிக்காவிற்குச் சென்றனர். ரஸ்ஸெல் ஐரிஷ் கஷ்டங்களை ஒழிப்பதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக்கொண்டான். 1848-ல் ஐரோப்பாவில் பெரிய கிளர்ச்சிகள் ஏற்பட்டன. இங்கிலாந்தில் சாஸன இயக்கக்காரர்கள் முரட்டுத்தனமான வழிகளை எடுத்துக்கொண்டனர். அவர்களை அரசாங்கத்தார் அடக்குமுறை வழிகளைக் கொண்டு அடக்கினர். அவர்கள் அடக்கப்பட்டாலும், அவர்கள் கேட்டுக்கொண்டவையெல்லாம் பின்பு அளிக்கப்பட்டன. எங்கும் அமைதி ஏற்பட்டது. 1851-ல் லண்டனில் பெரிய பொருட் காட்சி நடைபெற்றது. ரஸ்ஸெல் மந்

திரி சபையில் பல்மெர்ஸ்டன் வெளிநாட்டு மந்திரியாக இருந்தான். அவன் ஐரோப்பாவில் ஏற்பட்ட தேசீய, சுயேச்சை இயக்கங்களுக்கு உதவி செய்தான். அவன் பிரான்சின் சக்கரவர்த்தியான மூன்றும் நெப்போலிய னுடைய செயல்களை ஆமோதித்தான். இராணி அவன் மேல்கோபம் கொண்டு அவனை வேலையிலிருந்து 1852-ல்நீக் கினாள். ரஸ்ஸெல் மந்திரிசபையும்கலைந்தது.

முதல் டேர்பி-டிஸ்ரேலி மந்திரிசபை:—1852. கன்ஸர் வேடிவ் கட்சியின் தலைவனான டெர்பி பிரதம மந்திரி ஆனான். பென்ஜமின் டிஸ்ரேலி பொக்கிஷ மந்திரியாக அமர்ந்தான். அவர்களுக்குப் பார்லிமெண்டில் வலு இல் லாததால் அவர்களுடைய மந்திரிசபையும் சீக்கிரமாகவே கலைக்கப்பட்டது.

அபர்டீன் பிரபு:—1852-55. சுயேச்சை வியாபாரக் கட் சிக்குத் தலைவனான அபர்டீன் பிரபு பிரதம மந்திரி ஆனான். அவன் மந்திரி சபையில் விக்கர்களைச் சேர்த்துக்கொண் டான். அவன் காலத்தில் சுயேச்சை வியாபாரம் மேன் மேலும் விருத்தியாயிற்று. அவன் மந்திரியாக இருக்கும் பொழுதே கிரிமியா யுத்தமும் ஆரம்பமாயிற்று.

கிரிமியா யுத்தம்:—1854—56. காரணங்கள்: கிரிமியா தீபகற்பத்தில் ஆங்கிலேயருக்கும் ரஷியருக்கும் நடந்த யுத் தத்திற்குக் கிரிமியா யுத்தம் என்று பெயர். துருக்கி தேசத் திற்கு உபகாரம் செய்வதற்காக ஆங்கிலேயர் யுத்தம் செய் தனர். 'கிழக்குப் பிரச்னம்' என்பது பால்கன் தீபகல் பத்தை ஒட்டியது. ஆங்கிலேயப் பிரமுகர்கள் கிழக்கில் சம நிலை அதிகாரம் ஏற்பட முயற்சிசெய்தார்கள். ரஷியாவின் அதிகாரம் கிழக்கே வலுத்தது. அதன் சக்கரவர்த்தியான நிக்ககோலஸ் I துருக்கி சுல்தானைத் துரத்திவிட்டு பால்கன் தீபகல்பத்தைக் கைக்கொள்ள முயன்றான். அவன் சுல்

தானே "ஐரோப்பாவின் வியாதியஸ்தன்" என்று அழைத் தான். சுல்தான் தன் குடிகளை ஒழுங்காக நடத்தவில்லை. கிறிஸ்தவர்களை வறுத்தினான். அவர்கள் ரஷியாவின் ஸார் சக்கரவர்த்தியின் உதவியை நாடினார்கள். எப்பொழுது சமயம் வாய்க்கும் என்று எதிர்பார்த்திருந்த அந்த அர சன் பால்கன் தீபகல்பத்தின்மீது படை எடுத்து டான் யூப் நதியாயும் பிரதேசங்களான மொல்டேவியாவையும் வலாச்சியாவையும் பிடித்துக்கொண்டான். அப்பிரதேசங் கள் துருக்கி இராஜ்ஜியத்திற்குட்பட்டவை. மேலும் ரஷியக் கப்பற்படை சைனோப் (Sinope) என்கிற கருங்கடல் துறைமுகத்தில் இருந்து துருக்கிக் கப்பற்படையை தோற் கடித்து ஒழித்தது. ஆகையால் இங்கிலாந்தும் பிரான்சும் துருக்கிக்கு உபகாரம் செய்ய ரஷியாவுடன் யுத்தத்திற்குச் சென்றன.

நிகழ்ச்சிகள் :—யுத்தம் 1854-ல் ஆரம்பமாயிற்று. முதலில் அது பால்கன் தீபகற்பத்தில் நடந்தது. துருக்கியர் கள் டான்யூப் நதிக்கரைமீது இருந்த கோட்டைகளை வலுப்படுத்தி ரஷியர்களை உள் நுழையாதவாறு செய்தனர். ஆங்கிலப் பிரெஞ்சு படைகள் வார்னா சண்டையில் ரஷ்யர் களைத் தோற்கடித்து, பால்கன் தீபகல்பத்திலிருந்து அவர்களை ரஷ்யாவுக்குத் துறத்திவிட்டார்கள். இத்துடன் யுத்தம் முடிந்திருக்கக்கூடும். ஆனால் அபர்டீன் மந்திரி சபையினர் முன் யோசனை யில்லாது வார்னாவிலிருந்த ஆங்கிலச் சேனையைக் கிரிமியா தீபகல்பத்திற்குச் சென்று ரஷ்யர்களுடன் யுத்தம் செய்ய உத்திரவு கொடுத்தார்கள். இப்படிச் செய்ததினால் ஆங்கிலச் சேனை பலவிதக் கஷ்டங் களுக்குள்ளாயிற்று. ஆல்மா நதிச் சண்டையில் ஆங்கி லேயர் வெற்றி பெற்றனர். பிறகு அவர்கள் ரஷ்ய இராணுவக் கோட்டையையும் கப்பற்படை ஸ்தலமுமான

ஸிபாஸ்டபோல் (Sebastapol) என்கிற இடத்தை முற்றுகை செய்தார்கள். அந்த முற்றுகை நீடித்து நடந்தது. ஆங்கிலச் சேனைத் தலைவர்கள் திறமை அற்றவர்களாக இருந்தார்கள். பாலக்லாவா சண்டையில் ஆங்கில வீரர்கள் தங்கள் தைரியத்தைக் காட்டினர். ஆனால் தலைவர்களின் மூடத் தனத்தினால் நஷ்டம் அதிகம் ஆயிற்று. இங்கர்மன் (Inkerman) சண்டையில் ஆங்கில வீரர்கள் வெற்றி பெற்றார்கள். அதற்கு 'சோல்ஜர்கள் சண்டை' என்று பெயர்; ஏனென்றால், சாதாரண வீரர்களே தைரியத்துடன் சண்டை செய்தார்கள். படைத் தலைவர்கள் முன்



படம் 27. கிரிமியா யுத்தம்

போலவே திறமையற்று இருந்தார்கள். ரஷியக் குளிர் காலத்தின் கொடுமைகளை ஆங்கில வீரர்கள் தாங்கமுடியவில்லை. வியாதி உண்டாயிற்று. யுத்தத்தைச் சரியாக நடத்தாததால் அபர்டீன் மந்திரி சபை 1855-ல் கலைக்கப்பட்டது. பால்மர்ஸ்டன் பிரதம மந்திரியாகி யுத்தத்தை மும்மரமாக நடத்தினான். ஆங்கிலச் சேனைக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்தான். ப்ளாரேன்ஸ் நைட்டிங்கேல் என்னும் ஆங்கில ஸ்திரி கிரிமியாவுக்குச் சென்று காயம்பட்ட வீரர்களுக்குச் சிகிச்சை செய்தாள். ஆங்கி

லேயர் வெற்றி அடைந்தனர். அவர்கள் ரஷ்யர்களிடம் இருந்து ஸிபாஸ்டபோலைப் பிடித்துக் கொண்டார்கள். யுத்தம் பாரிஸ் உடன்படிக்கையால் முடிவுக்கு வந்தது.

பாரிஸ் சமாதான உடன்படிக்கை:—1856. அதில் கண்ட நிபந்தனைகளாவன: துருக்கி இராஜ்யம் சிதறாமல் இருக்கவேண்டியது; சுல்தான் அவனுடைய கிறிஸ்தவக் குடிமக்களைச் செம்மையாக நடத்துவதாக உறுதிமொழி கொடுத்தான். ரஷியா கருங்கடலில் கப்பற்படையை வைத்துக்கொள்ளக் கூடாது. இவ்வாறு கிழக்கில் சம அதிகாரம் நிலை நிறுத்தப்பட்டது.

பால்மேர்ஸ்டன் பிரபு:—1855—65 அவன் 1855 ல் பிரதம மந்திரி ஆனான். அவன் வெளிநாட்டு விஷயங்களில் நிபுணன். வெளிநாட்டு மந்திரியாகவோ அல்லது பிரதம மந்திரியாகவோ பிரிட்டனின் வெளிநாட்டு விஷயங்களை 1830-லிருந்து முப்பத்தைந்து வருஷங்கள் கவனித்து வந்தான். ஐரோப்பாவில் ஏற்பட்ட தேசீய, சுயேச்சை இயக்கங்கள் அவன் உதவியைப் பெற்றன. அவன் உதவியால் பெல்ஜியமும் ஸ்பெயினும் சுயேச்சை அடைந்தன. அவன் "கிழக்குப் பிரச்னை" விஷயங்களில் துருக்கியை ஆதரித்தான். 1848-ல் ஏற்பட்ட ஐரோப்பியக் கிளர்ச்சிகளில் அவன் கிளர்ச்சிக்காரர்களுக்கு ஆதரவு காட்டினான். அவன் முயற்சியால் கிரிமியா யுத்தத்தில் ஆங்கிலேயருக்கு ஏற்பட்ட தோல்விகள் வெற்றிகளாக மாறின. 1859-ல் அவன் இதாலியர்களுக்கு தேசியச் சுதந்திரம் பெறும் விஷயத்தில் உதவி செய்தான். அமெரிக்காவில் 1861-ல் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தத்தில் அடிமைகளுக்குச் சுதந்திரம் கொடுப்பதற்கு எண்ணங்கொண்ட வட இராஜ்யங்கள் அவன் ஆதரவைப் பெற்றன. அவன் 1858-ல் தன் வேலையை

இராஜிநாமா கொடுத்தான். அப்பொழுது இரண்டாவது டெர்பி-டிஸ்ரேலி மந்திரிசபை ஏற்படுத்தப்பட்டது. ஆனால் பார்லிமெண்டில் கான்ஸர்வேடிவ்கள் குறைவாக இருந்ததால், அது கலைக்கப்பட்டுப் பால்மெர்ஸ்டனே பிரதமமந்திரியாகி 1865 வரையில் திறமையாக ஆட்சி செய்தான். அவன் உத்தியோகத்தில் இருக்கும்பொழுதே அவன் இறந்தான். அவன் இறக்கும்பொழுது அவனுக்கு வயது எண்பது. அவன் திட சித்தம் உள்ளவன்; தைரியம் மிகுந்தவன்; தான் கொண்டதை சாதிக்கும் சக்தியுடையவன்; சந்துஷ்டி நிறைந்தவன். அவன் தன் முயற்சியால் இங்கிலாந்திற்குக் கீர்த்திகளைக் கொண்டுவந்தான்.

மூன்றும் டெர்பி-டிஸ்ரேலி மந்திரி சபை:—1866-68. கான்ஸர்வேடிவ்களான டெர்பியும் டிஸ்ரேலியும் மூன்றும் தடவை மந்திரிகளானார்கள். டிஸ்ரேலி 1867-ல் பார்லிமெண்டில் இரண்டாவது சீர்திருத்தச் சட்டத்தை நிறைவேற்றினான். அதன்படி பட்டணங்களில் உள்ள ஒவ்வொரு வீட்டுக்காரனும், வருஷத்தில் 10 பவுன் வாடகை கொடுப்பவர்களும் ஓட் உரிமை பெற்றார்கள். ஜில்லாக்களில் ஓட்டர்கள் நில ரெண்டாவது (Rent) வீட்டு வாடகையாவது 12 பவுன்களுக்குமேல் கட்டுபவர்களாக இருக்கவேண்டும். அந்தச் சட்டத்தினால் பட்டணங்களில் உள்ள தொழிலாளர்கள் ஓட் உரிமை பெற்றார்கள். கிராமங்களில் உள்ள தொழிலாளர்கள் அந்த உரிமையைப் பெறவில்லை; மற்றும் ஒரு சீர்திருத்தச் சட்டத்தை அவர்கள் எதிர் பார்க்க வேண்டியதாயிற்று.

வில்லியம் ஈவார்ட் கிளாஸ்ட்டன்: அவன் மந்திரி சபைகள்:—அவன் விக்டோரியா மகாராணியின் பிரதம மந்திரிகளில் சிறந்தவன் ஆவன். அவன் நான்கு தடவைகள் பிரதம மந்திரியாக இருந்தான். அவன் லிபரல் கட்சிக்

குத் தலைவன். அவன் வரிசையாகப் பல சிறந்த சீர்திருத்தங்களைச் செய்தான். அவன் "சமாதானம், சிக்கனம், சீர்திருத்தம்" என்னும் மூன்று முக்கிய நோக்கங்களைக் கொண்டிருந்தான். அவன் பொக்கிஷ விஷயங்களில் சிறந்த நிபுணன். ஐர்லாந்து முன்னேற்றம் அடைய அவன் எடுத்துக்கொண்ட முயற்சி மிகவும் முக்கியமானது.

படம் 28. கிளாட்ஸ்டன்

முதல் மந்திரி சபை:—1868-74. சீர்திருத்தப்பட்ட பார்லிமெண்டில் - லிபரல்களே அதிகமாக வந்தார்கள். ஆகையால் கிளாட்ஸ்டன் பிரதம மந்திரி ஆனான். அவன் பெரிய சீர்திருத்தங்களைச் செய்தான். கல்விச் சட்டம் 1870 ல் நிறைவேற்றப்பட்டது; அதன்படி பள்ளிக்கூடங்கள்

நாட்டில் ஏராளமாக ஏற்படுத்தப்பட்டன; அது கட்டாய ஆரம்ப இலவசக் கல்விக்கு வழி காட்டியதாயிற்று. ஆக்ஸ்போர்ட் கேம்ப்ரிட்ஜ் சர்வ கலாசாலைகளில் எந்த மதஸ்தர்களும் உத்தியோகம் பெறலாம் என்று அனுமதிக்கப்பட்டது. தொழிலாளர்கள் சங்கங்கள் நியாயமானவை என்று கிளாட்ஸ்டன் ஒப்புக்கொண்டான். அவன் காலத்தில் பார்லிமெண்டு தேர்தல்களில் இரகசியமாக ஓட் போடும் முறை அனுசரிக்கப்பட்டது. ஐர்லாந்தில் அவன் முக்கியமான சீர்த்திருத்தங்களைச் செய்தான். ஐரிஷ்காரர்களுக்கு 1869-ல் மத சுயேச்சை கொடுக்கப்பட்டது. ஒரு புது நிலச் சட்டம் 1870-ல் நிறைவேறியது; அதன்படி ஆங்கில நிலச் சொந்தக்காரர்கள் ஐர்லாந்தில் செய்த அக்கிரமங்கள் குறைக்கப்பட்டன.

இரண்டாம் மந்திரி சபை :—1880-85. கிளாட்ஸ்டன் பார்லிமெண்டின் மூன்றுவது சீர்திருத்தச்சட்டத்தை 1884ல் நிறைவேற்றினன். அதன்படி ஜில்லாக்களில் ஓட் சுதந்திரத்தைப்பற்றிய விதிகள் பட்டணங்களில் உள்ளவாறே செய்யப்பட்டன. ஜனத்தொகைக்குத் தகுந்தவாறு பிரதிநிதிகள் அனுப்ப ஏற்பாடாயிற்று தொழில் அபிவிருத்தி உள்ள இடங்கள் அதிகமாகப் பிரதிநிதித்துவம் பெற்றன. லண்டன் நகரம் இந்தச் சீர்த்திருத்தத்திற்கு முன் 22 அங்கத்தினர்களை அனுப்பியது. அதற்குப் பின் 62 பெயர்களை அனுப்பும் சுதந்திரத்தைப். பெற்றது. லிவர்பூல், மான்செஸ்டர், க்ளாஸ்கோ, பர்மிங்ஹாம் முதலிய பெரிய பட்டணங்கள் ஜாஸ்தியாக அங்கத்தினர்களை அனுப்ப உரிமை பெற்றன. இவ்வாறு ஜனங்களின் ஆதிக்யம் அதிகம் ஆயிற்று. ஐர்லாந்து விஷயமாக இன்னும் பல சீர்த்திருத்தங்களைக் கிளாட்ஸ்டன் செய்தான். இரண்டாவது நிலச் சட்டம் ஐரிஷ் குடியானவர்களுக்குப் பல சௌகரியங்களைக்

கொடுத்தது. ஐரிஷ்காரர் கிளர்ச்சி அடங்கினபாடில்லை. அவர்கள் ஆங்கில ஐரிஷ் காரியதரிசியான லார்ட் ப்ரெட்ரிக் காவென்டிஷைக் கொலை செய்தார்கள். ஐரிஷ்களை அடக்க ஒரு சட்டத்தைக் கிளாட்ஸ்டன் நிறைவேற்றினான்.

மூன்றும் மந்திரி சபை:—1886. ஐர்லாந்துக்குச் சுய ஆட்சி கொடுக்க ஒரு சட்டத்தை பார்லிமெண்டில் கிளாட்ஸ்டன் கொண்டுவந்தான். அதில் ஐரிஷ்களுக்குத் தனிப் பார்லிமெண்டும், தனி அரசாங்கமும் கொடுப்பதாகக் கண்டிருந்தது. அது பொதுஜன சபையில் தோல்வி அடைந்து நிறைவேறவில்லை. லிபரல் கட்சியிலிருந்த பலர் எதிர் கட்சியினரோடு சேர்ந்து அதைத் தோற்கடித்தார்கள். ஐர்லாந்துக்குச் சுய ஆட்சி கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டவர்கள் சுய ஆட்சிக் கட்சியினர் என்றும், ஐர்லாந்தின் ஐக்கியத்தை விரும்பினவர்கள் ஐக்கியக் கட்சியினர் என்றும் பெயர் கொண்டார்கள். உடனே பார்லிமெண்ட் கலைக்கப்பட்டுப் பொதுத் தேர்தல் நடந்தது. அதில் ஐக்கியக் கட்சியினரே அதிகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பார்லிமெண்டிற்கு வந்தார்கள். ஆகையால் கிளாட்ஸ்டன் தன் மந்திரிப் பதவியிலிருந்து நீங்கிக் கொண்டான்.

நான்காவது மந்திரி சபை:—1892-94. கிளாட்ஸ்டன் 1893-ல் ஐயர்லாந்துக்குச் சுய ஆட்சி கொடுக்க இரண்டாவது முறை ஒரு சட்டத்தைக் கொண்டுவந்தான். அதற்கும் முந்திய சட்டத்திற்கும் சில வித்தியாசங்கள் இருந்தன. ஐரிஷ் பார்லிமெண்டிற்குப் பிரபுக்கள் சபை சேர்க்கப்பட்டது. இதைத் தவிர பிரிட்டிஷ் பார்லிமெண்டிற்கு 80 பிரதிநிதிகளை அனுப்ப ஐர்லாந்துக்கு உரிமை கொடுக்கப்பட்டது. அந்த சட்டம் பொது ஜன சபையில் நிறைவேறியது. ஆனால் பிரபுக்கள் சபையில் நிராகரிக்கப்பட்டது.

ஐரிஷ் பார்லிமெண்டிற்குப் பிரபுக்கள் சபை சேர்த்ததற்கு எதிராகப பெரிய கூச்சல் ஏற்பட்டது. ஒன்றும் பிரயோ சனப்படவில்லை. சுய ஆட்சி சட்டம் நிறைவேருது போயிற்று. ஆயினும் கிளாட்ஸ்டன் அரசாங்கத்தில் இருந்து நீங்கவில்லை. அதற்குப்பிறகு அவன் ஒரு வருஷம் மந்திரியாக இருந்தான். அவனுக்கு எண்பது வயதுக்கு மேல் ஆயிற்று. அவன் வேலைசெய்ய முடியாமல் அசக்த ஞனன். ஆகையால் 1894 ல் அவன் தன் வேலையை இராஜிநாமாக் கொடுத்து அதிலிருந்து நீங்கிக் கொண் டான்; மூன்று வருஷங்களுக்குப் பிறகு இறந்தான். அவன் சீர்திருத்தங்களைச் செய்வதிலும் சமாதான விஷயங்களிலும் ஊக்கம் கொண்டிருந்தான். அவன் வெளிநாட்டு விஷயங் களைத் திடமாகக் கவனிக்கவில்லை. ஆயினும் உள்நாட்டிற்கு அவனுடைய சீர்திருத்தங்களால் நல்ல பலன்கள் உண் டாயின.

பென்ஜமின் டிஸ்ரேலி, பீக்கன்ஸ்பீல்ட் பிரபு:—1874-80. அவன் கன்ஸர்வேடிவ் கட்சிக்குத் தலைவன். அந்தக் கட்சியை அவனுடைய சாதுர்யத்தினுல் வலுப்படுத்தினுன். அவன் விக்டோரியாவின் பிரதம மந்திரிகளில் சிறந்தவன் ஆவன்; இராணி அவனிடம் அன்பு மிகுந்து இருந்தாள். அவன் ஆடம்பரத்தில் பிரியம் உள்ளவன். திடமான சித்தத் தை உடையவன்; பேச்சு வன்மை உள்ளவன். இதற்கு முன் மும்முறைகள் டெர்பிப்பிரபுவுடன் மந்திரியாக இருந்தான். அவன் பார்லிமெண்டின் இரண்டாவது சீர்திருத்தச் சட்டத்தை நிறைவேற்றினுன். கொஞ்ச காலத்தில் அவனுடைய கன்ஸர்வேடிவ் கட்சியினர் வலுத்து பார்லிமெண்டில் அதிகமாக வந்தனர். ஆகை யால் அவன் 1874-ல் பிரதம மந்திரி ஆனுன்.

உள்நாட்டு விஷயங்கள் :—ஐரிஷ் கட்சிக்குத் தலைவனான சார்லஸ் ஸ்டுவேர்ட் பார்னெல் (Charles Stewart Parnell) ஐர்லாந்துக்குச் சுய ஆட்சி கொடுக்க வேண்டும்

படம் 29. பீக்கன்ஸ்பீல்ட் பிரபு

என்று பார்லிமெண்டில் வற்புறுத்தினான். ஐர்லாந்தைப் பற்றி அல்லாத மற்ற விஷயங்களைப் பார்லிமெண்டில் பேச விடாமல் தடுத்துவந்தான். அவன் கட்சியினரால் தொந்திரவு வராமல் இருப்பதற்கு வேண்டிய முறைகளை டிஸ்ரேலி

எடுத்துக் கொண்டான். அவன் காலத்தில் சில சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. யந்திரசாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களின் சௌக்கியத்தைக் கவனிப்பதற்கு ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டது. தொழிற் சங்கங்கள் நியாயமானவை என்று ஒப்புக் கொள்ளப் பட்டன. ஆங்கில மாலுமிகள் சில சௌகரியங்களை அடைந்தார்கள்.

வெளிநாட்டு விஷயங்கள்:—டிஸ்ரேலி வெளிநாட்டு விஷயங்களைச் செம்மையாகக் கவனித்தான். அவன் காலத்தில் ஆங்கில சாம்ராஜ்ஜியத்தின் கௌரவம் அதிகம் ஆயிற்று.

ரஸ்ஸோ—டர்க்கிஷ் யுத்தம் :—1876-78. இந்த யுத்தம் ருஷ்யாவுக்கும் துருக்கிக்கும் பால்கன் தீபகற்பத்தில் நடந்தது. பாரிஸ் உடன்படிக்கைக்கு விரோதமாக ருஷ்யச் சக்கரவர்த்தி கருங்கடலில் ஒரு கப்பற்படையை வைத்து அதை வலுப்படுத்தினான். துருக்கி சுல்தான் பல்கேரியாவில் உள்ள கிறிஸ்தவர்களைக் கொடுமையாக நடத்தினான் என்ற காரணத்தினால் ருஷியர்கள் பால்கன் தீபகற்பத்தின்மீது படை எடுத்தார்கள். அவர்கள் சுல்தானின் தலை நகரமும் துறைமுகப் பட்டணமுமான கான்ஸ்டான்டிநோபிலைப் பிடித்துக்கொண்டார்கள். டிஸ்ரேலி கிழக்கில் சம அதிகாரத்தை நிலை நிறுத்த பிரிட்டிஷ் கப்பற்படையைக் கருங்கடலுக்கு அனுப்பினான். இந்தியச் சேனை மால்டாவுக்குக் கொண்டுபோகப்பட்டது. இங்கிலாந்தின் ஊக்கத்தைக் கண்டு ருஷியா 1878-ல் பேர்லின் உடன்படிக்கையைச் செய்துகொண்டது. அந்த உடன்படிக்கையில் கண்ட நிபந்தனைகளாவன :—ருமானியா, செர்பியா, மான்டிநீக்ரோ முதலிய பால்கன் பிரதேசங்கள் சுயேச்சை அடைந்தன; பாஸ்னியாவும் ஹெர்வி கோவினாவும் ஆஸ்திரிய ஆட்சியின் தலைமையின்கீழ் வந்தன; பல்கேரியா

துருக்கியின்கீழ் சுய ஆட்சி பெற்றது. இங்கிலாந்துக்கு சைப்ரஸ் (Cyprus) தீவு கிடைத்தது. டிஸ்ரேலி பெர்லி னுக்குச் சென்று ஜெர்மெனியின் பிரபலப் பிரதம மந்திரி யான பிஸ்மார்க் (Bismarck) என்பவனுடன் சேர்ந்து அந்த உடன்படிக்கையை முடித்தான். அவன் லண்ட னுக்குத் திரும்பியதும் "கௌரவத்துடன் சமாதானம்" கொண்டுவந்ததாகச் சொன்னான்.

எகிப்து:—டிஸ்ரேலி காலத்தில் எகிப்து தேசத்தில் பிரிட்டிஷ் ஆதிக்யம் ஏற்படுத்தப்பட்டது. பெர்டினன்ட் டி லெஸெப்ஸ் (Ferdinand de Lesseps) என்னும் பிரெஞ்சு என்ஜினியர் சூயஸ் கால்வாயை 1869-ல் வெட்டி னான். பீக்கன்ஸ்பீல்டு பிரபு எகிப்து அரசனான கெடிவி னிடமிருந்து சூயஸ் கால்வாய்ப் பங்கை 1875-ல் இங்கிலாந் திற்கு வாங்கினான். மொத்தத் தொகையில் அது அரை பாகம் கொண்டதாயிற்று. இங்கிலாந்தும் பிரான்சும் 1879-ல் எகிப்தில் அதிகாரம் செலுத்தலாயின. ஏனென் றால், எகிப்து மன்னனாகிய கெடிவ் ஏராளமான செலவு களைச் செய்து தேசத்தைக் கடனுக்குள்ளாக்கினான். பிரான்ஸ் சீக்கிரமாக விலகிக்கொண்டது; இங்கிலாந்தின் அதிகாரம் அங்கே வலுத்தது.

இந்தியா:—இந்தியாவில் இரண்டாவது ஆப்கன் யுத்தம் 1878-ல் ஆரம்பமாயிற்று. அதில் ஆங்கிலேயர் களுக்குப் பெரிய தோல்வியும் ஏராளமான நஷ்டமும் உண்டாயின.

டிஸ்ரேலியின் வீழ்ச்சி:—பொதுத் தேர்தல் 1880-ல் நடந்தது. அதில் கிளாட்ஸ்டனின் லிபரல்களே அதிகமாக வந்தனர். ஆகையால் டிஸ்ரேலி வேலையிலிருந்து நீங்கிக் கொண்டான். அவன் அதற்கடுத்த வருஷம் மரித்தான்.

சாலிஸ்பரி பிரபு—முதல் மந்திரி சபை:—1885-86. பீக்கன்ஸ்பீல்ட் இறந்த பிறகு சாலிஸ்பரி பிரபு கன்ஸர்வேடிவ் கட்சிக்குத் தலைமை பெற்றான். அவன் 1885-ல் பிரதம மந்திரி ஆனான். பொதுத் தேர்தலில் இரண்டு கட்சியினரும் சமமாக இருந்தனர். ஆனால், ஐரிஷ் கட்சியினர் லிபரல்களுடன் சேர்ந்து கொண்டதால் சாலிஸ்பரி பிரபு வேலையில் இருந்து நீங்கிக் கொண்டான்.

இரண்டாம் மந்திரி சபை:—1886-92. 1886-ல் கிளாட்ஸ்டனின் ஐரிஷ் சுய ஆட்சி சட்டம் நிறைவேறாது அவன் வேலையிலிருந்து நீங்கிக்கொண்டதால் சாலிஸ் பரி பிரபு பிரதமமந்திரி ஆனான். அவனுடன் ஐயர்லாந்து ஐக்கியக் கட்சியினர் சேர்ந்துகொண்டனர். ஐர்லாந்து அமைதியில்லாமல் இருந்தது. சுய ஆட்சிக் கட்சியினரும் அவர்கள் தலைவனான பார்னலும் அடக்கப்பட்டார்கள். சாலிஸ்பரி பிரபு வெளிநாட்டு விஷயங்களை ஊக்கமாகக் கவனித்தான். இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் எகிப்து விஷயத்தில் விரோதம் உண்டாயிற்று. பிரான்ஸ் ருஷியாவுடன் சேர்ந்துகொண்டது. ஜெர்மனி, ஆஸ்திரியா, இதாலி, இம்மூன்று தேசங்களும் ஒரு வித சிநேக உடன்படிக்கையைச் செய்துகொண்டன. இவ்வாறு ஐரோப்பாவில் இரண்டு விதப் பிரிவுகள் ஏற்பட்டன. இங்கிலாந்து இவ்விரண்டு விதப் பிரிவுகளுக்கு நடுநிலைமை வகித்திருந்தும் அடிக்கடி சச்சரவு உண்டாகக் காரணங்கள் ஏற்பட்டன. சாலிஸ்பரிப் பிரபு 1890-ல் ஜெர்மனியுடன் சமாதான உடன்படிக்கை செய்துகொண்டான். அதன்படி ஆங்கிலேயர்களுக்கும் ஜெர்மானியர்களுக்கும் ஆப்பிரிக்காவிலுள்ள குடியேற்ற நாடுகள் வரையறுக்கப்பட்டன. இங்கிலாந்து, ஸான்ஸிபார் (Zanzibar) தீவைப் பெற்றது. ஜெர்மனி ஹெலிகோலாந்து (Heligoland) தீவைத் திரும்பவும் அடைந்தது.

சாலிஸ்பரி பிரபு விக்டோரியாவின் தங்க விழாவை 1887-ல் விமரிசையாக நடத்தினன். அவன் ஆங்கிலக்கப்பற்படையை வலுப்படுத்தினன். அவன் கட்சியினர் 1892-ல் நடந்த பொதுத் தேர்தலில் தோல்வி அடைந்தனர். ஆகையால் அவன் வேலையில் இருந்து நீங்கிக்கொண்டான்.

மூன்றும் மந்திரி சபை:—1895-1901. கன்ஸர்வேடிவ் கட்சியினருடன் ஐக்கியக் கட்சியினரும் சேர்ந்துகொண்டனர். அவர்கள் 1895 தேர்தலில் வலுத்த வெற்றியைப் பெற்றனர் ஆகையால் சாலிஸ்பரி பிரபு மறுபடியும் பிரதம மந்திரியாகி, இராணியின் ஆட்சி முடிவு வரையில் பதவியிலிருந்தான்.

அவன் காலத்தில் அவன் எதிர்க் கட்சியினரான லிபரல்களின் தலைவன் ஸர் ஹென்றி காம்பெல்—பானர்மன்.

வெளிநாட்டு விஷயங்கள்:—சாலிஸ்பரி பிரபு, வெளிநாட்டு விஷயங்களைத் தீவிரமாகக் கவனித்தான். துருக்கியர்கள் ஆர்மினியாவில் உள்ள கிறிஸ்துவர்களைக் கடுமையாக நடத்தினர்கள். சாலிஸ்பரி பிரபு, துருக்கி சுல்தானைத் தன்னுடைய கிரிஸ்துவக் குடிகளைச் செம்மையாக நடத்தும்படிக் கேட்டுக்கொண்டான்.

எகிப்து:—பிரிட்டன் எகிப்தில் தன் ஆதிக்யத்தை ஏற்படுத்தியதால் அதற்கும் பிரான்சிற்கும் விரோதம் ஏற்பட்டது. ஆயினும் ஆங்கிலேயருடைய ஆட்சி எகிப்திற்கு நன்மையே செய்தது. அது செல்வமும் செழிப்பும் மிகுந்த நாடாயிற்று. ஆங்கில கவர்னரான க்ரோமர் பிரபு எகிப்தின் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டான். கிட்ச்னர் பிரபு எகிப்து சேனையை வலுப்படுத்தினன். சூடான் பிரதேசத்தை ஆண்ட காலிபா ஆங்கிலேயர்களுக்கு எதிராகக் கிளம்பி எகிப்தைப் பிடித்துக் கொள்ளுவதாகப் பயமுறுத்தினன். ஆனல் அவன் 1898-ல் கிட்ச்னர் பிரபுவால் ஆம்

டுர்மன் (Omdurman) சண்டையில் முடிவாகத் தோற்கடிக்கப்பட்டான். அந்த வெற்றியின் பயனாக சூடான் ஆங்கிலேயருடைய ஆட்சியின்கீழ் வந்தது. ஆங்கிலேயர் வெற்றியைக் கண்டு பிரஞ்சுக்காரர்கள் பொறாமை அடைந்தனர். கடற்கரையில் இருந்து சூடானில் உள்ள பஷோடா (Fashoda) பட்டணம் வரையில் ஒரு பிரன்சுப் படை சென்றது. ஆனால் யுத்தம் தடுக்கப்பட்டது. ஆங்கிலேயர் பிரஞ்சுக்காரர்களுடன் 1899-ல் சமாதானம் செய்து கொண்டனர். அதன்படி பிரஞ்சுக்காரர்களுக்குரிய நைல் நதிப் பள்ளத்தாக்கு ஆங்கிலேயர் ஆதிபத்தியத்திற்குட்பட்டதாயிற்று.

பாக்ஸர் கிளர்ச்சி:—சைனாவில் இருந்து புதிதாகத் தொந்தரவுகள் ஏற்பட்டன. இங்கிலாந்து சைனாவில் வியாபாரச் சுதந்திரங்களைப் பெற்றிருந்தது. ருஷியா, மஞ்சூரியாவில் தன் ஆதிபத்தியத்தை ஸ்தாபித்தது. இங்கிலாந்தும் ஜெர்மனியும் சைனாவிலுள்ள சில துறைமுகங்களைக் கைக்கொண்டன. வெளிநாட்டார்களுக்கு எதிராகச் சீனர்களுக்குள் 1900-ல் ஒரு தேசீயக் கிளர்ச்சி உண்டாயிற்று. இந்தக் கிளர்ச்சிக் காரர்களுக்குப் பாக்ஸர்கள் (Boxers) என்று பெயர். அவர்கள் சைனாவின் தலைநகரான பீக்கினில் இருந்த ஐரோப்பியர்களை எதிர்த்தார்கள். ஒரு பொது ஐரோப்பிய சேனை சென்று ஐரோப்பியர்களைக் காப்பாற்றியது. சைனாவில் கொஞ்சகாலம் யுத்தம்நடந்தது. கடைசியில் சமாதானம் ஏற்பட்டது.

போயர் யுத்தம்:—1899-1902:—காரணங்கள். ஆங்கிலேயர்கள் தென்ஆப்பிரிக்காவில்உள்ள டச்சுக்காரர்களான போயர்களுடன் செய்த போருக்குப் போயர் யுத்தம் என்று பெயர். டச்சுக்காரர்கள் நன்னம்பிக்கை முனைப் பிரதேசத்தில் குடியேறி இருந்தார்கள். பாரிஸ் சமாதான உடன்

படிக்கையின்படி 1815-ல் ஆங்கிலேயருக்கு அந்தப் பிரதேசம் கிடைத்தது. போயர்கள் நாட்டிற்குள் சென்று நேடால், ஆரஞ்சு நதி, சுயேச்சை இராஜ்ஜியம், ட்ரான்ஸ்வால் முதலிய இடங்களில் குடியேறினர்கள். ஆங்கிலேயர்களுக்கும் போயர்களுக்கும் அடிக்கடி சச்சரவுகள் ஏற்பட்டன. ட்ரான்வாலில் உள்ள ஜோஹான்ஸ்பர்க்கில் பெரிய தங்கச் சுரங்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. வெளித்தேசத்தவர்கள் அங்கு தங்கத்திற்காகச் சென்றார்கள். போயர்கள் அவர்கள் வரவை விரும்பாது அவர்களை வெறுத்தார்கள். ஸீஸில் ரோட்ஸ் (Cecil Rhodes) என்னும் திடம் உள்ள ஆங்கிலேயன் போயர் நாடுகளைத் தாண்டி ரோடிஷியா என்னும் ஆங்கிலக் குடியேற்ற நாட்டை ஸ்தாபித்தான். டாக்டர் ஜமீஸன் என்னும் மற்ரோர் ஆங்கிலேயன் 1895-ல் சில வீரர்களை அழைத்துக்கொண்டு ட்ரான்ஸ்வாலுக்குச் சென்றான். அவனும் அவன் வீரர்களும் போயர்களால் தாக்கப்பட்டு நஷ்டம் அடைந்தார்கள். போயர் குடி அரசு நாடுகளுக்குத் தலைவனான பால் க்ரூகர் (Paul Kruger) போயர்களை ஒன்று சேர்த்து யுத்தத்திற்குத் தயாரானன். ஆகையால் யுத்தம் 1899-ல் ஆரம்பம் ஆயிற்று.

விஷயங்கள்:—போயர் யுத்தம் விக்டோரியா காலத்திற்குப் பின்னும் நடந்தது. அது மிகவும் மும்முரமாகவும் கடுமையாகவும் நடத்தப்பட்டது. போயர்கள் போர் புரிவதில் சாமார்த்தியம் மிகுந்தவர்கள். முதலில் சண்டைகள் நேடாலில் நடந்தன. போயர்கள் லேடி ஸ்மித் என்னும் பட்டணத்தை 1899-ல் முற்றுகை செய்தார்கள் ஆரம்பத்தில் அவர்களுக்கு வெற்றி கிடைத்தது. பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தின் எல்லாப் பாகத்திலிருந்தும் வீரர்கள் தென் ஆப்ரிக்காவிற்குக் கொண்டு வரப்பட்டார்கள். ஆப்கன் யுத்தத்தில் வெற்றி பெற்ற ராபர்ட்ஸ் பிரபு தென்

ஆப்ரிக்கா சேனைக்குத் தளகர்த்தனானன். சூடானின் வெற்றி வீரனான கிட்ச்னர் பிரபு அவனுடன் சேர்ந்து கொண்டான். இருவரும் 1900-ல் போயர்கள் தலைநகர்களான ப்ளோயம்பான்டி (Bloem Fontein) யையும் ப்ரிடோரியா (Pretoria) வையும் கைப்பற்றினர். ஜோஹான்ஸ்பர்க் ஆங்கிலேயர் கைவசம் ஆயிற்று. போயர்கள் நேராக எதிர்த்துச் சண்டை செய்வதில் பயனில்லை என்று கண்டுகொண்டு கோரில்லா யுத்தம் செய்ய ஆரம்பித்து ஆங்கிலேயர்களுக்கு ஏராளமான நஷ்டத்தை உண்டாக்கினர். விக்டோரியா இராணிக்குப் பிறகு ஒரு வருஷம் யுத்தம் நடந்து முடிவுக்கு வந்தது.

குடியேற்ற நாடுகளின் விருத்தி :—அமெரிக்கச் சுதந்திரப் போருக்குப் பிறகு ஆங்கிலேயர்கள் தமது குடியேற்ற நாடுகளைச் செம்மையாகக் கவனித்து அவைகளை விசாலமான நோக்கத்துடன் ஆட்சி செய்தார்கள். அவற்றின் சௌகரியத்தைக் கவனித்தார்கள். அவைகள் இங்கிலாந்தின் உபயோகத்திற்குத்தான் ஏற்படுத்தப்பட்டன என்ற நோக்கத்தைக் கைவிட்டனர். ஆகையால் குடியேற்ற நாடுகள் அதிகமாகி முன்னேற்றம் அடைந்தன. கனடா செல்வமும் செழிப்பும் மிகுந்த நாடாயிற்று. அமெரிக்க ஐக்கிய இராஜ்ஜியங்களில் இருந்த இராஜ விசுவாசிகள், அங்கு சென்று குடியேறினர். டர்ஹாம் பிரபு இங்கிலாந்திலிருந்து சென்று அங்கு இருந்த ஆங்கிலேயர்களுக்கும் பிரஞ்சுக்காரர்களுக்கும் ஏற்பட்டுக் கொண்டிருந்த சச்சரவுகளைத் தீர்த்துவைத்தார். கனடா 1867-ல் ஒரு டொமினியன் ஆயிற்று. அதன்படி அது உள்நாட்டு ஆட்சியில் முழுச் சுதந்திரத்தையும் பெற்றது ; வெளிநாட்டு விஷயங்களைத் தாய் நாடான இங்கிலாந்து கவனித்து வந்தது. ஆஸ்திரேலியா கண்டத்தில் ஆங்கிலேயர்

கள் சென்று குடியேறினர். முதலில் ஆங்கிலக் குற்றவாளிகளே அதிகமாக அனுப்பப்பட்டனர். அங்கு தங்கச் சுரங்கங்கள் பல இடங்களில் கண்டு பிடிக்கப்பட்டன. இதனுல் ஜனங்கள் மேன்மேலும் வந்து குடியேறினர். விக்டோரியாவும் குவீன்ஸ்லாந்தும் இராணியின் பெயரை ஒட்டிவைக்கப்பட்டன. ஆஸ்திரியாவில் உள்ள குடியேற்ற நாடுகள் 1901-ல் ஆஸ்திரேலியன் காமன் வெல்த் என்னும் சுயராஜ்ஜியச் சமஷ்டியைப் பெற்றன. நியூ ஸீலந்து தனிப்பட்ட குடியேற்ற நாடாயிற்று. தென் ஆப்ரிக்காவில் ஆங்கிலேயர்கள் நன்னம்பிக்கை முனே குடியேற்ற நாட்டை ஸ்தாபித்தனர். அவர்கள் போயர்களுடன் யுத்தம் செய்து தென் ஆப்பிரிக்கா ஐக்கிய நாட்டை ஏற்படுத்தினர். இவ்வாருக ஆங்கிலக் குடியேற்ற நாடுகள் முன்னேற்றம் அடைந்தன.

வைர விழா :—1897. விக்டோரியா மகாராணியின் வைரவிழா அவளுடைய ஆட்சியின் அறுபதாவது ஆண்டில் செம்மையாக நடந்தது. அவள் அறுபத்து நான்கு வருஷங்கள் இங்கிலாந்தைச் சீரும் சிறப்புமாக ஆண்டபின் 1901-ல் தேக வியோகமானுள்.

விக்டோரியா மகாராணியின் காலம்:—இங்கிலாந்தை ஆண்டவர்களுள் மிகவும் நீடித்த காலம் ஆண்டவள் விக்டோரியா மகாராணியே. அவளிடம் நற்குணங்கள் சிறந்து விளங்கின. அவள் காலத்தில் இங்கிலாந்து செழிப்பும் செல்வாக்கும் மிகுந்த நாடாயிற்று. பார்லிமெண்ட் மூன்று சீர்திருத்தச் சட்டங்களால் சீர்திருத்தப்பட்டுப் பொது ஜனங்களின் அபிப்பிராயத்தை ஒட்டி நடக்கும் சபையாயிற்று. தொழிற்சாலைகள் அபரிமிதமாக ஏற்படுத்தப்பட்டன. தொழிலாளர்களின் சௌகரியங்களைக் கவனிப்பதன் பொருட்டு சட்டங்கள் நிறைவேற்றப்



படம் 30, பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியம்,

பட்டன. நாட்டில் ஜனத்தொகை விருத்தியாயிற்று. புதிதாகப் பட்டணங்கள் கிளம்பின. நகர சபைகள் சீர்திருத்தப்பட்டு நகரங்களின் சௌகரியங்களைச் சரிவரக் கவனித்தன. கனடா, ஆஸ்திரேலியா, நியூஸீலந்து, தென் ஆப்பிரிக்கா முதலிய ஆங்கிலக் குடியேற்றநாடுகள் தீவிரமாக முன்னேற்றத்தை அடைந்தன. இங்கிலாந்து, ஐரோப்பாவிலுள்ள மற்றெல்லா நாடுகளைக் காட்டிலும் உன்னத நிலைமையைப் பெற்றது. இராணியின் காலத்தில் இலக்கியம் விருத்தி அடைந்தது. பெரிய ஆங்கிலக் கவிகள் தோன்றினர்கள். அவர்களுள் முக்கியமானவர்கள், கீட்ஸ், ஷெல்லி, வோர்ட்ஸ்வொர்த், ப்ரௌனிங், டென்னிஸன் என்பவர்கள் ஆவர். டிக்கென்ஸ், தாக்கரே, கார்லைல், ரஸ்கின், ஸ்டீவென்ஸன் என்னும் நிபுணர்கள் ஆங்கில வசனத்தை விருத்தி செய்தார்கள். பிரபல விஞ்ஞான சாஸ்திரியான சார்லஸ் டார்வின் அக்காலத்தில் விளங்கினன். தொழில்களிலும், போக்குவரத்து சாதனங்களிலும் புதிய முறைகள் கண்டுபிடிக்கப்பட்டன. நாடு முழுவதும் ரயில் பாதைகள் ஏற்பட்டன. நீராவிக் கப்பல்கள் கடல்களில் செல்லுவதற்குச் சௌகரியமாயின. மின்சார சக்தி கண்டுபிடிக்கப்பட்டது. ஆகையால் விக்டோரியா மகாராணி காலத்தில் இங்கிலாந்து பல விதங்களில் முன்னேற்றம் அடைந்து விளங்கியது.

பயிற்சிகள்

1. விக்டோரியா என் அரசி ஆனுள் ?

2. விக்டோரியாவுக்கு "மகாராணி" என்ற பிருது பெயர் எவ்வாறு கிடைத்தது ?

3. விக்டோரியாவின் முதல் மந்திரி யார் ? அவன் செய்த முக்கிய விஷயங்களைச் சுருக்கமாக எழுதுக.

4. சாஸன இயக்கம் என்றால் என்ன? அந்த இயக்கத்தின் நோக்கங்கள் யாவை?

5. தானியச் சட்டங்கள் என்பவை யாவை? அவைகள் ஏன், எப்பொழுது நிறைவேற்றப் பட்டன? அவைகளை யார், எப்போது, ஏன், ரத்து செய்தார்? அப்படி ரத்து செய்ததனால் உண்டான பலன்கள் என்ன?

6. லார்ட் ஜான் ரஸ்ஸெல் செய்த விஷயங்களில் நான்கைக் குறிப்பிடுக?

7. கிரிமியா யுத்தத்தில் இங்கிலாந்து ஏன் துருக்கிக்கு உதவி செய்தது? அந்த யுத்தம் எந்த உடன்படிக்கையால் முடிந்தது? யுத்தத்தில்நடந்த நிகழ்ச்சிகளை ஒரு படம் வரைந்து குறிப்பிடுக?

8. பால்மெர்ஸ்டன் எவ்வாறு வெளிநாட்டு விஷயங்களைக் கவனித்தான்?

9. இரண்டாவது சீர்திருத்தச் சட்டம் எப்பொழுது, யாரால் நிறைவேற்றப்பட்டது?

10. கிளாட்ஸ்டன் ஐர்லாந்துக்கு என்ன உதவி செய்தான்?

11. கிளாட்ஸ்டன் செய்த சீர்திருத்தங்களுள் முக்கியமானது எது?

12. பென்ஜமின் டிஸ்ரேலி இங்கிலாந்தின் கௌரவத்தை எவ்வாறு உயர்த்தினான்?

13. சாலிஸ்பரி பிரபு எந்தக் கட்சியைச் சார்ந்தவன்? அவன் செய்த முக்கியமான விஷயங்கள் யாவை?

14. எகிப்தில் இங்கிலாந்தின் ஆதிக்கியம் எவ்வாறு ஏற்பட்டது?

15. போயர் யுத்தம் எப்பொழுது, ஏன் நடந்தது? தென் ஆப்பிரிக்காவின் படம் வரைந்து அந்த யுத்தத்தின் நிகழ்ச்சிகளைக் குறிப்பிடுக?

16. விக்டோரியாவின் ஆட்சியில் குடியேற்ற நாடுகள் எவ்வாறு விருத்தி அடைந்தன?

17. விக்டோரியாவின் வைரவிழா எப்பொழுது நடந்தது?

18. விக்டோரியா ஆட்சியின் சிறப்பிற்குக் காரணங்கள் என்ன?

அத்தியாயம் 4.

இருபதாம் நூற்றாண்டு.

ஏழாம் எட்வர்டின் ஆட்சி, 1901 - 10; ஐந்தாம் ஜார்ஜ், 1910 - 36; தென் ஆப்பிரிக்கா ஐக்கியம் - டாரிப் சீர்திருத்தம் - நான்காம் சீர் திருத்தச் சட்டம் - ஐரிஷ் சுயேச்சை இராஜ்ஜியம்.

அதிகாரம் 1.

VII ஏழாம் எட்வர்ட், 1901-10.

முக்கியஸ்தர்கள் :—

லூயி போதா.
ஜோஸப் சேம்பர்லேன்.
ஆஸ்டின் சேம்பர்லேன்.
ஆர்தர் ஜெ. பால்பர்
ஸர் ஹென்றி காம்பெல் பானர்மன்.
ஆஸ்க்வித்.

முக்கியத் தேதிகள் :—

1901. ஏழாம் எட்வர்ட் ஆட்சியின் ஆரம்பம்.
1902. போயர் யுத்தம், பால்பரின் கல்விச் சட்டம்.
1903. சேம்பர்லேனின் டாரிப் சீர்திருத்த இயக்கம்.
1904. ருஷ்யாவுக்கும் ஜப்பானுக்கும் யுத்தம்.
இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் உடன்படிக்கை.
1906. காம்ப்பெல் மந்திரி சபை.
1908. ஆஸ்க்வித் பிரதம மந்திரி ஆதல்.
1910. பிரபுக்கள் சபை பட்ஜட்டை நிராகரித்தல்.
தென் ஆப்பிரிக்கா ஐக்கியம்.

ஏழாம் எட்வர்டின் குணம் :—விக்டோரியா மகாராணி 1901-ல் இறந்ததும் இளவரசரான ஏழாம் எட்வர்ட் அரசரானார். அவர் பட்டத்திற்கு வந்ததும் 'கடல் கடந்த பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்திற்கு அரசர்' என்னும் பெய

ரைக் கொண்டார். அவர் அவ்வாறு கொண்டது குடியேற்ற நாடுகளின் முக்கியத்தைக் குறித்தது. அவர் அரசனுகும் பொழுது அவருக்கு வயது அறுபது. அவர் விக்டோரியா வின் காலத்தில் நாற்பது வருஷங்கள் அரசாட்சியில் பயிற்சி பெற்றிருந்தார். அவருக்குப் பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தின் வெவ்வேறு பாகங்கள் நன்ருகத் தெரியும். அவைகளை நேரி லேயே பார்த்து அறிந்துகொண்டிருந்தார். அவருக்கு உலக



படம் 31. ஏழாம் எட்வர்ட்.

விஷயங்களைப்பற்றிய ஞானம் அதிகம். அவர் தேசத்தி லுள்ள கட்சிகளைச் சமமாக நடத்தினுர். அவரிடத்தில் சாமார்த்தியம், புத்திசாலித்தனம், விசாலமான நோக்கம், சமயோசிதமாக நடத்தல் முதலிய நற்குணங்கள் இருந்தன. அவர் சட்ட வரம்புகளை மீருது நடந்தார். ஆனுல் அரசப் பதவிக்குரிய பெருமைகளை விருத்தி செய்துகொண்டார். வெளிநாடுகளில் அவருடைய கீர்த்தி பரவியது. அவர் உல கில் அமைதி ஏற்படுவதன் பொருட்டு சிரமப்பட்டார். ஆத

லால் அவருக்கு 'அமைதியாக்குவோர்' என்றும் பிருது கிடைத்தது. அவர் காலத்தில் யுத்தங்கள் முடிந்து பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தில் எங்கும் அமைதி நிறைந்திருந்தது.

போயர் போரின் முடிவு:—ஏழாம் எட்வர்ட் பட்டத்திற்கு வரும்பொழுது போயர் யுத்தம் நடந்துகொண்டிருந்தது. ராபர்ட்ஸ் பிரபு, தென் ஆப்பிரிக்காவை விட்டுச் சென்றூர். கிட்ச்னர் பிரபு பிரதம தளகர்த்தர் ஆனூர். பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தின் வெவ்வேறு பாகங்களிலிருந்து புதிய சேனைகள் வந்துகொண் டிருந்தன. போயர் எதிர்ப்பை அடக்குவதற்கு வேண்டிய முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. நன்னம்பிக்கை முனை குடியேற்ற நாட்டில் போயர்கள் ஒரு கலகத்தைக் கிளம்பினூர்கள். அவர்கள் தீவிரமாகச் சண்டை செய்து மெதுவன் பிரபுவைச் சிறை செய்தனர். கிட்ச்னர் எடுத்துக் கொண்ட அடக்கு முறைகள் சீக்கிர மாகப் பலனளித்தன. போயர்கள் பலர் கொல்லப்பட்டார்கள்; மற்றுமுள்ளோர் சிறை பிடிக்கப்பட்டார்கள். அவர்களுடைய பிடிவாதமான எதிர்ப்பும் குறைந்தது. கடைசியாக, அவர்கள் 1902-ல் பிரிட்டிஷ்காரர்களுக்குக் கீழ்ப்படிந்து அவர்கள் அரசாட்சியை ஏற்றுக் கொண்டனர்.

தென் ஆப்பிரிக்கா ஐக்கியம்:—போயர் யுத்தம் தென் ஆப்பிரிக்காவுக்குப் பலவித நஷ்டங்களை உண்டாக்கி சமாதானத்திற்குப் பிறகும் வியாபாரம் விருத்தி அடைய அநேக வருஷங்கள் பிடித்தன. ட்ரான்ஸ்வால் சுரங்கங்களில் வேலை செய்வதற்கு வேண்டிய கூலிகள் அகப்படவில்லை. சைனுவில் இருந்து கூலிகள் கொண்டுவரப் பட்டனர்; திரும்பியும் அவர்கள் தங்கள் தேசத்திற்கு அனுப்பப்பட்டார்கள். இராஜ்ஜிய விஷயங்களில் பலவித தொந்திரவுகள் ஏற்பட்டன. விரோதமாயிருந்த ஆங்கிலேயர்களும்

டச்சுக்காரர்களும் சேர்ந்து வாழவேண்டியதாயிற்று. லிபரல் அரசாங்கம் 1906-ல் ட்ரான்ஸ்வாலுக்குச் சுயஆட்சி கொடுத்தது. போயர் தலைவரான லூயி போதா பிரதம மந்திரி ஆனார். சீக்கிரத்தில் ஆரஞ்சுநதி குடியேற்ற நாடும் சுய ஆட்சி பெற்றது. தென் ஆப்பிரிக்காகுடியேற்ற நாடு களும், கனடாவையும் ஆஸ்திரேலியாவையும் போல ஒரு சமஷ்டியைப் பெற ஆவல் கொண்டன. தென் ஆப்பிரிக்கா சட்டம் 1909-ல் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் நிறைவேறியது. அதன்படி கேப் குடியேற்ற நாடு, நேடால், ட்ரான்ஸ்வால், ஆரஞ்சு நதி நாடு முதலியவைகள் ஐக்கியம் அடைந்து 1910-லிருந்து ஒரு சமஷ்டியைப் பெற்றன. தென் ஆப்பி ரிக்கா ஐக்கியச் சமஷ்டி அரசாங்கத்திற்கு போதா பிரதம மந்திரி ஆனார்.

பால்பர் மந்திரி சபை:—1902-05. கன்ஸர் வேடிவ் கட்சியின் தலைவரான சாலிஸ்பரி பிரபு பிரதம மந்திரியாக இருந்தார். அவருக்குத் தேக அசௌகரியமாக இருந்ததால் 1902-ல் அவர் பதவியிலிருந்து நீங்கிக்கொண்டு சீக்கிரத்தில் இறந்தார். அவருக்குப்பிறகு அவருடைய உறவினரும் அவர் கட்சியைச் சார்ந்தவருமான ஆர்தர் ஜே. பால்பர் பிரதமமந்திரி ஆனார். அவர் 1902-ல் ஒரு புதிய கல்விச் சட்டத்தை நிறை வேற்றினார். ஜில்லா சபைகள் கல்வியைப் பற்றிய எல்லா விஷயங்களையும் கவனிக்கவேண்டும் என்பது அதன் முக்கிய அம்சம். அந்தச் சட்டத்தின்படி பள்ளிக்கூட சபைகள் நீக்கப்பட்டன; ஆரம்பக் கல்வியைப்பற்றிய பொறுப்பு, ஜில்லா கல்வி சபையினிடத்தில் ஒப்படைக்கப் பட்டது. ஸ்தல சபைகளே எல்லா ஆரம்பப் பள்ளிக்கூடங்களையும் கவனிக்கவேண்டியதாயிற்று. அதற்கு எதிராக மதஸ்தா பனத் தலைவர்கள் பெரிய கூச்சலைப் போட்டனர். ஆயினும் அது பயனில்லாமற் போயிற்று. அந்தச் சட்டம் ஒருமைப்

பட்ட தேசியக் கல்விக்கு அடிப்படையான காரணமாயிற்று. கல்வியைப்பற்றிய அம்சங்களெல்லாவற்றையும் அரசாங்கமே கவனிக்கவேண்டும் என்று விதிக்கப்பட்டது. பல மத ஸ்தாபனத் தலைவர்கள் கல்வி வரியைக் கொடுக்க மறுத்தார்கள். அவர்களுக்கு சாத்வீக எதிர்ப்பாளர்கள் என்று பெயர். அந்த எதிர்ப்பும் சீக்கிரமாகக் குறைய ஆரம்பித்தது. ஒரு ஐரிஷ் நிலச் சட்டம் 1903-ல் நிறைவேறியது. அதன்படி ஐரிஷ் குடியானவர்களுக்கு நிலங்களை வாங்க அரசாங்கத்தார் கடன் கொடுப்பதாக ஏற்பாடாயிற்று.

வெளிநாட்டு விஷயங்கள்:—பால்பர் மந்திரி சபையில் லான்ஸ்டவுன் பிரபு (Lord Lansdowne) வெளிநாட்டு மந்திரியாக இருந்தார். அவர் ஐரோப்பாவில் சமாதானம் நிலைப்பதற்குப் பாடுபட்டார். இங்கிலாந்து 1902-ல் ஜப்பானுடன் சிநேக உடன்படிக்கையைச் செய்துகொண்டது. அது 1903-ல் பிரஞ்சுடன் இருவர் உடன்படிக்கை (Dual Alliance) யும் செய்துகொண்டது. அதற்கு எதிராக ஜெர்மனி ஆஸ்திரியா, இத்தாலியுடன் மூவர் உடன்படிக்கை (Triple Alliance) யைச் செய்துகொண்டது. யுத்த ஏற்பாடுகள் நடந்ததே ஒழிய யுத்தம் ஏற்படவில்லை. 1904-ல் ருஷ்யாவுக்கும் ஜப்பானுக்கும் யுத்தம் ஆரம்பமாயிற்று. அந்தப் போரில் ஜப்பானே ஜயம் அடைந்தது. ருஷியா ஜப்பானுக்குத் தலைவணங்கிப் போர்ட்ஸ்மத் உடன்படிக்கையைச் செய்துகொண்டது. கிழக்கில் ஜப்பான் வலிமைமிகுந்த நாடாயிற்று. 1907-ல் இங்கிலாந்து ருஷியாவுடன் சிநேக உடன்படிக்கையைச் செய்துகொண்டது. வெளிநாட்டு அரசாங்கங்களுடன் சிநேகம் ஏற்படுவதற்கு ஏழாம் எட்வர்ட் மன்னர் சிறந்த முயற்சியை எடுத்துக்கொண்டார். வெளித் தேசங்களுக்கு அவர் தாமே நேராகச் சென்றார். மற்றைய நாட்டு அதிபர்களை வர

வேற்றூர். விவாக சம்பந்தத்தினுல் வெளித்தேசத்து அரசர், அரசிகள் அவருக்கு உறவினர்கள் ஆனுர்கள். 1905-ல் மந்திரிசபை மாறினுலும் இங்கிலாந்தின் வெளி நாட்டுக் கொள்கை மாறவில்லை. எட்வர்ட் தமக்குக் கிடைத்த அமைதியாக்குவோர் என்னும் பெயரை நிலை நிறுத்திக்கொண்டார்.

ஜோஸப் சேம்பர்லேயினும், டாரிப் சீர்திருத்தமும்:— ஜோஸப் சேம்பர்லெயின் குடியேற்ற நாடுகளின் மந்திரியாக இருந்தார். சுதந்திர வியாபாரம் என்ற கொள்கை நாட்டிற்கு நன்மையை விளைவிப்பதன்று, ஆகையால் அதை விட்டுவிட வேண்டும் என்று அவர் வற்புறுத்தினுர். இங்கிலாந்து சுதந்திர வியாபாரத்தைக் கைக்கொண்டும் அதன் முக்கிய வியாபார எதிரிகள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை; அப்படி ஏற்றுக் கொள்ளாவிடினும் அவைகள் செழிப்பாகவே இருந்தன. ஆங்கில குடி யேற்ற நாடுகளும் ஏற்றுமதி இறக்குமதிகளுக்கு வரிகளை விதித்து சுதந்திர வியாபாரக்கொள்கையைக் கைவிட்டன; அவைகள் இங்கிலாந்தின் சரக்குகளின்மீது வரிகளை விதித்தன. பிரிட்டனும் அதன் குடியேற்ற நாடுகளும் அதிகமாக ஒன்றுசேர வேண்டும் என்று சேம்பர்லெயின் விரும்பினுர். அவர்வெளி நாட்டுச் சரக்குகளுக்கு வரிகள் விதிக்கவும் குடியேற்ற நாடுகளின் சரக்குகளுக்கு விதிக்கும் வரிகளைத் தள்ளவும் ஒரு வித ஏற்பாட்டைக் கொண்டுவந்தார். மேலும் சுதந்திரவியாபாரம் இங்கிலாந்தின் கைத்தொழில்களையும் விவசாயத்தையும் கெடுத்துவிட்டதாக அவர் எண்ணினுர். அவர் நோக்கத்தை சிலர் ஆமோதித்து அவருடன் சேர்ந்தார்கள். லிபரல்கள் அவர் திட்டத்தைத் தீவிரமாக எதிர்த்தார்கள். மந்திரி சபையினரும் அதை ஆதரிக்கவில்லை. அவர் 1903-ல் தம் வேலையை ராஜி நாமா கொடுத்து விட்டு டாரிப்

சீர்திருத்த(Tariff Reform)த்தைப்பற்றி நாட்டில் பிரசங்கம் செய்தார். அவருடைய நோக்கம் மந்திரி சபையில் வேரூன்றியது. மந்திரி சபை மாறுதலில் அவருடைய குமாரர் ஆஸ்டின் சேம்பர்லெயின் பதவி பெற்றார். அவர் தம் தகப்பனாரின் நோக்கத்தைக் கைக்கொண்டார். கொஞ்சம் தாமதித்துப் பால்பரும் டாரிப் சீர்திருத்தத்திற்குத் தன் ஆதரவைக் காட்டினார். இவ்வாறு உண்டான பேதங்களால் மந்திரிசபையின் வலுக் குறைந்தது.

பால்பர் மந்திரி சபையின் வீழ்ச்சி:—டாரிப் சீர்திருத்தத்தால் மந்திரிசபையில் வித்தியாசங்கள் ஏற்பட்டன. சேனையைச் சீர்திருத்த அந்தச் சபை எடுத்துக்கொண்ட முயற்சிகளை ஜனங்கள் விரும்பவில்லை. கல்விச் சட்டத்திற்கு எதிர்ப்பு ஏற்பட்டது. தென் ஆப்பிரிக்காவில் சீனர்களின் அடிமைத் தனத்தைப்பற்றிப் பெரிய கூச்சல் ஏற்பட்டது. டாரிப் சீர்திருத்தத்தால் கஷ்டங்கள் உண்டாகும் என்று ஜனங்கள் பயப்பட்டார்கள். ஏழை மக்கள் இறக்குமதி வரிகளால் தங்களுடைய செலவு அதிகரிக்கும் என்று கருதினார்கள். பெரிய தொழிலாளிகளும் வியாபாரிகளும் தங்கள் தொழில்களும் வியாபாரமும் குறைந்துவிடும் என்று அபிப்பிராயம் கொண்டனர். இவ்வாறான காரணங்களால் மந்திரி சபையின் வலுக் குறைந்தது. ஆகையால் 1905-ல் பால்பர் ராஜினாமா கொடுத்தார்.

ஸர் ஹென்றி காம்பெல் பானர்மன் மந்திரி சபை:— லிபரல் கட்சித் தலைவரான பானர்மன் பிரதம மந்திரி ஆனார். அந்தச் சபையில் ஸர் எட்வர்ட் க்ரே வெளி நாட்டு மந்திரியாகவும், ஜான் மார்லி இந்தியா மந்திரியாகவும் இருந்தார்கள்; ஆஸ்க்வித் பொக்கிஷ மந்திரியாக அமர்ந்தார்; வாசாலகரும் பிரபலஸ்தருமான டேவிட் லாயிட் ஜார்ஜ் மந்திரி பதவியைப் பெற்றிருந்தார். பார்லிமெண்ட்

கலைக்கப்பட்டது. பொதுத் தேர்தல் 1906-ல் நடந்தது. புது அரசாங்கத்திற்கு நல்ல வெற்றி கிடைத்தது. பார்லி மெண்டில் லிபரல்கள் 400 பேர்கள் இருந்தனர். அப் பொழுது புதிதாகத் தொழிற்கட்சி ஆரம்பமாயிற்று. அந் தச் கட்சியினர் ஜன சமூக சமத்திற்காகப் பல சீர்திருத் தங்கள் செய்யவேண்டும் என்று விரும்பினர். லிபரல்கள் எட்வர்டின் ஆட்சி முடிவு வரையில் பதவியில் இருந்தார் கள். பானர்மன் திறமை மிகுந்தவர் அல்லர்; ஆயினும் சாதுர்யமாக நடந்துகொண்டார். அவர் 1908-ல் தேக அசௌகரியத்தினுல் வேலையில் இருந்து நீங்கிக்கொண்டார். சீக்கிரத்தில் அவர் இறந்துபோனுர்.

ஆஸ்க்வித் மந்திரிசபை:—பிறகு ஆஸ்க்வித் பிரதம மந்திரியானுர். அந்த மந்திரி சபையில் லாயிட் ஜார்ஜ் பொக்கிஷ மந்திரிப் பதவியைப் பெற்றுர். கன்ஸர்வேடிவ் கட்சியிலிருந்து லிபரல் கட்சிக்கு மாறிய வின்ஸ்டன் சர்ச்சி லுக்குக் காபினெட் பதவி கிடைத்தது. 1902-ல் ஏற்பட்ட கல்விச் சட்டத்தில் மந்திரி சபையினர் சில மாறுதல்களைச் செய்தனர். ஆரம்பக் கல்வி சாலைகள் ஸ்தல ஸ்தாபனங் களின்கீழ்க் கொண்டுவரப்பட்டன. தொழிலாளர் சௌகரி யங்களுக்காக ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டது. நிலக் கரி சுரங்கங்களில் வேலை செய்பவர்களின் நேரம் குறைக்கப் பட்டது. குழந்தைகளைப் பாதுகாப்பதற்காக ஒரு சட்டம் நிறைவேறியது. கப்பற்படை வலுப்படுத்தப்பட்டது; விலை உயர்ந்த சண்டைக்கப்பல்கள் கட்டப்பட்டன. லாயிட் ஜார்ஜ் 1909-ல் ஒரு வரவு செலவு திட்டத்தைத் (Budget) தயார் செய்தார். அதில் பணக்காரர் மேல் அதிகமான வரு மான வரியை விதிக்கத் திட்டம் போடப்பட்டிருந்தது; சாராயங்களின்மீதும், சிரமப்படாமல் வரும் வருமானங் களின்பேரிலும் அதிக வரி ஏற்படுத்தப்பட்டிருந்தது. அது

கிளர்ச்சி மிகுந்ததும், பறிமுதல் செய்வதுமான திட்டம் என்ற கூச்சல் ஏற்பட்டது. பிரபுக்கள் சபையில் பட்ஜட் நிராகரிக்கப்பட்டது. பார்லிமெண்ட் சபை கலைக்கப்பட்டு 1910-ல் பொதுத்தேர்தல் நடந்தது. லிபரல்களே அதிகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களுக்கு ஐரிஷ் தொழிற் கட்சியினரின் ஆதரவு இருந்தது. பட்ஜட் பிரபுக்கள் சபையில் நிறைவேறியது. ஆயினும் பிரபுக்கள் சபையின் அதிகாரத்தைக் குறைக்கவேண்டும் என்று மந்திரி சபையினர் விரும்பினர். இப்படி தர்க்கம் நடந்துகொண்டிருக்கும்பொழுது எட்வர்ட் மன்னர் இறந்தார்.

பயிற்சிகள்

1. ஏழாம் எட்வர்டின் குணாதிசயங்கள் யாவை?

2. அவருக்கு 'அமைதியாக்குவோர்' என்னும் பெயர் வரக் காரணம் என்ன?

3. போயர் போர் எவ்வாறு முடிவு பெற்றது?

4. தென் ஆப்பிரிக்கா ஐக்கியம் எப்பொழுது, எவ்வாறு ஏற்பட்டது?

5. ஆர்தர் ஜெ. பால்பர் எந்தக் கட்சிக்குத் தலைவர்? அவர் செய்த விஷயங்களில் நான்கைக் குறிப்பிடுக.

6. ஜோஸப் சேம்பர்லயின் என்பவர் யார்? அவர் என்ன சீர்திருத்தம் செய்ய விரும்பினர்? அந்தச் சீர்திருத்தத்தைப் பற்றி எழுதுக.

7. பால்பர் மந்திரி சபையின் வீழ்ச்சிக்கு காரணங்கள் என்ன?

8. ஸர் ஹென்றி காம்பெல் பானர்மன் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்? அவருடைய மந்திரி சபையில் முக்கியமானவர்கள் யார்?

9. ஆஸ்க்வித் மந்திரி சபை செய்த நல்ல விஷயங்கள் என்ன?

10. லாயிட் ஜார்ஜின் பட்ஜட்டை பிரபுக்கள் சபையினர் என் நிராகரித்தனர்? அவ்வாறு நிராகரித்ததால் உண்டான பலன் என்ன?

அதிகாரம் 2.

ஐந்தாம் ஜார்ஜ், 1910—36

வின்ட்ஸர் வம்சாவளி

ஜார்ஜ் V, 1910—36 = மேரி அரசி

எட்வர்ட் VIII, 1936

ஜார்ஜ் VI, 1936

இளவரசி எலிஸபெத்

மார்கரெட் ரோஸ்

முக்கியஸ்தர்கள் :—

கெய்சர் வில்லியம் II.
இளவரசன் பெர்டினுன்ட்.
தளகர்த்தர் ஸர் டக்லஸ் ஹேக்.
கப்பற் தலைவர் ஸர் டேவிட் பீட்டி.
மார்ஷல் பாக்.
உட்ரோ வில்ஸன்.
ராம்ஸே மாக்டனல்ட்.
ஸ்டான்லி பால்டுவின்.
நெவில் சேம்பர்லெயின்.
அடால்ப் ஹிட்லர்.
பெனிடோ முஸோலினி.
ப்ரெஸிடென்ட் ரூஸ்வெல்ட்.

முக்கியத் தேதிகள் :—

1910 ஐந்தாம் ஜார்ஜ் அரசராதல்.
1911 பார்லிமென்ட் சட்டம்.
1914 மகா யுத்த ஆரம்பம்.
மார்ன் சண்டை.

1916 ஜட்லண்ட் சண்டை.
சாம் நதி சண்டை.
லாயிட் ஜார்ஜ் பிரதம மந்திரி ஆதல்.
1917 ருஷியாவில் கிளர்ச்சி.
1918 யுத்தம் நிறுத்தப்படுதல்.
ஜெர்மனியில் கிளர்ச்சி.
நான்காம் சீர்திருத்தச் சட்டம்.
1919 வெர்ஸேல்ஸ் உடன்படிக்கை.
1920 சர்வ தேசச் சங்க ஆரம்பம்.
ஐரிஷ் சுயேச்சை அரசாங்கம்.
1931 வெஸ்ட் மின்ஸ்டர் சட்டம்.
1932 ஜப்பான் மஞ்சூரியாவைப் பிடித்தல்.
1935 இந்தியா கவர்ன்மெண்ட் சட்டம்.
அபிஸினியாவை இத்தாலி கைக்கொள்ளல்.
ஐந்தாம் ஜார்ஜின் வெள்ளி விழா.
1936 ஐந்தாம் ஜார்ஜின் மரிப்பு.
எட்டாம் எட்வர்ட் பட்டம் பெற்று அரசுரிமையிலிருந்து நீங்குதல்.
ஆரும் ஜார்ஜ் அரசராதல்.

ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் குணம்:—அவர் நற்குணங்கள் மிகுந்தவர். அவர் கப்பற் படையில் அனேக வருஷங்கள் உழைத்திருந்ததால் அவருக்கு மாலுமி மன்னர் என்று பெயர் கிடைத்தது. அவர் பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தில் உள்ள குடிகளிடத்து அன்பு மிகுந்தவர்; விசாலமான மனதையும் பரந்த இருதயத்தையும் உடையவர்; தேசாபிமானம் உள்ளவர்; இந்தியக் குடிகளிடத்து அபிமானம் கொண்டவர். அவர் 1911ல் மேரி அரசியுடன் இந்தியாவிற்கு வந்து டெல்ஹியில் ஒரு தர்பார் நடத்தினர். அவர் அயல்நாட்டு பட்டங்களாகிய ஹனேவர், ஸாக்ஸே கோபர்க் கோதா வம்சங்களை விட்டு விட்டார். அவர்

காலத்திலிருந்து அவர் வம்சம் வின்ட்ஸர் வம்சம் (House of Windsor) என்று வழங்கப்படலாயிற்று.

பார்லிமேன்ட் சட்டம், 1911:—இந்த சட்டத்தில் சில முக்கிய விஷயங்கள் கண்டிருந்தன. அவைகளாவன:—வரவு செலவு பட்ஜட்டுகளைப் பிரபுக்கள் சபையினருக்கு நிராகரிக்க அதிகாரம் கிடையாது. பொதுஜன சபையில் மூன்று வருஷங்களில் மூன்று முறை நிறைவேறிய மசோ

படம் **32.** ஐந்தாம் ஜார்ஜ்

தாக்கள் பிரபுக்கள் சபையின் சம்மதம் இன்றியே சட்டங்கள் என்று கருதப்படும்; பார்லிமென்ட் பொதுத் தேர்தல் ஏழு வருஷங்களுக்குப் பதிலாக ஐந்து வருஷங்களுக்கு ஒரு தரம் ஏற்படவேண்டும். இந்தச் சட்டத்தின் பலனாகப் பிரபுக்கள் சபையின் அதிகாரம் குறைந்தது.

தேசீய இன்ஷியூரன்ஸ் சட்டம், 1911:—அதன்படி குறைந்த வருமானம் உள்ளவர்களுக்குத் தேக ஆரோக்கியத்

தைக் கவனிக்க வேண்டுமென்ற ஏற்பாடுகள் எடுத்துக் கொள்ளப்பட்டன ; அரசாங்கம், முதலாளி, தொழிலாளி ஆகிய மூவரும் செலவை ஏற்றுக்கொள்ள வேண்டியது என்று ஏற்பாடாயிற்று.

மகாயுத்தம், 1914–18:—காரணங்கள்: ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் காலத்தில் இங்கிலாந்திற்கும், ஜெர்மனிக்கும்



படம் 33. ஐரோப்பிய மகா யுத்தத்திற்கு முன்

ஒரு பெரிய உலக யுத்தம் ஏற்பட்டது. ஜெர்மனி மிகவும் வலுத்த நாடாயிற்று. அது ஆஸ்திரியா, இத்தாலி தேசங்களுடன் மூவர் உடன்படிக்கையைச் செய்து கொண்டதை முன்பே கண்டோம். அதற்கு எதிராகப் பிரான்ஸ் ருஷியா வுடன் இருவர் உடன்படிக்கையைச் செய்து கொண்டது. இவ்வாறு ஐரோப்பாவிலுள்ள தேசங்கள் யுத்த ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தன. ஜெர்மனி வலுத்த நாடாக விருத்தியாயிற்று; அதன்

பேராசையும் வளர்ந்தது. அது ஒரு பெரிய, சாம் ராஜ்ஜியத்தை அடைய ஆசை கொண்டது; உலகத்தில் பல குடியேற்ற நாடுகளை ஏற்படுத்திக்கொண்டது. அதன் அரசரான கெய்சர் தன் அரசாட்சியை வலுப்படுத்தி ஐரோப்பாவில் சம அதிகாரத்தை நிலைகுலைத்தார். பத்தொன்பதாம் நூற்றுண்டில் ஜெர்மனி பிரான்சிட மிருந்து ஆல்ஸேஸ் லொரேன் என்ற இரண்டு பிரதேசங் களைப் பிடிங்கிக்கொண்டது. அது ராணுவப் படையை வலுப்படுத்தியது. அதில் வயதுவந்த எல்லோரும் சேர்க்கப் பட்டார்கள். ஜெர்மனியின் கப்பற்படை வலிமை மிகுந்த தாயிற்று. அதன் கைத் தொழில்களும் வியாபாரமும் உலகத்தில் முன்னேற்றம் அடைந்தன. அது துருக்கி தேசத்துடன் சிநேகம்செய்துகொண்டது. அது ஆஸ்திரியா, பால்கன் தீபகற்பத்தில் அதிகாரம் செலுத்த உதவி செய்தது.

தற்போதைய காரணம்:—1914-ல் ஆஸ்திரியாவின் இளவரசனை பெர்டினண்டு (Ferdinand) செர்பியா தேசத்துத் தலைநகரான சிரேஜியோ (Serajeo) என்னும் இடத்தில் ஒரு செர்பியனால் கொலை செய்யப்பட்டான். ஆஸ்திரியா பழிவாங்க செர்பியாவின் மீது படையெடுத் தது. ருஷியர்கள் செர்பியருக்கு உதவிசெய்ய வந்தார்கள். பிரான்ஸ் ருஷியா கட்சியுடன் சேர்ந்தது. ஜெர்மனி ஆஸ்திரியா செய்ததுதான் சரியென்று யுத்தத்தைத் தொடங்கி பிரான்சின்மீது படை எடுத்தது. அது பழைய உடன்படிக்கை நிபந்தனைகளை காற்றில் பறக்கவிட்டு பெல்ஜியத்தின் வழியாக தன் படைகளை நடத்தி அந்த தேசத்தைத் துவம்சம் செய்தது. இங்கிலாந்தும் கோபம் கொண்டு ஜெர்மனியுடன் யுத்தத்தைத் தொடங்கியது.

நிகழ்ச்சிகள் :—மகா யுத்தம் 1914-ல் ஆரம்பம் ஆயிற்று. அது உலகத்தில் பல இடங்களில் நடந்தது. ஜெர்மனியே ஆரம்பத்தில் வெற்றிகளைப் பெற்றது. ஆங்கிலச் சேனைக்குத் தலைவர் ஸர்ஜான் பிரஞ்சு என்பவர். ஜெர்மானியர் மான்ஸ் (Mons) சண்டையில் 1914-ல் வெற்றிபெற்று எதிரிகளைத் துரத்தி அடித்தனர். பாரிஸ் பிடிபடும்படியான அபாய நிலைமையில் இருந்தது. மார்ன் (Marne) நதிக்கரைச் சண்டையில் ஜெர்மானியர் தோற்கடிக்கப்பட்டனர். எயிஸ்னி (Aisne) நதிக்கரை வரையில் அவர்கள் திரும்பும்படியாயிற்று. அதற்குப்பிறகு அவர்கள் வடகடலில் இருந்து ஸ்விட்ஸர்லாந்துவரையில் அகழிகள் வெட்டி அகழிச் சண்டையை ஆரம்பித்தனர். அவர்கள் ய்ப்ரஸ் (Ypres) சண்டையில் தோல்வி அடைந்தனர். தோல்வி அடைந்தும் யுத்தம் வலுவாக நடந்தது. கிழக்குத் களத்தில் ருஷியாயுத்தம் செய்தது; அங்கே ஜெர்மானிய தளகர்த்தரான வான் ஹின்டன்பர்க் ருஷியர்களைத் தோற்கடித்தார்.

1915-ல் இத்தாலி நேசக் கட்சியினருடன் சேர்ந்து கொண்டது. அது ஆஸ்திரியாவுடன் சண்டை செய்து கோரிஸியா (Gorisia) என்னும் இடத்தைப் பிடித்தது. துருக்கியர்ஜெர்மனியுடன் சேர்ந்து கொண்டனர். பிரிட்டிஷ் படை ஒன்று கலிபோலி (Galiipoli) தீபகற்பத்தைப் பிடித்து, டார்டனல்ஸ் ஜலஸந்தியைக் கைப்பற்றச் சென்றது; அது துருக்கி தளகர்த்தரான முஸ்தாபா கெமால் பாஷாவினால் தோற்கடிக்கப்பட்டுத் திரும்பியது. மேற்குக் களத்தில் ஜெர்மானியர் வேர்டன்(Verdun) கோட்டையை எதிர்த்தனர். ஆனால், அது பிடிபடவில்லை. ஸர் டக்லஸ் ஹெய்க் பிரிட்டிஷ் சேனைக்குத் தலைவர் ஆனார். ஜெர்மானியர்

துரத்தியடிக்கப்பட்டனர்; ஆனால், அவர்கள் வரிசையைத் தகர்க்க முடியவில்லை.

கடல் யுத்தம் :—பிரிட்டிஷ் கப்பற் படை ஜெர்மன் பசிபிக் கப்பல்களை 1914-ல் பால்க்லண்ட் தீவுகள் சண்டையில் தோற்கடித்தது. இங்கிலாந்தின் கடல் ஆதிக்யத்தால் ஜெர்மனியின் கப்பல்கள் வெளியில் போக முடியவில்லை, கீல் (Kiel) கால்வாயிலேயே அடைபட்டுக் கிடந்தன. 1916-ல் பிரிட்டிஷ் கப்பற்படைத் தலைவரான ஸர். டேவிட் பீட்டி (Sir David Beaty) ஜட்லண்டு சண்டையில் ஜெர்மன் கப்பற் படையைத் தோற்கடித்தார். அவருடன் கப்பற் தலைவர் ஜெலிகோவும் சேர்ந்து கொண்டார். ஜெர்மன் கடல்படை வெளியில் வரமுடியாமற் போயிற்று. ஜெர்மானியர் நீரின் கீழ் செல்லக்கூடிய முழுகுங் கப்பல்களைச் (Submarines) செய்தனர். அவைகள் சமுத்திரத்திற்குள் சென்று பிரிட்டிஷ் கப்பல்களைக் கவிழ்த்து மிகுந்த சேதத்தை விளைவித்தன. அதனால் இங்கிலாந்திற்கு ஆகார வஸ்துக்களும், சாமான்களும் ஒழுங்காக வரமுடியவில்லை இப்படி ஜெர்மனி செய்ததே அமெரிக்கா ஐக்கிய இராஜ்ஜியங்கள் நேசக் கட்சியினருடன் சேருவதற்குக் காரணமாயிற்று; ஜப்பானும் சேர்ந்துகொண்டது; ஜெர்மனியின் நீர்மூழ்கிக் கப்பல்கள் பிரிட்டிஷ், பிரஞ்சு, அமெரிக்கன், இத்தாலியன், ஜப்பானிய யுத்தக் கப்பல்களை வேட்டையாடித் தொலைத்தன.

ஜெர்மனியின் தோல்வி :—மேற்குக் களத்தில் யுத்தம் 1917-ல் வலுவாக நடந்தது. பிரஞ்சு சேனை ஜெர்மன் அகழி வரிசையை எதிர்த்தது. பிரிட்டிஷ் சேனை பெல்ஜியத்தில் மும்முரமாக சண்டை செய்தது. அதன் காரணமாக ஜெர்மானியர் பின்வாங்கி ஹிண்டன்பர்க் கோடு (Hindenburg line) வரைக்கும் சென்றார்கள்; கிழக்

குக் களத்தில் ருஷியா யுத்தத்தில் இருந்து விலகிக் கொண்டது. ருஷியாவில் ஒரு பயங்கரமான கிளர்ச்சி ஏற்பட்டு பால்ஷிவிக் என்னும் கட்சியார் குடி அரசை ஸ்தாபித்தனர். ஆகையால் ஜெர்மனி கிழக்கில் இருந்த சேனைகளைப் பிரான்சிற்கும் பெல்ஜியத்திற்கும் அனுப்பியது. இத்தாலியர்கள் கப்போரிட்டோ (Caporetto) சண்டையில் தோல்வி அடைந்தார்கள். ஆகையால் நேசப் படைகள் இத்தாலிக்கு உதவி செய்யப் போகவேண்டியதாயிற்று. அமெரிக்க அரசாங்கம் நேசக்கட்சிக்கு உதவி செய்ய ஒரு பெரிய சேனையைப் பிரான்சிற்கு அனுப்பியது. பிரிட்டிஷ் சேனைகள் பாலஸ்தீனத்திலும் மெஸபடோமியாவிலும் ஜயம் பெற்றன. துருக்கியர்கள் தோல்வி அடைந்தனர். ஜெர்மானியர் 1918-ல் கிழக்கிலிருந்து வந்த சேனையின் வலுவைக் கொண்டு நேசக் கட்சியினரை எதிர்த்தனர்., அவர்கள் எதிரிகளைத் தோற்கடித்து மார்ன் நதியைக் கடந்து வந்தனர். நேசக் கட்சியினர் நிலைமை மிகவும் அபாயத்தில் இருந்தது. பிரிட்டிஷ் யுத்த மந்திரியான லாயிட் ஜார்ஜ் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார். தளகர்த்தர் பாக் (Foch) நேசச் சேனைக்குத் தலைமை வகித்தார். அவர் ஜெர்மரனியரைத் தோற்கடித்துப் பின் வாங்கச் செய்தார். நவம்பர் 11, 1918-ல் யுத்தத்தை நிறுத்த வேண்டும் என்று அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். ஜெர்மனியில் ஒரு பெரிய கிளர்ச்சி ஏற்பட்டது. கெய்ஸர் சிம்மாசனத்தை விட்டு ஹாலந்துக்கு ஓடினர். ஜெர்மனியில் குடி அரசு ஏற்படுத்தப்பட்டது. ஆர்மிஸ்டிஸ்படி ஜெர்மனி ரைன் நதிக்குப் பின் செல்லவேண்டும் என்றும் அதன் கப்பற்படையையும் கடல் முழுகிக் கப்பல்களையும் விட்டுவிட வேண்டும் என்றும் ஏற்படுத்தப் பட்டது. நேசக் கட்சியினர் ரைன் நதிப் பிரதேசத்தைக் கைக்கொண்டனர்.

ஜெர்மனி யுத்தத்தில் நடந்துகொண்ட விதம்:—ஜெர்மனி பயத்தை உண்டுபண்ணி ஆளுவதற்கு விரும்பியது. ஜெர்மன் துருப்புகள் பெல்ஜியத்தின்மீது படை எடுத்த பொழுது ஜெர்மன் மந்திரி முன் ஏற்பட்ட உடன்படிக்கை ஒரு காகிதத்துண்டு என்றும் அவசியம் ஏற்பட்ட காலத்தில் சமயோசிதம்போல் நடந்து கொள்ளலாம் என்றும் சொன்னர். ஜெர்மானியர் எங்கும் கெடுதிகளை விளைவித்தார்கள். அழகான பட்டணங்கள் தரையோடு தரையாக்கப்பட்டன; பெரிய புத்தகசாலைகள் தீக்கிரையாயின; நீர் மூழ்கிக்கப்பல்கள் பெரிய கப்பல்களைக் கவிழ்த்துச் சேதம் உண்டுபண்ணின. ஆகாய விமானங்கள் குண்டுகளைப் போட்டு ஜனங்களுக்கு ஆபத்தை விளைவித்தன

வேர்ஸேல்ஸ் உடன்படிக்கை, 1919:—சிநேகிதக்கட்சித் தேசங்கள் ஒன்று சேர்ந்து இந்த உடன்படிக்கையைச் செய்தன. இதைச் செய்தவர்களில் முக்கியமானவர்கள். லாயிட் ஜார்ஜ், கிளிமென்கோ, உட்ரோ வில்ஸன். பாரிஸிற்கு அருகாமையில் உள்ள வெர்ஸேல்ஸ் என்கிற இடத்தில் அது கையெழுத்துச் செய்யப்பட்டது. அதில்கண்ட நிபந்தனைகளாவன :—ஜெர்மனியின் ராணுவப்படைகளும் கப்பற்படைகளும் குறைக்கப்பட்டன; ஆல்ஸேஸும் லொரேனும் பிரான்ஸிற்குக் கொடுக்கப்பட்டன; போலந்து தேசம் திரும்பியும் ஸ்தாபிக்கப்பட்டது; ஜெர்மனி நேய நாடுகளுக்கு ஏராளமான நஷ்ட ஈடு கொடுக்கவேண்டியதாயிற்று; பிடிக்கப்பட்ட ஜெர்மானியக் குடியேற்ற நாடுகள் அதற்குத் திரும்பவும் கொடுக்கப்படவில்லை; அது உடன்படிக்கையின்படி நடந்து கொள்வதற்காக நேயத்துருப்புகள் ரைன் நதிப் பிரதேசத்தை கைக்கொண்டன. ஜெர்மனியினிடம் இருந்து பிடிங்கிக்கொண்ட தேசங்கள்

குடி அரசு நாடுகளாக்கப்பட்டன. பாலஸ்தீனம், இராக் முதலிய தேசங்கள் பிரிட்டிஷாரிடம் ஒப்புவிக்கப்பட்டன.

சர்வதேசச் சங்கம் (League of Nations):—வெர் ஸேல்ஸ் உடன்படிக்கையின்படி சர்வதேச சங்கம் ஸ்தாபிக் கப்பட்டது. உலகத்தில் யுத்தம் ஏற்படாது சமாதானம் நிலைக்கவேண்டும் என்பதுதான் அதன் நோக்கம். அதில்



படம் 34. ஐரோப்பிய மகாயுத்தத்திற்கு பின்

சேரும் தேசங்கள் சமாதான வழிகளாலேயே தங்கள் சச் சரவுகளைத் தீர்த்துக் கொள்ளவேண்டும். அந்தச் சங்கத் தின் தலைமையான இருப்பிடம் ஸ்விட்ஸர்லாந்து தேசத்தில் உள்ள ஜினிவாநகரம். சங்கக் காரிய தரிசிகள் வேலை செய் யும் கட்டிடங்கள் அங்கே இருக்கின்றன. வருஷத்திற்கு ஒருதரம் சங்கத்தின் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது. சங்கக்கவுன்ஸில் வருஷத்திற்கு மூன்று தரம் கூடுகிறது; அது பதின் மூன்று அங்கத்தினர்களைக் கொண்டது. சர்வ

தேச நீதிஸ்தலம் ஹாலந்து தேசத்தின் தலைநகரான ஹேக் பட்டணத்தில் கூடுகிறது; சர்வதேசத் தொழிலாளிகளின் சங்கம் ஜினிவாவில் கூடுகிறது. இந்தியா, சர்வ தேசச் சங்கத்திலும் தொழிலாளர் சங்கத்திலும் அங்கத்தினராக இருக்கும் உரிமையைப் பெற்றது. சர்வ தேசச் சங்கம் மிகவும் பரந்த நோக்கங்களைக் கொண்டது. பல தேசங்கள் ஒத்து உழைப்பதற்கு அது ஓர் ஆதாரமாயிற்று; அவைகளுள் உள்ள வித்தியாசங்களைச் சுலபமாகத் தீர்த்துக்கொள்ளக் கூடும். ஆனால், உலகத்தில் உள்ள எல்லா தேசங்களும் அதில் சேரவில்லை. 1933-ல் தொண்ணூற்றைந்து தேசங்கள் சேர்ந்திருந்தன. அமெரிக்க ஐக்கிய இராஜ்ஜியங்கள் ஆரம்பத்தில் இருந்து சேரவேயில்லை. ஜப்பான், ஜர்மனி, இத்தாலி முதலிய தேசங்கள் கொஞ்ச காலத்திற்குப் பின் அதிலிருந்து நீங்கிக்கொண்டன. ஆகையால் அதின் வலு மிகவும் குறைந்திருக்கிறது. முக்கியமான விஷயங்களில் சங்கம் ஒன்றும் செய்ய முடியாத நிலைமையில் இருக்கிறது. தேசங்களின் தளவாடங்களை அது குறைக்க முடியவில்லை. ஜப்பான் மஞ்சூரியாவைப் பிடித்தபொழுதும், இத்தாலி அபிஸீனியாவைக் கைக்கொண்டபொழுதும் அதால் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆயினும் சர்வ தேசச் சங்கம் பரந்த நோக்கமான உலகச் சமாதானத்தைக் கைக்கொண்டது என்பதை நாம் மனதில் வைக்கத் தக்கது.

உள் நாட்டு விஷயங்கள்: ஆஸ்க்வித் மந்திரி சபை, 1910—16:—ஆஸ்க்வித் லிபரல் கட்சியின் தலைவர். அவர் பிரதம மந்திரியாக இருக்கும்பொழுதுதான் பொது ஜன சபையின் அதிகாரம் வளர்ந்து பிரபுக்கள் சபையின் அதிகாரம் குறைந்தது. 1914-ல் கிட்ச்னர் பிரபு யுத்த மந்திரியாக நியமிக்கப்பட்டார். மந்திரி சபை யுத்த காரணமா

கச் சீர்திருத்தி அமைக்கப்பட்டது. 1915-ல் எல்லாக் கட்சியினரும் அதில் மந்திரிப் பதவியைப் பெற்றனர். கிட்ச்னர் பிரபு வட கடலில் செல்லும்பொழுது இறந்தார். லாயிட் ஜார்ஜ் யுத்த மந்திரி ஆனர். 1916 ல் இராணுவச் சேவைச் சட்டம் நிறைவேறியது. அதன்படி வயது வந்த எல்லா ஆண் மக்களும் கட்டாயமாக ராணுவத்தில் சேர்க்கப்பட்டார்கள். யுத்தம் நடத்தும் விதத்தில் திருப்தி ஏற்படவில்லை; ஆகையால் ஆஸ்க்வித் பிரதம மந்திரி வேலையிலிருந்து நீங்கிக் கொண்டார். லாயிட் ஜார்ஜ் அவர் பதவியைப் பெற்ருர்.

லாயிட் ஜார்ஜ் மந்திரி சபை:—அவர் பிரதம மந்திரி ஸ்தானம் தவிர, யுத்தத் தளவாட இலாகாவையும் அவரிடம் வைத்துக்கொண்டார். ஐக்கியக் கட்சியின் தலைவரான போனர் லா (Bonar law) அவரை ஆதரித்தார். மந்திரி சபையில் தொழில், வர்த்தகம் முதலிய விஷயங்களில் நிபுணர்களாயிருந்தவர்கள் சேர்த்துக்கொள்ளப் பட்டார்கள். புது அரசாங்கம் யுத்தத்தில் வெற்றிபெற்று உள் நாட்டு விஷயங்களைத் தீவிரமாகவும் கவனித்தது. அரசர் எல்லா விஷயங்களையும் செவ்வையாக ஊக்கமுடன் நடத்த ஆதாரமாக இருந்தார்.

நான்காம் சீர்திருத்தச் சட்டம், 1919 :—பத்தொன்பதாம் நூற்றுண்டில் எவ்வாறு பார்லிமெண்டு மூன்று சீர்திருத்தச் சட்டங்களால் சீர்திருத்தப்பட்டது என்பதைக் கவனித்தோம். நான்காம் சீர்திருத்தச் சட்டம் மேலும் பார்லிமென்டைச் சிர்திருந்தச் செய்தது. அதன்படி பார்லிமெண்டு பிரிவுகள் சமமாகச் செய்யப்பட்டன; 30 வயதுக்கு மேற்பட்ட பெண்மக்கள் ஓட் உரிமைகளைப் பெற்றனர்; அவர்களும் சில வருஷங்களுக்குப் பின்

ஆண் மக்கள் போலவே ஓட் சுதந்திரங்களை அடைந்தனர்.

கல்விச்சட்டம் :—கல்வி இலாகா மந்திரியான பிஷர் (Fisher) ஒரு கல்விச் சட்டத்தை நிறைவேற்றினுர். அது கல்வி முறையைச் சீர்திருத்தம் செய்தது. பிள்ளைகள் 16 வயது வரையில் பள்ளிக்கூடங்களில் படிக்கவேண்டும். அப்படி படிக்க முடியாமல் முந்தியே விட்டு விடுபவர்கள், அதற்கு ஏற்பட்ட தொடர் பள்ளிக்கூடங்க (Continuation Schools) ளில் குறிப்பிட்ட மணி தேசகாலம் 18 வயது வரையில் வாசிக்கவேண்டும். தொடர் பள்ளிக்கூடங்களில் ஆரம்பக் கல்வி இலவசமாகப் பயில்விக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

ஐர்லாந்து :—ஐர்லாந்திற்குச் சுய ஆட்சி கொடுக்க 1914-ல் ஒரு மசோதா பார்லிமெண்டில் கொண்டுவரப்பட்டது; அது மூன்று தரம் பொது மக்கள் சபையில் நிறைவேறியது. ஆகையால் அது பிரபுக்கள் சபையினர் சம்மதம் இல்லாமலேயே சட்டம் ஆயிற்று. அந்தச் சட்டத்திற்கு ஐர்லாந்தில் உள்ள அல்ஸ்டர் மாகாணத்தில் இருந்து வலுத்த எதிர்ப்பு ஏற்பட்டது. அப்படி எதிர்ப்பு ஏற்பட்டபொழுது திடீர் என்று மகாயுத்தம் ஆரம்பமாயிற்று. ஆகையால் அந்தச் சட்டம் யுத்தம் முடிந்த பிறகு அமுலுக்கு வரவேண்டும் என்று பார்லிமென்ட் தீர்மானம் செய்தது. 1920-ல் ஐர்லாந்துக்கு சுய இராஜ்ஜியம் கொடுக்கப்பட்டது. அதன்படி குடியேற்ற நாடுகளின் அந்தஸ்தை அது பெறலாயிற்று. ஆனுல் அல்ஸ்டர் மாகாணம் அதை விரும்பாது ஆங்கில அரசாட்சியின்கீழ் இருந்து வரலாயிற்று. கொஞ்சகாலம் ஐர்லாந்தில் சமாதானம் இருந்து, முழுச் சுதந்திரமும் பெறுவதன் பொருட்டு டி வாலரா (De Valera) என்பவர

தலைமையின்கீழ் ஒரு கிளர்ச்சி உண்டாயிற்று. அந்தக் கிளர்ச்சி நீடித்து வளரலாயிற்று.

இந்தியா:—இந்தியாவிலும் சுய ஆட்சி பெறவேண்டும் என்கிற ஆவல் உண்டாயிற்று. மகா யுத்தத்தில் இந்தியா இங்கிலாந்திற்கு அரிய உதவியைச் செய்தது; இந்திய வீரர்கள் தீவிரமாக மெஸபடோமியா, எகிப்து, பாலஸ்தீனம், பெல்ஜியம் முதலிய இடங்களில் சண்டை செய்து அழியாப் புகழைப் பெற்றார்கள். ஏராளமான தானியங்களையும் பண உதவியையும் இந்தியா செய்தது; ஆகையால் பிரிட்டனின் நன்றி அறிவுக்குப் பாத்திரமாயிற்று. 1917-ல் இந்தியாவுக்குப் படிப் படியாக பொறுப்பான அரசாங்கம் (Responsible Government) கொடுப்பதாக இங்கிலாந்து உறுதிமொழி கூறியது. தேசியக் கட்சியினர் சுய ஆட்சி உடனே கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். இந்தியா மந்திரியான மான்டேகுவும், இராஜப் பிரதிநிதியான செம்ஸ்போர்டும் சேர்ந்து ஒரு மசோதாவை வெளியிட்டார்கள். அது 1919-ல் இந்திய அரசாங்கச் சட்டமாக நிறைவேறியது. அது மத்திய அரசாங்கத்திலும் மாகாண ஆட்சியிலும் இந்தியர்களுக்கு பாத்தியதையை அதிகமாகக் கொடுத்தது. ஆனல் அது இந்தியர்களைத் திருப்தி செய்யவில்லை. இந்தியன் நாஷனல் காங்கிரஸ் அந்த சீர்திருத்தத்தில் பிரயோஜனம் இல்லை என்று கருதியது. மகாத்மா காந்தி ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பித்தார். 1929-ல் ஸர் ஜான் ஸைமன் என்ற இராஜீய நிபுணரின் தலைமையின் கீழ் ஓர் இராஜ விசாரணை சபை இந்திய அரசாங்க நிலைமையைக் கவனித்துச் சென்றது. இங்கிலாந்தில் மூன்று வட்ட மேஜை மகா நாடுகள் கூடி இந்திய விஷயங்களைப்பற்றி நீண்ட வாதங்கள் செய்தன. இரண்டாவது மகாநாட்

டிற்கு மகாத்மா காந்தி சென்று இந்தியாவிற்குப் பூர்ண சுய இராஜ்ஜியம் கொடுக்கவேண்டும் என்றுவற்புறுத்தினர். 1935-ல் இந்திய அரசாங்கச் சட்டம் பார்லிமென்டில் நிறைவேறியது. இந்த சட்டத்தின்படி இந்தியர்களுக்கு அரசாங்கத்தில் மேலும் உரிமை கொடுக்கப்பட்டது. இந்தியாவில் ஒரு சமஷ்டி ஏற்படவேண்டும் என்று அதில் காணப்பட்டிருந்தது. ஜனங்களுக்கு ஒட் உரிமை அதிகமாகக் கொடுக்கப்பட்டது. 1937-ல் இந்த சட்டம் அமுலுக்கு வந்தது.

மந்திரி சபைகள்:—பொதுத்தேர்தலில் லிபரல் கட்சியினர் தோல்வி அடைந்ததால் 1922-ல் லாயிட் ஜார்ஜ் இராஜினாமா கொடுத்தார். கன்ஸர்வேடிவ் மந்திரி சபை ஸ்தாபிக்கப்பட்டது. போனர்லா பிரதம மந்திரி ஆனர்; அவருக்குப் பிறகு ஸ்டான்லி பால்டுவின் (Stanley Baldwin) இந்தப் பதவியைப் பெற்ருர். தொழிற்கட்சியினர் பார்லிமென்டில் வலுத்திருந்தனர். ஆகையால் 1923-ல் தொழிற் கட்சியாரும் லிபரல் கட்சியினரும் சேர்ந்து ஒரு மந்திரி சபையை ஏற்படுத்தினர். 1924-ல் கன்ஸர்வேடிவ் கட்சியினர் அதிகாரத்தைப் பெற்று ஐந்து வருஷங்கள் பதவியில் இருந்தனர்.

ராம்ஸே மாக்டனுல்டு மந்திரிசபை:—1929—35 தொழிற்கட்சியினர் பொதுத் தேர்தலில் வெற்றிபெற்ருர்கள் ஆகையால் அதன் தலைவரான ராம்ஸே மாக்டனுல்டு (Ramsay Macdonald) பிரதம மந்திரி ஆனர். 1931-ல் தொழிற்கட்சிக்குள் பிரிவு ஏற்பட்டது. மாக்டனுல்டு கன்ஸர்வேடிவ் கட்சியினருடன் சேர்ந்து ஒரு தேசீய மந்திரி சபையை ஸ்தாபித்தார். அதில் அவரே பிரதம மந்திரியாக நான்கு வருஷங்கள் இருந்தார்.

படம் 35.   எட்டாம் எட்வர்ட்

ஸ்டான்லி பால்டுவின்:—அவர் கன்ஸர்வேடிவ் கட்சியின் தலைவர். 1935-ல் அவர் பிரதம மந்திரி ஆகி இரண்டு வருஷங்கள் அப்பதவியை வகித்தார்.

வெள்ளி விழா, 1935:—ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் ஆட்சியில் 25 ஆண்டுகள் ஆயின. ஆகையால் பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியம் முழுவதிலும் அவருடைய வெள்ளிவிழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. ஆனுல் அவர் நெடு நாட்கள் உயிருடன் இருக்கவில்லை. ஜனவரி 20, 1936-ல் இவர் இறந்தார். அவர் மரிப்பு சாம்ராஜ்ஜியத்தில் உள்ள குடிகள் எல்லோருக்கும் மிகுந்த துக்கத்தை உண்டுபண்ணியது.

எட்டாம் எட்வர்ட்:—1936:—ஐந்தாம் ஜார்ஜ் இறந்ததும், அவருடைய மூத்த குமாரரும் வேல்ஸ் இளவரசருமான எட்வர்ட், எட்டாம் எட்வர்ட் என்னும் பட்டத்துடன் அரசரானுர். அவர் தன் விவாக காரணமாக டிஸம்பர் 8, 1936-ல் தன் அரசுரிமை நீக்குதலைக் குறித்து **(Abdication)** ஏற்பாடு ஒன்றைச் செய்து, தன்னுடைய பட்டத்தைத் தன் தம்பியான யார்க் கோமகன் ஜார்ஜுக்கு கொடுத்தார். இப்பொழுது ஆறும் ஜார்ஜ் என்னும் பட்டத்துடன் அவர் ஆண்டுகொண்டிருக்கிறுர். இந்த நெருக்கடியான நிலைமையிலிருந்து ஸ்டான்லி பால்டுவின் இங்கிலாந்தின் அரசாட்சியைக் காப்பாற்றினுர்.

ஆறும் ஜார்ஜ் மன்னர்.—இவர் 1936-ல் அரசர் ஆனுர். இவர் கப்பற்படையில் சேவை செய்து நல்ல அனுபவம் அடையப் பெற்றவர். ஆகாயப் படையிலும் தேர்ச்சி யுள்ளவர். இவர் பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியம் முழுவதும் சென்று குடிகளின் அன்பை அடைந்துள்ளவர். அவரிடம் எங்கும் இராஜ விசுவாசம் மிகுந்திருக்கிறது.

நெவில் சேம்பர்லேயின்:—ஸ்டான்லி பால்டுவின் **1937**-ல் தன் பிரதம மந்திரி வேலைக்கு இராஜிநாமா கொடுத்தார். அவர் ஸ்தானத்தை நெவில் சேம்பர்லேயின் பெற்று இப்பொழுது பிரதம மந்திரியாக இருக்கிறார். அவர் திறமை வாய்ந்தவர். இத்தாலியின் சர்வாதிகாரி யான பெனிடோ முஸோலினியும், ஜெர்மனியின் சர்வாதி காரியான அடால்ப் ஹிட்லரும் தங்கள் இராணுவங்களைப்



படம் **35.** ஆறும் ஜார்ஜ் மன்னர்

பெருக்கிச் சிறிய தேசங்களைப் பிடித்து ஐரோப்பாவில் அமைதியைக் குறைத்து யுத்த நெருக்கடியை உண்டுபண்ணி வருகிறார்கள். சேம்பர்லெயின் நடுநிலைமை வகித்துச் சமா தானம் நிலைக்கவேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகொண்டு இருக்கிறார். அவருக்கு அமெரிக்கா ஐக்கிய இராஜ்ஜியங் களின் தலைவரான ரூஸ்வெல்ட் (Roosvelt) என்னும் இராஜீய நிபுணரின் ஒத்துழைப்பு ஏற்பட்டிருக்கிறது.

பயிற்சிகள்.

1. "மானுமி மன்னர்" என்னும் பிருதுப் பெயர் எந்த அரசருக்குக் கொடுக்கப்பட்டது? ஏன்?

2. வின்ட்ஸர் வம்சத்து அரசர்களின் மூவர் பெயர்களைக் கூறுக.

3. எவ்வாறு பிரபுக்கள் சபையின் அதிகாரம் குறைக்கப் பட்டது?

4. பார்லிமெண்டு பொதுத் தேர்தல் இப்பொழுது, எத்தனை வருஷங்களுக்கு ஒரு தரம் நடக்கிறது?

5. மகா யுத்தத்தின் பொதுக் காரணங்கள் யாவை? அதன் தற்போதைய காரணம் யாது? அந்த யுத்தத்தில் நடந்த நிலச் சண்டைகளில் இரண்டைக் கூறுக. ஜெர்மனி எவ்வாறு, ஏன் தோல்வி அடைந்தது.

6. எந்த உடன்படிக்கையால் மகா யுத்தம் முடிவு பெற்றது? அந்த உடன்படிக்கையின் நிபந்தனைகள் யாவை? மகா யுத்தத்திற்குப் பிறகுப் ஐரோப்பாவின் நிலைமையைக் காட்ட ஒரு படம் வரைக.

7. சர்வதேச சங்கம் என்பது யாது? அது எவ்வாறு ஏற்படுத்தப்பட்டது? அதன் நோக்கம் என்ன? அது கூடும் இடம் எது? அதன் நிலைமை இப்பொழுது எப்படி இருக்கிறது?

8. ஆஸ்க்வித் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்? அவர் பிரதம மந்திரியாக இருக்கும்பொழுது அவர் செய்த முக்கிய விஷயங்கள் என்ன? அவர் ஏன் தன் வேலையை இராஜீநாமா கொடுத்தார்?

9. நான்காம் சீர்திருத்தச் சட்டம் என்ன நன்மையைச் செய்தது?

10. கல்வி விஷயத்தில் என்ன சீர்திருத்தம் செய்யப் பட்டது?

11. ஐர்லாந்து எப்பொழுது, எவ்வாறு சுயராஜ்ஜிய உரிமையைப் பெற்றது?

12. லாயிட்ஜார்ஜ் இங்கிலாந்துக்குச் செய்த உதவி என்ன?

13. இந்திய அரசாட்சியில் இந்தியர்கள் உரிமை பெற ஏற்பட்ட இரண்டு சட்டங்களைக் கூறுக.

14. ராம்ஸே மாக்டனால்டு எந்தக் கட்சிக்குத் தலைவர் ?

15. ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் வெள்ளி விழா எப்பொழுது, எவ்வாறு நடைபெற்றது ?

16. எட்டாம் எட்வர்ட் ஏன் அரசுரிமையை விட்டு நீங்கினார் ? அப்பொழுது பிரதம மந்திரி யார் ? அவர் எவ்வாறு நெருக்கடி ஏற்படாமல் சகாயம் செய்தார் ?

17. நெவில் சேம்பர்லெயின் எந்தக் கட்சிக்குத் தலைவர் அவருடைய முக்கிய நோக்கம் என்ன ?

பெயர் அகராதி

அகழிச் சண்டை - Trench Warfare.
அட்டில்ட் பார்லிமெண்ட் - Addled Parliament.
அட்டெயிண்டர் முறைச் சட்டம் - Bill of Attainder.
அடக்குமுறை - Persecution.
அடிமைப் பண்ணைக்காரர் - Villeins, Serfs.
அடிமை விற்பனை - Slave trade.
அதிபதி - Lord.
அமிதவாதக் கட்சியினர் - Extremists.
அரசன் பண்ணை - Demesne.
அரசன் மத ஆதிபத்தியச் சட்டம் - Royal Supremacy (over the church).
அரசனை ஆதரிப்பவர் - Royalists.
அரசாட்சி முறைப் பத்திரம் - Instrument of Government.
அரசைத் துறத்தல் - Abdication.
அருள் யாத்திரை (கலகம்) - Pilgrimage of Grace (rising).
ஆக்ஸ்போர்ட் ஷரத்துகள் - Provisions of Oxford.
ஆதிபத்தியம் - Overlordship, Supremacy.
ஆர்மாடா (தோல்வியுறு) - Invincible Armada.
ஆரம்பக் கல்விச் சட்டம் - Elementary Education Act.
ஆலயம் (தேவ) - Church (building).
இசையாத கத்தோலிக்குகள் - Popish Recusants.
இணங்காதவர்கள் - Dissenters.
இம்பீச்மெண்ட் (என்ற குற்றச் சாட்டு முறை - Impeachment.
இயக்கங்கள் (நவீன கால) New Awakening.
இயேசுப் பாதிரிகள் - Jesuits
இரகசிய வோட் - Vote by ballot.
இரத்தக்கள அஸ்ஸைஸ் - Bloody Assize.
இரக்ஷகப் பிரபு - Lord Protector.
இராஜ விசாரணை சபை - Royal Commission.
இருவர் கூட்டு ஒப்பந்தம் - Dual Alliance.
உடன்பாடு - Treaty, Peace.
உரிமைப் பத்திரம் - Bill of Rights.

உரிமை விண்ணப்பம்-Petition of Right.
உருண்டைத் தலையர்-Roundheads.
உள்நாட்டுப் பெரும்போர் - The Great Civil War.
எச்சப் (எஞ்சிய) பார்லிமெண்ட் - The Rump.
எல்லைப் பிரபு - March Earl.
எழு வருஷச் சட்டம் - Septennial Act.
ஏழைகள் சட்டம்-Poor Law.
ஏழைப் பாதிரிகள் - Pcor Priests.
ஐக்கியச் சட்டம் - Act of Union.
ஐக்கிய ரத்து - Repeal of the Union.
ஒப்பற்ற தலைவன் - Supreme Head.
கட்சி ஆட்சி-Party Government.
கட்டிட முறை-Architecture.
கத்தோலிக்கர்கள் - Catholics.
கத்தோலிக் சதி-Popish Plot.
கத்தோலிக் மத சுதந்திரச் சட்டம் - Catholic Emancipation Act.
கப்பல்போக்குவரவுச் சட்டம்-Navigation Act.
கப்பல் வரி - Ship money.
கருணை மிகுந்த வெற்றி - 'Crowning mery' (Victory).
கல்லூரி - College.
கல்விச்சாலை குருமார்கள் - Seminary priests.
கல்வியின் புதுப் பிறப்பு - Revival of Letters, Renaissance.
கலகம் - Rebellion, revolt.
கற்பனைக் காலம் - Age of Invention.
கறுப்புக் கொள்ளை நோய் - Black Death.
காதிக் முறை - Gothic Style
காமன்ஸ் சபை - House of Commons.
கார்ட்டர் சங்கம் - The Order of the Garter.
கிளஸ்டர் சட்டம் - Statute of Gloucester.
கிளாரண்டன்சட்டங்கள்-Constitutions of Clarendon.
கீழோர்கட்சி (மதஸ்தாபனம்). Low Church.
குடிசைத் தொழில் ஏற்பாடு - Domestic System of Manufacture.
குடியேற்ற நாட்டு அந்தஸ்து - Dominion Status.
குடியேற்ற நாட்டு நடவடிக்கை - Colonial Policy.
குரு (மத) - Bishop.
குரு (பிரதான மத) - Arch-bishop.
கூட்டு மந்திரி சபை - Joint Ministry.
கூட்டுறவு (மகத்தான)-Grand Alliance.
கூலியாட்களின் சட்டம் - Statute of Labourers.
கேடயப் பணம் - Shield - money.

கோமகன் - Duke.
சக்தி சமநிலை - Balance of Power.
சங்கம் - Guild, League.
சட்ட வரம்புக்குட்பட்ட - Constitutional.
சம காலஸ்தர்கள் - Contemporaries.
சம அந்தஸ்து (வட்ட மேஜை) மகாநாடு - Round Table Conference.
சமுதாய நிலங்கள் - Common lands.
சர்வகலாசாலை - University.
சர்வதேச சங்கம் - League of Nations.
சன்னியாசி - Abbot.
சாம்ராஜ்ஜியம் - Empire.
சாம்ராஜ்ஜிய மகாநாடு - Imperial Conference.
சாஸன உறுதி - Confirmation of the Charter.
சிலுவைப் போர் - Crusade.
சீர்திருத்தம் - Reform.
சீர்திருத்த இயக்கம் - Reform movement.
சுதந்திரப் பத்திரம் - Charter
சுய ஆட்சி - Home Rule.
சுயாதீன அறிக்கை - Declaration of Independence.
சுயாதீனப் போர் - War of Independence.
சுயேச்சைக் கட்சியினர் - Independents.
சூன்யக்காரி - Witch.
சோதனைச் சட்டம் - Test Act.
டன் வரி - Tunnage.
டேனர் வரி - Danegeld.
தடையில்லா வியாபாரம் - Free Trade.
தலைவரி - Poll-tax.
தரிசு - Fallow.
தன்னல மறுப்புச் சட்டம் - Self-denying Ordinance.
தனிமதக் கூட்டம் (கட்சி) - Separatists.
தானியச் சட்டம் - Corn Law
தானியச் சட்ட எதிர்ப்புச் சங்கம் - Anti-corn Law League.
திருத்த மசோதா - Amending Bill.
தூதன் - Ambassador.
தெய்வீகப் பெண் - (Joan) Saint.
தென்கடல் குமிழி - South Sea Bubble.
தேக ரக்ஷண சட்டம் - Habeas Corpus Act.
தேசச் சாபம் - Interdict.
தேசிய இன்ஷியூரன்ஸ் - National Insurance.
தேசிய ஒப்பந்தம் - National Covenant.
தேசியக் கடன் - National Debt.
தொழில் புரட்சி - Industrial Revolution.
தொழிற் சங்கங்கள் - Craft guilds.
தொழிற்சாலை ஏற்பாடு - Factory system. (Manufacture).

நகரபரிபாலன சபை - Municipal Corporation.
நகர பரிபாலனத் தலைவர் - Mayor.
நக்ஷத்திர நீதி மன்றம் - Star Chamber.
நாஸ்திகர் - Heretics.
நியாய சிங்கம் - Lion of Righteousness.
நியாயமில்லா இராஜ்ஜியம் - Absolute Monarchy.
நில அடைப்பு ஏற்பாடு - Enclosure Movement.
நிலச் சங்கம் - Land league.
நிலச் சட்டம் - Land Act.
நிலமான்யம் - Fief. [sm.
நிலமான்யஏற்பாடு-Feudali-
நிர்வாக மந்திரி சபை (காபினெட்) - Cabinet.
நிறுத்திவைக்கும் சட்டம் - Suspending Act.
நீக்கும் அதிகாரம் - Suspending power.
நீதிபதிகள் (சுற்றுப்பிரயாண)- Justices on Circuit.
நீதிமன்றம் (உயர்தர மத) - Court of High Commission.
நீதிமன்றம் (தனித்த) - Special Court.
நீதிமன்றம் (நக்ஷத்திர) - Srar Chamber Court.
நீதிமன்றம் (வடதிசை) - Council of the North.
நீதிமன்றம் (வேல்ஸ்) - Council of Wales
நீதிமன்றம் (ஜமீன்) - Manorial Court.
நீதிமன்றம் (ஸ்தல) - Local Court.
நூற்றுண்டுப் போர் - (Hundred Years' War.
நேசக் கட்சி - Allies.
நைட் (சிறிய நிலக்காரர்) - Knight.
பக்தியான கூட்டுறவும் ஒப்பந்தமும் - Solemn League and Covenant.
பண்ணை - Farm.
பண்ணை (அரசன்)-Demesne.
பண்ணைக்காரர் - Vassals.
,, (அடிமை) - Villeins, serfs.
பட்டம் பெறல் - Accession.
பாதுகாப்பாளர் - Protectionists.
பாதுகாப்புக் கொள்கைக் கட்சியினர் - Protectionists.
பாதுகாப்புச் சட்டம் - Act of Security.
பாபிங்டன் சதி - Babington Conspiracy.
பார்லிமெண்ட் (அட்டில்ட்) - Addled Parliament.
பார்லிமெண்ட் (குறுகிய) - - Short.
பார்லிமெண்ட் (சுயேச்சையுள்ள) - Free.
பார்லிமெண்ட் (பைத்தியக்கார) - Mad.
பார்லிமெண்ட் (நல்ல) - Good.
பார்லிமெண்ட் (நீடித்த) - Long.
பார்லிமெண்ட் (மாதிரி) - Model.

பிரதம மந்திரி - Prime Minister.
பிரபுக்கள் சபை - House of Lords.
பிரஜா உரிமைகளைப்பற்றிப் பிரசுரம் - Declaration of Rights.
பிரார்த்தனைப் புத்தகம் - Prayer Book.
புகழ்பெற்ற புரட்சி-Glorious Revolution.
புதுப் பிறப்பு - Renaissance.
புரட்சி - Great change, revolution.
புரட்டன் (மூத்த, இளைய) - Pretender (Old, Young).
'பூர்த்தி முறை' - 'Thorough.'
பொக்கிஷதாரி - Treasurer.
பொது நில ஏற்பாடு - Open field system.
பொன்னுடை ஸ்தலம் - Field of the cloth of Gold.
போப்பின் ஆணையை மறுத்தவர்கள் - Protestants.
போலி வார்சுக்காரன் - Pretender.
பௌண்ட் வரி - Poundage.
ப்ராடஸ்டன்ட் ஒத்துழையாதார் - Protestant Dissenters.
மகத்தான கண்டனம் - The Grand Remonstrance.
மகா ஸாஸனம் - Great Charter.
மடம் - Abbey.
மத்திய அரசாங்கம் - Central Government.
மத்திய காலம் - Mediaeval Age.
மதக் காவலன் - Defender of the Faith.
மத குருவின் பீடம் - Bishopric.
மதச் சாபம் - Interdict.
மதச்சின்னங்களை அளிக்கும் முறை - Investiture.
மதச் சீர் திருத்தம் - Reformation.
மதத் தலைவர் - Head of Church, Clergy.
மதத் தியாகிகள் - Martyrs
மத ஸ்தாபனம் - Church (Institution).
மத ஸ்தாபன தலைமை சட்டம் - Act of Supremacy.
மறு ஸ்தாபனம் - Restoration.
மதஸ்தாபன திரவியம் விளைதல் (ஐர்லாந்தில்) - Disendowment and Disestabishment of the Irish Church.
மந்திராலோசனை சபை - The Great Council.
மத சுதந்திர அறிக்கை - Declartion of Indulgence.
மத சுதந்திரச் சட்டம் - Toleration Act.
மான்யக்காரர் - Tenants.
முப்பத்தொன்பது தத்துவங்கள் - Thirty nine Articles.
முப்பதாண்டுப் போர் - Thirty Years' War.
முத்திரைக் காகிதச் சட்டம் - Stamp Act.

மூவர் கூட்டு ஒப்பந்தம் - Triple Alliance.
மேலோர் கட்சி (மதஸ்தாபனம்) - High Church.
யாத்திரிகத் தந்தையார் - Pilgrim Fathers.
ராணுவச் சட்டம் - Assize of Arms.
ராணுவச் சட்ட அமுல் - Martial Law rule.
ரை ஹவுஸ் சதி - Rye House Plot.
ரோஜாப் பூக்களின் யுத்தங்கள் Wars of the Roses.
லாலர்ட் இயக்கம் - Lollard movement.
வமிசம் - House.
வல்லரசு - Despotism.
வரவு செலவு திட்டம் - Budget.
வார்சுப் போர் - War of succession.
வார்சு நிர்ணயக் சட்டம் - Act of Settlement.
வியாபார சங்கங்கள் - Trade guilds.
விட்பி மகா சஸப - Synod of Whitby.
வில்லையாட்கள் சட்டம் - Statute of Livery.
விலக்கல் மசோதா - Exclusion Bill.
விலக்கும் அதிகாரம் - Dispensing power.
விவசாயப் புரட்சி - Agricultural Revolution.
விவாக ரத்து - Divorce.
வெடி மருந்துச் சதி - Gunpowder Plot.
வேர், கிளை அறுக்கும் சட்டம் - Root and Branch Bill.
ஜமீன்தார்கள் - Vassals.
ஜனநாயக ஆட்சி - Commonwealth Rule.

Printed at the B. N. Press, Mount Road, Madras.